510

பிறை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - FEB 1958
MADRAS



பிப்ரவரி

1958

விலை

40

காசு

பிறை

முதலாண்டு 'பைண்டு'த் தொகுதி

888 பக்கங்கள்

மூன்று விசேஷ மலர்கள்

கருத்து நிறைந்த கட்டுரைகள், இனிய பல சிறு கதைகள், வரலாற்று ஓவியங்கள், அறிவூட்டும் நூற்றுக் கணக்கான துணுக்குகள், பொன் மொழிகள், உயரிய நல்ல கவிதைகள், "தித்திக்கும் திருமறை"த் தொடரில் 12 கட்டுரைகள், இத்தனையும் நிறைந்த அற்புதமான, பயனுள்ள தொகுதி.

விலை ரூ. 5-25 தான்

தபால் செலவு ரூ. 1-25 தனி

விவரங்களுக்கு :

மானேஜர், **பிறை**

(தபால் பெட்டி எண் 1688)

192, அங்கப்ப நாயக்கன் தெரு,

சென்னை-1.

பிறை

ஆசிரியர்
ஏ. எம். மீரான்

பிப்ரவரி 1958
ரஜப் 1377

பிறை 2 | கதிர் 2

சென்னை-600 008
198313

பொருளடக்கம் பக்கம்

அன்புக் குரல் 2
வாழ்க ஊழியர்கள் ! — தலையங்கம் 3
பிறைக் கதிர் 4
தித்திக்கும் திருமறை
— எம். அப்துல் வஹ்ஹாப் எம்.ஏ., பி.டி.எச். 5
நாரே தக்பீர் ! அல்லாஹு அக்பர் !! 10
இறைவனும் இஸ்லாமும்
— எம். எஸ். அப்துல் மஜீது பி. ஏ. 17
தாய்மை — (சிறுகதை) வி. நூர்முஹம்மது 23
மார்க்க மேதை மறைந்தார் — அல்ஹாஜ்
மௌலவீ அப்துஸ்ஸமத் நத்வீ 32
வேண்டாத வாழ்த்து ! — 'ஹகீம்' 33
ஹலீமா பேசினாள் ! — (சிறுகதை) 'ஜமீலா' 36
ஆராய்ந்து பார் கிளியே !
— எம். ஸி. எம். ஸுபைர் 44
நமக்கு வடக்கே... — வலங்கைமான்
அப்துல்லாஹ் 48
பெண்ணின் பெருமை — வி. எம். நயினார்
முஹம்மது 53
தெய்வீக நகரங்களும் தெளிவான
சாட்சியங்களும்
— மதுரை அல்ஹாஜ் எஸ். ஸையத் இஸ்மாயீல் 54
வாழவைக்கும் வளமார் கவிஞர்
— எம். அப்துல் வஹ்ஹாப் எம்.ஏ. பி.டி.எச். 58
கேள்வி-பதில் 68

'பிறை'யில் வரும் கதைகளிலுள்ள பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே.

உள் நாடு விலை, 40 காசு :: வெளி நாடு 50 காசு (8 அணா)

அன்புக் குரல்

அன்புள்ள ஆசிரியருக்கு,

அஸ்ஸலாமு அலைக்கும்,

''பிறை'' பெறப்பெற்றேன். கடந்த ஆண்டின், பன்னிரு மலர்களின் அட்டைப் படங்களைச் சித்திரித்துக் காட்டும் இவ்வாண்டு மலரின் அட்டைப்படம், கடந்த ஆண்டில் இஸ்லாமிய கலையுலகிற்கு ''பிறை'' தந்த பேறை எடுத்துக் காட்டுகிறது. ஓராண்டு என்பதை உணர்த்தும் பான்மையில் இளம் ''பிறை''யின் நடுவே வீற்றிருக்கும்—மழலை மொழி குழவியின் சாயல் ''பிறை'' இனி செயப்புகும் சீரிய சேவையை எண்பிக்கிறது.

எஞ்ஞான்றும் தெவிட்டாத ''தித்திக்கும் திருமறை'' ஆண்டு மலரையே தித்திக்க வைத்துவிட்டதெனல் சாலும். நகைப்பித்துப் பிடித்த பெண் உலகிற்கு, நல்லதொரு பாடத்தைக் கற்றுக் கொடுக்கும் முறையிலே அமையப்பெற்ற அன்பர் அப்துஸ்ஸத்தாரின் ''முள் வேலி'' ஆண்டு மலரையே அணி செய்கிறது. ''இறை தோழர் இப்ராஹீம்'' என்ற தலைப்புக் கொண்ட ''இப்னு ஜமாலுத்தீனின்'' கவிதை நயம் இப்ராஹீம் (அலை) அவர்கள் மார்க்கமாம் இஸ்லாத்தின் அங்கங்களாகிய எமக்கு இஸ்லாத்தின் தத்துவார்த்தத்தைச் சுருங்கச் சொல்வதாயிருக்கிறது.

இடையிடையே தொகுக்கப் பெற்ற சின்னஞ் சிறு கருத்துக்கள், மணி மொழிகள், முன்னணியும் பின்னணியும் என்ற புதிய முறைகள், மலரின் மணம் போல பிறையின் ஒளியாகத் திகழ்கின்றன.

S. A. ஸுலைமான்
சிங்கை (6)

மலர் மிக நேர்த்தியாயிருந்தது. அட்டைப் படம் பிரமாதம். பாராட்டுகிறேன்.

வி. கிருஷ்ணஸ்வாமி சர்மா
ஜி. டி. ஏ ஏ. ஸி. ஏ.,
கௌரவ ஆலோசகர்,
''விப்கோ'', சென்னை-17

கருத்துக்கினிய கதைகளும், சிந்திக்க வைக்கும் சிறந்த கட்டுரைகளும் நிறைந்திருக்கும் 'பிறை' பாராட்டுக்குரியது.

'எம். ஏ' போன்ற சிறந்த கட்டுரையாளர்களும், 'மகுதூம்', 'ஹஸன்', 'ஜமீலா' போன்ற சிறுகதை எழுத்தாளர்களும் எழுதும் போது தங்கள் பத்திரிகை சிறப்பாக அமையாமல் பின் எவ்வாறிருக்க முடியும்?

வருங்காலத்திலும் தங்கள் முயற்சி தொடர்ந்து வெற்றியடைய எல்லாம் வல்ல இறைவன் அருள வேண்டுமென்பதே என் பிரார்த்தனை.

ரஸவாதி
சென்னை–8.

''பிறை' ஆண்டு மலர் அழகொளி வீசும் முகப்புடன் எடையில் கனமும், இலக்கிய மணமும் நிறைந்து சிறப்பாக விளங்குகிறது.

எம். ஏ. அக்பர்
தூத்துக்குடி.

'பிறை' மலரை வாங்கிப் படித்தவுடன் மீண்டும் அடுத்த மலர் எப்போது நம் கைக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்த்து ஏங்கும் நிலைக்கு 'பிறை' பிரகாசிக்கின்றது.

வீரா சமுத்திரம்
எஸ். எஸ். அப்துல்லா,
இரங்கூன்.

வாழ்க ஊழியர்கள்!

திருச்சியிலே நடந்த தமிழ் நாடு முஸ்லிம் லீக் ஊழியர்கள் மாநாடு சரித்திரத்திலே இடம் பெற்று விட்டது.

பண பலமின்றி, விளம்பர வசதிகள் இல்லாமல், பத்திரிகைகள் பலம் போதிய அளவு இல்லாமல் முப்பத்திஐயாயிரவர் கொண்ட ஒரு மாபெரும் மாநாட்டைக் கூட்டி அதை அமைதியாக நடத்துவது என்பது ஓர் அரிய சாதனை, அற்புத சாதனை! இந்த அற்புதத்தை நடத்திக் காண்பித்த எல்லா ஊழியர்களுக்கும், குறிப்பாக திருச்சி ஊழியர்களுக்கும் நாம் வாழ்த்துக் கூறுகிறோம். மாநாட்டுக்குச் சென்ற நம் நிருபர் பிறிதோர் இடத்தில் குறிப்பிட்டிருப்பது போல, "எட்டுப் பேர் கொண்ட ஊர்வலத்திற்கு, பதினாறு போலீஸ் காரர் செல்லவேண்டியிருக்கும்" இக்காலத்தில், முப்பத்திஐயாயிரம் முஸ்லிம்கள் கலந்துகொண்ட ஒரு மாபெரும் ஊர்வலம் போலீஸ் பந்தோபஸ்தே வேண்டாம் என்று கூறிவிட்டு அமைதியுடனும் கட்டுப்பாடுடனும் திருச்சி நகரை வலம் வந்த அந்தத் திருக்கூட்டம்—முஸ்லிம்களின் தூய்மைக்கும், நேர்மைக்கும் ஓர் எடுத்துக்காட்டு. தன் நேரிய சமயத்துக்கும், தன் சீரிய சமுதாயத்துக்கும், தன் தாய்த்திரு நாட்டுக்கும் அந்தத் திருக்கூட்டம் என்றும் உறுதுணையாக விருக்கும் என்பதை உள்ளத்தல் கள்ளமிலார், நெஞ்சத்தில் வஞ்சமிலார் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டுகிறோம்.

தீர்மானங்கள் பல நிறைவேற்றி முஸ்லிம் லீகின் வருங்காலச் செயல் திட்டத்துக்கு முன்னோடியாகப் பணியாற்றிய திருச்சி மாநாட்டைப் பாராட்டுகிறோம். திருச்சியிலே பொங்கி யெழுந்த ஆர்வம் புதுப் புனலாக இன்னும் பல மாவட்டங்களுக்குப் பாய்ந்து வரும். தண்புனலெனப் பரந்து வரும் இப்புத்தார்வம், பாயும் இடமெல்லாம் அன்பு வளம் செழிக்கச் செய்யுமாக! திருச்சியிலே ஏற்றிய இத்தீபம், அறிவொளி பரப்பி செஞ்சுடர்போல பிரகாசிக்க வேண்டும் என்று இறைவனை இறைஞ்சுகிறோம்.

அரசியல் விழிப்போடு, பொருள் துறையிலே முஸ்லிம்களின் வாழ்வு முன்னேற்றம் பெறவும், அடுத்து வரும் மாநாடுகள் திட்டம் தீட்ட வேண்டுகிறோம். அரசியல் துறையிலே ஆதிக்கம் பெறாமலே இன்று சக்தி வாய்ந்த சிறு பான்மை சமூகமாக விளங்கும் பார்ஸிகளும், கத்தோலிக்கர்களும் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் பெற வேண்டியது எத்துணை முக்கியம் என்பதற்குச் சான்றாக விளங்குகிறார்கள். அரசியல் துறையிலே நமக்குள்ள உரிய பங்கைப் பெறுவதற்காக கட்டுப்பாடாக, தியாக புத்தியோடு உழைக்க முன் வரும் நம் முஸ்லிம் சோதரர்களுக்கு நாம் செய்யும் பிரதியுபகாரம் அவர்களுடைய பொருளாதார வாழ்வை வளப்படுத்த திட்டம் தீட்டி, அதைச் செயல்படுத்த வேண்டியதுதான். அதற்குரிய நெஞ்சுரத்தையும், மனோதிடத்தையும், இறைவன் தந்தருள்வானாக!

மாநாடு வெற்றிகரமாக நடந்தேறுவதற்கு தூய நோக்கும், தூர நோக்கும் கொண்டு உழைத்த அனைவரையும் நாம் மீண்டும் ஒரு முறை வாழ்த்துகிறோம்!

பிறைக் கதிர்

திரண்டது தீன் குலம்

தீனுல் இஸ்லாத்தின் திரண்டதொரு பெருங் கூட்டம் இரண்டு நாட்கள் திருச்சியிலே கூடிற்று. ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்குப் பின்னர், இஸ்லாமிய சமுதாயத்தின் தனிப்பெருந் தலைவர்கள் அப்பேரவையிலேயே குழுமியிருந்தனர். காயிதே மில்லத் ஜனுப் முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிப், முஸ்லிம்களின் கல்வித் துறையிலே அரும் பணியாற்றிவரும் ஜனுப் அப்துல் மஜீது ஸாஹிப், தூய இஸ்லாமியப் பிரச்சாரம் தொடர்ந்து செய்து வரும் மூ. ந. அப்துர் ரஹ்மான் ஸாஹிப்; எந்த சந்தர்ப்பத்திலும் நிலை குலையாது நின்று சமுதாயத் தொண்டாற்றும் ஜனுப் அப்துல் பாஸித், சொல்லின் திறத்தாலே சோர்வடைந்த உள்ளங்களைத் தட்டியெழுப்பும் நாவுக்கரசர் திருப்பூர் முஹைய்யதீன், இம் மகாநாட்டுக்காகவே மலாயாவிலிருந்து தாயகம் வந்திருக்கும் சொல்லின் செல்வர் ஜனுப் எம். எம். பீர்முஹம்மது ஆகிய பெரும்பணியாளர்கள் ஊழியர் குழாத்துக்கு உறுதுணையாக வந்திருந்தனர். முஸ்லிம் முரசு, மணி விளக்கு. பிறை ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கு பெற்றிருந்தனர்.

முப்பத்தி ஐயாயிரவர் திரண்டெழுந்த அத்திருக் கூட்டம் எவ்வளவோ அமைதியாக நடந்தது. இம்மாபெரும் கூட்டத்தைப் பற்றி சென்னை தினசரிகள் சரிவரச் செய்திகளே தரவில்லை. மாஜி பிரமுகர்கள் சிலர் முஸ்லிம்களின் பேரால் 1956ல் சென்னையில் கூடியபோது, இப்பத்திரிகைகள் பக்கம்பக்கமாக எழுதின. அதே பத்திரிகைகள் இம்மாநாட்டுச் செய்திகளை ஏன் இருட்டடிப்புச் செய்ய வேண்டும் என்பது அதிசயமாக இருக்கிறது.

மாநாட்டிலே பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. காஷ்மீர் சம்பந்தமாக இந்திய சர்க்கார் பின்பற்றும் கொள்கையை மாநாடு முழுமனதாக ஆதரித்தது. இலங்கையிலிருந்து இந்தியா திரும்பி வருவோர் துயர் போக்க அரசாங்கம் ஆவன செய்யவேண்டும் என்று மாநாடு வற்புறுத்திற்று. கைத்தறி நெசவாளர் நலம் வளர அரசாங்கம் செய்யவேண்டியதையும் மாநாடு எடுத்துக் காண்பித்தது.

தமிழ் நாடு முஸ்லிம்கள் புத்துணர்வு பெற்று, நற்பணியாற்றத் துவங்கும் இவ்வேளையிலே, தமிழ் நாடு முஸ்லிம் லீக் நிர்வாகக் குழுவுக்கு தேர்வுகள் நடத்தி, அது நல்ல முறையில் செயல்படுவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீகைக் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் நாட்டு நகரங்களுள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தனிச் சிறப்புண்டு. வளங்கொழிக்கும் ஒரு தமிழ்ப் பகுதிக்கு தஞ்சை தலைநகராக விளங்குகிறது; தமிழகத்தின் பண்டையப் பெருமைக்கு மதுரை தலைநகராக அமைந்துள்ளது; தென்னகத்தின் தொழில் துறைக்கு கோவை தலைநகராகத் திகழ்கிறது; தமிழ் நாட்டின் அரசியல் தலைநகராக சென்னை அமைந்துள்ளது. தென்னகத்தின் இயற்கைத் தலைநகரான திருச்சி இஸ்லாமியப் புத்துணர்வுக்குப் புனிதமான தலைநகராக வரலாற்றிலே இடம் பெற்றுவிட்டது. திருச்சிக்கு இந்த நற்பெயரை வாங்கிக் கொடுத்த மறுமலர்ச்சி ஜனுப் ஏ. எம். யூஸுப், திருச்சி 'பாஷா', ஜனுப் நஸீருத்தீன் ஆகியோர் நம் பாராட்டுக்கு உரியவர்கள். வாழ்க அவர் தம் நற்பணி!

தித்திக்கும் திருமறை

14. அறிவைப் பெருக்கும் அருள் வேதம்

எம். அப்துல் வஹ்ஹாப் எம்.ஏ., பி.டி.எச்.,

ஆழ் பொருள் நிறைந்துள்ள அல்லாஹ்வின் அருள் வேதத்திலே "அன்பு" எத்தகைய இடம் பெற்றிருக்கிறது என்பதை ஓரளவு ஆய்ந்த பின்னர், அறிவை வளர்க்கும் அற நூலாக அது எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதை ஆராயத் துவங்கினோம். பகுத்தறிவு (புலனறிவு), மெய்யறிவு; தன்னறிவு போன்ற அறிவுத் துறையின் பல கட்டங்களையும் திருமறையில் சந்திக்கிறோம். இவற்றில் முதல் கட்டம்-ஆரம்பப்பாடம் தான் பகுத்தறிவு.

பகுத்தறிவின் துணைகொண்டு மனிதன் பேருண்மைகளைக் கண்டு பிடித்து வி. முடியாது. பெரும்பாலும் கண்ணால் காண்பது, காதால் கேட்பது, கரத்தால் தீண்டுவது— அதாவது கண், செவி, மெய் போன்ற புலன் உறுப்புக்களைக் கொண்டு அறிந்து ஒரு முடிவுக்கு வருவதே பகுத்தறிவு. இந்த உறுப்புக்கள் எப்பொழுதும் நமக்கு உண்மையான தகவல்களையே தருகின்றன என்று சொல்வதற்கில்லை. ஒரு சான்று: கோடை காலத்தில் தெளிந்த நீரையுடைய ஆழமான ஓர் ஆற்றைப் பார்த்தால் ஆற்றின் அடிதளத்திலே கிடக்கும் மணல், நீர்மட்டத்திலிருந்து ஒரு சில அடி தூரத்திலே இருப்பது போலவே தோற்றமளிக்கும். ஆனால் அதற்குள்ளே இறங்கினால் தத்தளிக்க வேண்டியதுதான்; தலைக்கு மேல் தண்ணீர் வந்து விடும்.

•அதாவது நீர்மட்டத்துக்கும், ஆற்றின் அடி மணலுக்கும் இடையேயுள்ள தூரத்தை நம் கண் தப்புக் கணக்குப் போட்டு விட்டது. இந்த விஷயத்தில் கண் எல்லோரையும் ஏமாற்றி விடும். இதைச்சிறிது விரிவாகப் பார்ப்போம்.

கண் தன்னந் தனியாகச் செயலாற்றும் இயல்பு இல்லாத ஓர் உறுப்பு; சூரிய, சந்திர வெளிச்சமோ, விளக்கு போன்ற ஒளிக்கருவிகளின் பிரகாசமோ இல்லாது, இந்த "ஊனக் கண்ணால்" எந்தப் பொருளையும் பார்க்க முடியாது. பளபளக்கும் கண்ணையுடையவனையும், கூறிய பார்வையுடையவனையும் கூட காரிருளிலே விட்டு விட்டால் அவன் துழாவத்தான் செய்வான். கண்கள் திறந்திருந்தும், அக்காரிருளில் அவனால் ஏன் எப்பொருளையும் காணமுடிய

வில்லை? காரணம் விண்ணொளியோ, விளக்கொளியோ இல்லாது போனால் அவன் கண் பயனற்றது. அதாவது விண்ணொளியான சூரிய, சந்திர, நட்சத்திர ஒளியோ, அல்லது மனிதன் படைக்கும் ஒளிக் கருவிகளின் பிரகாசமோ இல்லாது அவன் கண்—அவன் எவ்வளவு விரும்பினாலும், பகுத்தறிவைக் கொண்டு கண்ணை எப்படி இயக்கினாலும்-பார்க்கும் சக்தி பெறாது.

ஆற்றங் கரைக்கு வந்த நம் பகுத்தறிவுள்ள மனிதன், ஆற்றின் தளத்தை தன் கண்ணால்-சூரிய வெளிச்சத்தின் துணை கொண்டு பார்க்கிறான். ஆனால் அந்த சூரிய வெளிச்சம் கூட குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் தான் இவன் கண்ணுடன் நேராக ஒத்துழைக்கும். ஒளிக் கிரணங்கள் சாதாரணமாகக் காற்றிலே நேராகச் செல்லும் ஆனால் தண்ணீரில் அதன் போக்கு மாறி விடுகிறது. நீரில் மோதும் ஒளிக் கிரணங்கள், தண்ணீரை ஊடுருவிச் செல்ல முயலும்போது நேர்பாதையில் செல்லாமல், திரிந்து மாறிவிடுகிறது. இவ்வாறு திரிவதன் மூலம், ஆற்றின் அடித்தளத்தை சிறிது உயர்த்திக் காண்பித்து விடுகிறது. ஒளியின் இந்தச் செயலுக்கு (REFRACTION OF LIGHT) என்று பௌதிக சாத்திரிகள் கூறுவர்.

இதனைப் புரிந்து கொள்வதில் ஒரு சிறிது சிரமம் இருந்தாலும், வீட்டிலேயே நாம் ஒரு பரீட்சை செய்வதின் மூலம் இந்த உண்மையைச் செவ்வனே அறிய முடியும். ஒரு கண்ணாடி ''டம்ளரை'' எடுத்துக் கொண்டு அதில் பாதி வரை தண்ணீரால் நிரப்புங்கள். பிறகு நீண்ட ஒரு பென்ஸிலை அதில் சாய்வாக நிறுத்தி தண்ணீருக்கு மேலே பென்ஸில் எப்படித் தெரிகிறது, தண்ணீருக்குள்ளே இருக்கும் பகுதி எப்படித் தெரிகிறது என்று பாருங்கள். பௌதிக சாத்திரத்திலே ''ஒளி'' (Light) என்னும் பிரிவை கல்லூரிகளில் போதிக்கும் பொழுது இந்தப் பரீட்சைகளைச் செய்து காண்பித்து, கண்ணால் நேராகப் பார்த்தாலுங் கூட, பொருள்களின் உண்மைத் தோற்றங்களைச் சில சமயங்களில் சரியாக அறிந்து கொள்ள முடியாது என்று சொல்லித் தருவர் விஞ்ஞானப் பேராசிரியர்கள்.

இந்த விஞ்ஞானக் கூற்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதிலே சிக்கல் ஏற்பட்டாலும், இதன் அடிப்படைத் தத்துவத்தை எவரும் மறுக்க முடியாது. ''கண்ணால் காண்பதெல்லாம் உண்மை'' என்று நம்புவதற்கில்லை என்பது தான் அந்த அடிப்படைத் தத்துவம். 'கானல் நீர்' என்று கேள்விப்பட்டிருக்கிறோம். கோடை வெயில் கொளுத்திக் கொண்டிருக்கும்போது, பரந்த மணற் பரப்பிலே அகப்பட்டுக் கொண்ட மனிதன் நாவரண்டு, நீர் கிடைக்காதா என்று ஏங்குகிறான். தொலைவிலே நீர்த்தேக்கம் எதுவோ இருப்பது போல் அவனுக்குத் தோன்றுகிறது. பாலையிலோ சோலையோ அது என்ற ஐயப்பாடுடன் ஓடுகிறான்; வரண்ட நாவுக்கு வளமாக நீர் கிடைக்கப் போகிறது என்று ஓடுகிறான். ஆனால் அந்த இடத்தை அணுகியதும் அங்கும் இரக்கமற்ற, ஈரமற்ற மணல் வெளிதான் விரிந்து கிடக்கிறது என்பதைக் கண்டு வெம்புகிறான்: வெதும்புகிறான்: வெந்துயரில் வீழ்கின்றான். தொலைவிலே நீர்த் தேக்கம் இருப்பது போல் அவன் கண்களுக்குத்தோன்றுகிறதே அது தான் ''கானல் நீர்.'' இத்தோற்றமும் ஒளிக் கிரணங்களின் சேட்டை தான்; மனிதனை அவனுடைய கண்ணே ஏமாற்றும் காட்சி இது. ஆகவே தான் கண்ணால் காண்பது கொண்டு மட்டும் ஒருவன் எப்பொழுதும், எதைப்பற்றியும் உண்மையைக் கண்டுபிடித்து விட முடியாது என்று கூறுகிறோம்.

கண் மனிதனின் புலன்களில் ஒன்று. பகுத்தறியும் மனிதனுக்கு ஐம்புலன்கள்—பஞ்சேந்திரியங்கள்-துணை செய்கின்றன. ''கண்டு

கேட்டு, உண்டு, உயிர்த்து உற்று அறியும், ஐம்புலனும்—கண்ணால் கண்டும், செவியால் கேட்டும், நாவால் உண்டும், மூக்கால் மோந்தும், மெய்யால் தீண்டியும் செயலாற்றும் ஐம்புலன்களும் மனிதனுக்குக் குற்றேவல் புரிகின்றன. இவற்றால், தான் பெறும் அறிவு தவிர, வேறு அறிவே அண்டத்தில் இல்லை என்று முடிவு கட்டும்பொழுதுதான் மனிதன் தவறி விடுகிறான். இந்தப் பகுத்தறிவோடு மனிதன் மெய்யறிவும், தன்னறிவும் பெறவேண்டும் என்று போதிக்கிறது அறிவைப் பெருக்கும் அருள் மறை. இத்தகைய அறிவுகளைப் பெறுவதற்கு கல்வி அவசியம் என்பதையும் இஸ்லாம் வற்புறுத்துகிறது.

"எண்ணென்ப ஏனை எழுதென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

வாழும் மக்களுக்கெல்லாம் எண்ணும், எழுத்தும் கண்ணெனத் தகும் என்று கூறப் புகுந்த வள்ளுவன்,

"தொட்டனைத் தூறும் மணற் கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு

மணலில் உள்ள கேணியில் தோண்டத் தோண்ட நீர் ஊறிக் கொண்டே யிருக்கும்; அது போல் அறிவும் கற்கக், கற்க வளமடைந்து கொண்டே யிருக்கும் என்று தெளிவு படுத்துகிறான். "களரனையர் கல்லாதவர்,"—ஒன்றும் விளையாத களர் நிலத்துக்கு ஒப்பானவர் கல்லாதவர்; ஆராயும் திறமில்லா கல்லாத மாந்தர் "மண்மாண் புனை பாவையற்று" மண்ணால் சிறப்பாகச் செய்யப்பட்ட பதுமைக்கு ஒப்பானவர் என்று தன் கண்டனத்தைத் தெரிவித்துக் கொண்டு அத்தகைய மக்களைக் கற்றாரோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, அவர்கள் மிருகங்களுக்குச் சமமானவரேயாகும்.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்
கற்றாரோடு ஏனையவர்"

என்று கூறி முடித்து விடுகிறான்.

"கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க் குற்ற துணை"—மனிதனின் சிற்றுயிர்க்கு கல்வியை விட சிறந்த துணையே கிடையாது என்றது நீதி நெறி விளக்கம்

'நுண்ணுணர்வு இன்மை வறுமை அஃதுடைமை.
பண்ணம் பணைத்த பெருஞ் செல்வம்......"

—கூறிய நல்லறிவு பெறாததுதான் வறுமை; அத்தகைய நல்லறிவைப் பெற்றிருத்தலே வளம் மிகுந்த செல்வமாகும் என்று நுண்ணறிவை வாழ்க்கையின் கருவூலமாக்கினார் நாலடியார்.

இவ்வாறு ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு மொழியிலும் சீர் கல்வியின் சிறப்பை வலியுறுத்தும் நற்கருத்துகள் ஏடுகளிலே இடம் பெற்றுள்ளன. ஆனால் கல்வியை முஸ்லிமின் கடமையாக்கிய இஸ்லாம், அறிவுத் தேட்டத்துக்கு ஒரு தனிப் பெருமையையே தந்து விட்டது எனலாம். "இறைவா என் கல்வியறிவைப் பெருக்கு," என்று மனிதனின் பிரார்த்தனையையே ஓர் அறிவுத் தேட்டமாக்கியது இஸ்லாமியத் திருமறை.

அறிவைப் பெருக்கு, அதை வளப்படுத்து, எழுதுகோலால் உனக்குக் கற்றுக் கொடுத்தானே அந்த இறைவனைப் போற்று என்று வலியுறுத்தும் திருக் குர்ஆன் 'பேனாவின்' பெயரால் "அல் கலம்" என்று ஓர் அத்தியாயத்தையே அருள்கிறது

மனிதன் விரும்பியதெல்லாம் அவனுக்குக் கிடைத்து விடுமா?...மனிதனுக்கு அவன் முயன்று, உழைக்கும் அளவேயன்றி (வெற்றி) வேறில்லை...

[53:24,39] என்று மனித முயற்சிக்கு உரிய மதிப்புக் கொடுக்கும் திருக் குர்ஆன், இந்த முயற்சிகள் நற்பயன் தர மனிதன் நல்லறிவும் பெற்றிருக்கவேண்டும் என்று உறுதிப்படுத்துகின்றது. மனிதன் முயற்சி செய்து ஒரு தொழிலைத் துவங்குகிறான்; அத் தொழிலைப் பற்றிப் போதிய அறிவு அவன்

பெற்றிருக்கவேண்டும்; அத் தொழில் நுணுக்கங்களைப் பற்றித் தெளிவாக அறிந்திருக்கவேண்டும் என்பது இஸ்லாமியக் கொள்கை. இது ஒரு "வாஜிபான" கடமை என்று கூறுகிறார்கள் அறிவுலகப் பேரொளி இமாம் கஸ்ஸாலீ (ரஹ்).

அதோடு அறியாமை மனிதனுக்குப் பெரும் தீங்கு விளைவிக்கக் கூடியது; ஒரு மனிதனுக்குப் பிறர் செய்யும் கொடுமையைவிட அவன் தனக்குத்தானே கொடுமை இழைத்துக் கொள்ள முடியும்—அவன் அறியாமல் உழலும்போது—என்று புதுப் புதுக் கருத்துக்களை, புரட்சிகரமான கருத்துக்களை உலகுக்கு அருள்கிறது அல்லாஹ்வின் திருவேதம்.

> "'இம் மாபெரும் பொறுப்பை சுமந்துகொள்வீர்களா?' என்று நாம் வானங்கள், பூமி, மலை முதலியவையை வினவினோம். அவை அதனைப்பற்றிப் பயந்து, அதைச் சுமந்துகொள்ளாது விலகிவிட்டன. ஆனால் அத்தகைய பொறுப்பை மனிதன் சுமந்துகொண்டான். (எனினும்) அவன் அறியாமையால் தனக்குத்தானே தீங்கிழைத்துக் கொள்கிறான். (34:72)

என்று திருமறை ஓரிடத்திலே குறிப்பிடுகிறது.

மனிதன் அறியாமையில் உழல்வதால் (ஜஹாலா) எவ்வாறு தனக்குத் தீங்கிழைத்துக்கொள்கிறான் என்பதை திருமறையின் விரிவுரையாளர்கள் பலர் விளக்கியிருக்கின்றனர். பேரறிஞர் ஷாஹ் வலியுல்லாஹ் ஸாஹிப் தஹ்லவீ தங்களுடைய, "ஹுஜ்ஜதுல்லாஹில் பாலிகா," என்னும் பேரிலக்கியத்தில், இதைப்பற்றிச் சுவையான தொரு விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். அடுத்த இதழில் அதை ஆராய்வோம்.

(தொடரும்)

*

மலரும் மணமும்

பொங்கி வரும் புத்தார்வம், அங்கமெலாம் மெய் சிலிர்க்கச் செய்யும் வேளையில் தூய உணர்வும்; நன்னோக்கும் கொண்டு செயலாற்ற துணையிருக்கும் தூயவனுக்கே புகழனைத்தும்.

வாசகர்களிடையே ஆண்டு மலர் பெற்ற வரவேற்பு குறித்து நாம் பெருமகிழ்வடைகிறோம். "இதுவரை தமிழகத்தில் எங்களுக்குக் கிடைத்திராத பேறு இது; வாழட்டும் உங்கள் பணி," என்று வாழ்த்திய உள்ளங்கள் எத்தனை! எத்தனை! அனைவருக்கும் எங்கள் நன்றி.

அனைத்துலகப் புகழ் பெற்றிருக்கும் அல்லாமா முஹம்மது இக்பால் (ரஹ்) 1876 ம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் பிறந்தார்கள். அவர்களின் நினைவாக இவ்விதழ் அப்பெருமகனாரின் திருவுருவை முகப்பில் தாங்கி வெளிவருகிறது. இக்பாலைப் பற்றிய நீண்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையும் இச்சிறப்பு மலரில் இடம் பெற்றிருக்கிறது.

திருச்சியில் நடந்த த. நா. மு. லீ. ஊழியர்களின் மாநாட்டைப் பற்றிய சுவையான கட்டுரையும், குறிப்புக்களும் நம் நிருபர் குழாத்தினரால் தரப்பட்டிருக்கின்றன; அங்கு நிறைவேறிய தீர்மானங்களும், இதர செய்திகளும் அடுத்த இதழில் வருகின்றன. இன்ஷா அல்லாஹ் "ரோஜா முள்" தொடர்ச்சி அடுத்த இதழில் இடம் பெறுகிறது:

பயனுள்ள, அழகுள்ள சிறப்பு மலர்கள் வெளியிட்டு தனக்கென்று ஒரு தனி இடம் பெற்றிருக்கும் "பிறை", பெரும் மலர் ஒன்று தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கிறது. விபரங்களை அடுத்த இதழில் பாருங்கள்.

பூரண திருப்தி அடைந்தீர்களா?

சங்கீத விழாக்கள், பொருட்காட்சிகள், பல்வேறு மகாநாடுகள் எல்லாம் பார்க்க சென்னைக்கு வரும் வெளியூர் அன்பர்கள் அவற்றைக் கண்டு கேட்டு மட்டும் முழு திருப்தி அடைய முடியாது. புஹாரியின் வித விதமான உணவு, தின்பண்டங்களையும் உண்டு களித்தால் தான் உங்களின் சென்னை வருகை சிறப்புறும்; பூர்த்தியடையும்.

ஏன்?

முந்திய ஆண்டுகளில் நீங்கள் சாப்பிட்டிராத சத்தும் ருசியும் நிறைந்த புதுமாதிரியான வட இந்திய, தென்னிந்திய, ஐரோப்பிய விசேஷ உணவுகள் புஹாரியில் தயாராகின்றன.

அனைவரும் வந்து புகாரி உணவு வகைகளை உண்டு மகிழுங்கள்.

உணவு சாலைகளில் சிறந்தது புஹாரி

BUHARI HOTELS

MOUNT ROAD, CHINA BAZAAR, MARINA BEACH

நாரே தக்பீர்! அல்லாஹு அக்பர்!!

காவிரியிலே புதுப் புனல்—அலை அலையாக எழும்பி வந்து புது வெள்ளம் என்ற அறிகுறிக்கு 'நுங்கு நுரை முத்திரை' பதித்துக் கரையைக் கலங்கடிக்கும் காட்சி; எதிரே மலையே நின்றாலும் 'தூள் செய்து விடுவேன்' என்று ஆவேசத்துடன் பீரிட்டெழும் சூளுரை; அதோடு 'உலகத்தைச் செழிக்கச் செய்யப் போகிறேன்' என்ற பெருமிதத்தில் துள்ளிக் குதித்தோடும் அந்த வெள்ளப் பெருக்கின் காட்சி—இத்தனையும் பொலிந்து அந்தக் காவிரிப் புதுப் பெண் புனலாடுகிறாள்...அந்த மகிழ்ச்சியிலே, தன்னால் உலகம் செழிக்கும் என்ற திருப்தியும் தன்னலமற்ற பொது நோக்கும் நிறைந்திருக்கிறது.

'காவிரி மட்டும்தானா மகிழ்ச்சியடைகிறது; இதோ நானிருக்கிறேன். என்னிடத்தில் கூடத்தான் புதுவெள்ளம் பாய்கிறது; வெள்ளத்தின் பெருக்கால் நான் பயந்து விடவில்லை. மன நிறைவு கொள்ளுகிறேன். விசுவாசிகள் பல்லாயிரவரின் வெள்ளமல்லவா என்னை அழகு படுத்துகிறது' என்று திருச்சி மாநகரம் நெஞ்சுயர்த்திக் கூறுகிறது.

ஆமாம்! திருச்சி நகர் பெருமைப் படத்தக்கதொரு பொன்னான வாய்ப்பைக் கொடுத்து விட்டார்கள் அவ்வூர் விசுவாசிகளின் ஊழியர்கள். பதினொரு ஆண்டுகளாக உறங்கிக் கிடந்த உற்சாகத்தை அவர்கள் தட்டி யெழுப்பி விட்டார்கள். ஜனவரி 11, 12 ஆகிய இரு நாட்களிலும் இந்நாட்டு முஸ்லிம்களின் வாழ்வுப் பிரச்னைகளை அவர்களே யோசித்துப் பார்க்க ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்து விட்டார்கள்.

ஊர்வலம் ஆரம்பமாகிறது 11-ம் தேதி மாலை. ஆனால் அன்று காலையில் நிகழ்ந்தவற்றை முதலில் கூறி விடவேண்டுமல்லவா? தேவர் ஹாலில் பிரதிநிதிகளின் மாநாடு. இடமோ சிறிது. முப்பத்தையாயிரம் பேருக்கு அந்த இடம் பற்றவே பற்றாது என்று தெரிந்து விட்டது. எனவே, கட்டணம் ஒரு ரூபாயாக வைத்தால் கூட்டம் குறையும் என்று ஒரு வழி செய்தார்கள். பாவம், திருச்சி ஊழியர்கள் இந்த ஒரே ஒரு முயற்சியில் மட்டும் தோற்று விட்டார்கள். 'தேவர் ஹாலில் இனி ஆட்கள் அமர இடமில்லை; டிக்கட்டும் கிடையாது!' என்று தங்கள் தோல்வியை ஒப்புக் கொண்டு விட்டார்கள்!

பிரதிநிதிகள் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆயிரக் கணக்கான முஸ்லிம்லீக் ஊழியர்கள், என்ன பேசினார்கள் என்பதை அறிந்து கொள்ள ஆவலோடு ஹாலுக்கு வெளியே நின்றிருந்தார்கள். ஜனாப் ஏ.எம். யூசுப் அவர்கள் வரவேற்றுப் பேசினார்கள்.

பகல் உணவுக்கு முன்பாகவே மாநாடு முடிந்தது. அதோடு இனிய விருந்து படைக்கும் செய்தியையும் சொன்னார்கள். அதைத் தொடர்ந்து

திருச்சி முஸ்லிம் லீக் ஊழியர் மாநாட்டுச் செய்தியைச் சுருக்கி அழகிய முறையில் தருகிறார் நமது நிருபர்.

சொல்லின் செல்வர் எம். எம். பீர்முஹம்மது, வடகரை ஜனுப் எம்.எம். பக்கர் ஆகியோரின் தேனுன, சத்துள்ள சொற்பொழிவுகள், காயிதே மில்லத்தின் அருமையான தொரு கொள்கை விளக்கம் இவற்றுடன் பிரதிநிதிகள் மகாநாட்டை முடித்துக் கொண்டுவிருந்து உண்ணப் புறப்பட்டோம். ஒருவர் மேல் ஒருவர் விழுந்து உணவுக்கு விரைவார்களே அந்தக் காட்சி அங்கில்லை. உணவிலும் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளும் அதிசயத்தைக் கண்டபோது, ஊழியர்கள் போலீஸாரிடம் தீர்க்கதரிசனமாக வேதான் பந்தோபஸ்து தேவையில்லையென்று கூறியிருக்கிறார்கள் என்று எண்ணிக்கொண்டேன்.

ஊழியர் தலைவர் கூறியது உண்மையிலேயே அதிர்ச்சியைக் கொடுத்து விட்டது. கவலையையும் உண்டாக்கி விட்டது. அவர்களின் துணிச்சல் நியாயமானதுதானு என்ற ஐயமும் எழுந்து விட்டது.

மாலை 4 மணிக்கு ஆரம்பமாகப் போகும் ஊர்வலத்துக்குப் போலீஸாரிடம் அனுமதி கேட்கச் சென்றவர்கள், ஊர்வலத்துக்குப் போலீஸ் பந்தோபஸ்து தேவையில்லையென்று துணிச்சலாகக் கூறிவிட்டார்கள். இதைக் கேட்டதும் அதிர்ச்சியடையாமல் இருக்க முடியுமா? என்ன தைரியத்தில் இவர்கள் போலீஸ் உதவி தேவையில்லை யென்று கூறினுர்கள்; ஊர்வலத்தின்போது ஏதேனும் அசம்பாவிதமாக நடந்து விடக்கூடாதே என்று மனம் வேண்டிக்கொண்டது.

காவுக்கரசு திருப்பூர் மொய்தீன்,

இடையே ஒரு சிறு சந்தேகம். சாதாரண ஒரு ஹோட்டலிலுள்ள தொழிலாளர்கள் எட்டுப்பேர் சேர்ந்து ஸ்டிரைக் செய்கிருர்கள். ஊர்வலமும் புறப்படுகிருர்கள். ஆனல், அவர்களுடன் பதினறு போலீஸ்காரர்கள் செல்லுகிருர்கள்! அதற்கே அப்படியென்ருல் முப்பத்தையாயிரம் பேர் கொண்ட ஒரு மாபெரும் ஊர்வலத்துக்கு முப்பத்தைந்து போலீஸ்காரர்களாவது பந்தோபஸ்துக்கு வரவேண்டாமா? ஏனே இதைப்பற்றிய சஞ்சலம் சிறிதளவு மனத்தில் கிடந்து உறுத்திக் கொண்டது.



மாநாட்டுத் தலைவர்
ஜனாப் டி. அப்துல்பாஸித் ஸாஹிப்

திருச்சி நகர் கண்டிராத அம்மாபெரும் ஊர்வலம் ஆரம்பமாகியது. திறந்த காரில், காயிதே மில்லத், இந்தியமுஸ்லிம் பெருமக்களின் ஒப்பற்ற தலைவர், முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிபவர்கள் ஏறினார்கள். 'அல்லாஹு அக்பர்' என்ற தக்பீர் முழக்கம் வான்முகட்டையே தொட்டுவிட்டதோ என்றம் ஐய ஏற்பட்டுவிட்டது. 'முஸ்லிம் லீக்! ஜிந்தபாத்!!' என்ற கோஷம், நினைவில் பசுமையை ஏற்படுத்திவிட்டது. பதினொரு ஆண்டுகளாக உள்ளத்தில் உறைந்துகிடந்த உறுதி வார்த்தை வடிவில் வெளியே பீறிட்டுக்கொண்டு வந்தது. இந்திய முஸ்லிம்களை சகோதர உணர்ச்சியெனும் விலங்கில் பிணைக்கும் அந்த வார்த்தைகளை ஒவ்வொருவரும் வாய்விட்டு உரக்க உச்சரித்தார்கள்; உணர்ச்சி பொங்கக் கூறினர்; ஏககாலத்தில் கூறினர்.

மடை திறந்தது. வெள்ளம் பொங்கிப் பாய்ந்தது. வீதியெங்கும் மலர் மயம்; ஜன சமுத்திரம் அலைமோதிக் கொண்டு வந்தது. பின்னால் திரும்பினேன். உண்மையில் காவிரிப் புனலிடம் திருச்சி நகர் சவால்விட்டது சரியானதென்றே பட்டது. ஒரு சிறிய ஆசை தோன்றியது, உள்ளத்தில். இந்த ஊர்வலத்தின் முடிவைப் பார்த்துவிடவேண்டுமென்ற துடிப்பில், பக்கத்தில் சிறிய தெருவுக்குள் புகுந்து குறுக்குப் பாதையாகப் பின்னால் சென்றேன். இரண்டு பர்லாங்குகள் சென்று மீண்டும் ஊர்வலம் சென்றுகொண்டிருக்கும் ரஸ்தாவுக்கு வந்தேன்; ஒன்றுமே புரியவில்லை. நான் முதலில் பார்த்த அதே கூட்டம் தானே?...... இருக்க முடியாது. ஏனென்றால் காயிதே மில்லத் அங்கில்லை. அப்படியானால், ஊர்வலத்தின் முடிவுதான் எங்கே? கண்ணுக் கெட்டிய தூரம் மனித வெள்ளம்; முஸ்லிம் லீக் என்னும் சமுத்திரத்தில் சங்கமமான ஊழியர்களின் புதுவெள்ளம். முடிவைக் காணாவிட்டாலும் பழைய இடத்திற்காவது சென்றுவிடலாமென்று வந்த பாதைவழியாகவே ஓட்டமும் நடையுமாகச் சென்றேன். என்ன ஏமாற்றம்...மலைத்துப்போய் நின்றுவிட்டேன். இடையே கூட்டத்தில் கூர்ந்து அங்குமிங்கும் பார்த்தேன். மருந்துக்குக்கூட ஒரு போலீஸ்காரர் இல்லை!

கரு கருவென்று இருட்டிக் கொண்டு வந்தது. மாநாட்டுப் பந்தலை வந்தடைந்தது மாபெரும் ஊர்வலம்; நீண்ட நெடும் ஊர்வலம் கட்டுப்பாடான, கண்ணியமான ஊர்வலம்.

பந்தலுக்குள்ளேயும் முஸ்லிம்களுக்கே உரித்தான கட்டுப்பாடும் கண்ணியமும் பரிணமித்தது. பந்தலுக்கு வெளியேயும் வெள்ளம் அலைமோதியது.



சொல்லின் செல்வர்
எம். எம். பீர் முஹம்மது ஸாஹிப்

மாலை ஏழரை மணிக்கு, "கிராஅத்" துக்குப்பின் மாநாடு ஆரம்பமாகியது. காயிதேமில்லத் அவர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசினார்கள். காயிதேமில்லத் அவர்களின் அந்தப்பேச்சு கொள்கை விளக்கமாக மட்டும் அமையவில்லை; ஒவ்வொரு முஸ்லிமின் கடமைகளை விவரிக்கும் பேருரையாகவும் விளங்கிற்று.

'முஸ்லிம்லீக் மடிந்து விட்டது' என்று கூறுபவர்கள் அதை ஒரு தாரகமந்திரமாகவே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரே விஷயத்தைப் பலமுறை சொன்னால் அது நிலைத்துவிடும் என்ற பொதுவான நம்பிக்கை, முஸ்லிம் லீக் செத்து விட்டது என்று சொல்லுவதில் நிரூபணமாகிறதா என்று பரீட்சை செய்து பார்க்கிறார்கள். ஆனால், நம்மைவிட முஸ்லிம் லீகின் சக்தி அவர்களுக்குத் தான் அதிகமாகத் தெரியும் என்று கூறிய காயிதேமில்லத் அவர்கள் ஓர் உதாரணத்தையும் கூறினார்கள்.

பார்லிமெண்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு, ரயிலில் சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். தலைவர் அவர்கள் பிரயாணம் செய்த முதல் வகுப்புப் பெட்டியில், வேறு இரு கம்யூனிஸ்ட் பாராளுமன்ற உறுப்பினர்களும் இருந்தார்கள். கேரளத்தில் தங்களுக்கு உயிர்கொடுக்க வேண்டியவர்கள் லீக்கர்கள் என்பதை உணர்ந்த அவர்கள், "நீங்கள் ஒரு வார்த்தை சொன்னால் கேரளத்தில் காங்கிரஸ் இருக்குமிடம் தெரியாமல் செய்துவிடலாம்" என்று கர்வத்தோடு கூறினார்கள், காயிதேமில்லத்திடம். இதைக் கேட்டு தலைவரவர்கள் சிரிக்கத்தான் செய்தார்கள். கூட்டு சர்க்கார் அமைக்கலாம் என்று ஆசை காட்டிய அவர்களுடைய மையலில் வேறெவரும் நிச்சயம் சிக்கி யிருப்பார். ஆயிற்று...கம்யூனிஸ்ட் மெம்பர்கள் தங்கள் ஊர் வந்ததும் இறங்கிக்கொண்டனர். இரண்டு காங்கிரஸ்காரர்கள் அவர்கள் இடத்தில் வந்து அமர்ந்தனர். ரயில் புறப்பட்டது. காங்கிரஸ்காரர்கள் தலைவரவர்களிடம் மிக மெதுவாகப் பேச்சைப் போட்டார்கள். 'நீங்கள் 'உம்' மென்று ஆள் காட்டி விரலை அசைத்தால் போதும். இந்தக் கம்யூனிஸ்டுகளை தூள் தூளாக்கிவிடலாம். பின்னர் நாம் கூட்டு சர்க்கார் அமைப்பதில் தடையேதும் இருக்காது' என்று கூறினார்கள். நாலரைக்கோடி முஸ்லிம்களின் வருங்காலத்துக்குத் தாமே பொறுப்பு என்பதை உணர்ந்த அந்த ஒப்பற்ற தலைவர், இப்போதும் அசைந்துகொடுக்கவில்லை.

போதுமா உதாரணம்! முஸ்லிம் லீக் இருக்கிறது என்பதுமட்டும் அல்ல. அது மாபெரிய ஸ்தாபனம். அதை முதுகெலும்பாக உபயோகித்து சர்க்காரே அமைக்கலாமென்று ஆளும் கட்சி திட்டம் திட்டக்கூடிய அளவுக்கு இந்தியாவில் அது ஒரு பெரிய ஆட்சி. ஒன்

றிரண்டல்ல நாலரைக் கோடி முஸ்லிம்களின் தனிப் பெரும் கட்சி. இவ்வளவிருந்தும் இவர்கள் ஏன் முஸ்லிம் லீகை எதிர்க்கிறார்கள்? இதற்கு காயிதே மில்லத் அவர்களே பதிலளிக்கிறார்கள்.

'அவர்களிடம் சத்தியமில்லை. ஹிட்லரின் ஆட்சியில் நிலவிய ஒரு நிலையை அவர்கள் இந்தியாவிலும் ஏற்படுத்தப் பார்க்கிறார்கள்''

லீகை எதிர்ப்பவர்கள் எப்பிடிப் பட்டவர்கள் என்று தலைவரவர்களே வர்ணித்திருப்பது சரியானது தானே?

திருச்சி மாநாட்டைக் குறிப்பிட்டுக் கூறிய காயிதே மில்லத் அவர்கள், ''கூட்டம் கூடிக் கலைவதற்காக நாம் இங்கு வரவில்லை. நாம் இங்கே குழுமியிருக்கிறோமென்றால் அது நம்மைப்பற்றி, நம் வருங்காலத்தைப் பற்றி விவாதிக்க, முடிவு காண வந்திருக்கிறோம். ஆகவே, இந்த மாநாடு சரித்திரத்தில் நிலைத்து நிற்கும்'' என்றார்கள்.

''மக்கள் மாநாட்டில் கஷ்டங்களையும் பொருட்படுத்தாது பங்கெடுத்துக் கொள்ளுவது எதற்காக? வேலையில்லை என்பதற்காக அல்ல. பொழுது போக்கவும் அல்ல. மனதிலே மோதிக் கொண்டிருந்த தூய உணர்வுதான். இவை யெல்லாம் 'முஸ்லிம்லீக்' என்னும் பதத்துக்குள் அமைந்திருக்கிறது. 'முஸ்லிம் லீக்! ஜிந்தாபாத்!!' என்ற முழக்கத்தை வாழச் செய்வான் ஆண்டவன்.

''முஸ்லிம் லீக் செத்துவிட்டதென்று கூறுகிறார்களே; ஏன் என்று சிந்திக்கிறீர்கள்? அவர்கள் கங்கணங்கட்டிக் கொண்டு அவ்வாறு சொல்லுகிறார்கள். சத்தியம், நேர்மை யெல்லாவற்றையும் அரசியலுக்குக் கொண்டுவரக்கூடாது என்று அவர்கள் கூறுகிறார்கள். அரசியல் எதிரிகள் என்றால் ஒரு சமுதாயத்தாரையே குறிப்பிடுவதல்ல. முஸ்லிம் லீக் மைனரிடிகளின் கட்சி. ஜனநாயக நாடான இந்தியாவில் அதற்கு இடமுண்டு. ஆனால் மேலே குறிப்பிட்டிருக்கும் அரசியல் வாதிகளில் உச்சிமனிதனிலிருந்து சாதாரண நபர்வரை, நம்மை 'வகுப்புவாதிகள்' என்று கூறுகிறார்களே; அதற்கு விளக்கம் சொல்லுவதில்லை. காரணமும் சொல்லுவதில்லை. இவர்களிடம் நாம் இப்போது மட்டும் இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. சர்தார் படேல் நம்மை 'வகுப்பு வாதிகள்' என்று கூறினாரே அன்றிலிருந்து நாம் கேட்கும் கேள்விக்கு-'எது வகுப்புவாதம்?' என்ற கேள்விக்கு—இதுவரை பதிலில்லை. பண்டித ஜவாஹிர்லால் நெஹ்ரு அவர்களின் கருத்துப்படி ''வகுப்புவாத மென்றால், ஒரு சமூகத்தவர் பிரிதொரு சமூகத்தவரை அடக்கியாள முயற்சிப்பது தான்'' வகுப்பு வாதம்.

''நாம் யாருடைய உரிமையையும் பறித்துக் கொள்ள முயன்றோமா?—இல்லை. நாம் கேட்பது சம அந்தஸ்து. நாம் இந்நாட்டுப் பிரஜைகள். நாட்டின் க்ஷேம லாபத்தில் அக்கரை செலுத்துவது நம்கடமை.

''ஒரு முஸ்லிம் உண்மை முஸ்லிமாயிருந்தால் அவனுடைய வார்த்தையை நம்பலாம். தன்னை முஸ்லிம் என்று காட்டிக் கொள்ள வெட்கப்படுபவனை நம்பமுடியாது.

''இந்நாட்டுக்குத் தீங்கு செய்ய எவர் வந்தாலும் அவர்களை எதிர்ப்பதில் முதல் அணியில் நிற்பவர்கள் முஸ்லிம்கள் தான். கவர்னர் வேலைகளை எதிர்கட்சியிலுள்ள முஸ்லிம்கள் செய்கிறார்கள். குறைகளை எடுத்துச்சொல்ல ஒரு கட்சி வேண்டாமா? பெரும்பான்மை வகுப்பாரின் கட்சிகளில், அவர்கள்தான் மெஜாரிடி. அங்கே மைனரிடியாரின் குரல் எடுபடாது. நூறு பேருக்குப் பத்துப் பேர். இப்படியில்லாமல் முஸ்லிம்களின் உண்மையான குரல் ஒலிக்க வேண்டும். ஒருமுறை இல்லாவிட்டாலும் இன்னொரு முறை நம் குறை மெஜாரிடி வகுப்பாருக்குக் கேட்கும். கூட்டுத் தொகுதி முறையில் மைனரிடிகளுக்கு நியாயம் கிடைக்கிறதா? முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு சட்டசபையில் இடங் கிடைக்கவில்லை.

அரசாங்க வேலைகளுக்கு முஸ்லிம்கள் மிக மிகக் குறைவாகச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஏன் என்று கேட்டால், "பொதுவான பரீட்சை வைக்கிறோம். தேறியவர்களைத்தானே சேர்க்க முடியும்?" என்கிறார்கள். சமீபகாலம்வரை இல்லாத ஒரு மாற்றம் திடீரென்று எப்படி ஏற்பட்டது? இப்போது மட்டும் முஸ்லிம்கள் பரீட்சையில் தேறாததன் காரணம் என்ன? இதையெல்லாம் விளக்க ஒருமித்த குரல் வேண்டும். அக்குரலை யெழுப்ப முஸ்லிம் லீக்தான் சரியான ஸ்தாபனம். நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தின் முக்கியத்தை வற்புறுத்திச் சொன்னது முஸ்லிம் லீக்தான். மது விலக்கை முழுமூச்சாக ஆதரித்தது முஸ்லிம் லீக்தான். அன்று ராஜாஜியின் மந்திரி சபை பிழைத்ததே இந்த முஸ்லிம் லீக் கட்சியால்தான்!

"இருந்தும் முஸ்லீம்லீகை நசுக்கி விடுவதாக சட்டப் பாதுகாவலர்கள் கூறுகிறார்கள். நேஹ்ருவே பல முறை லீகை நசுக்கி விடுவதாகக் கூறியிருக்கிறார். மக்களாட்சி முறையில் ஒரு கட்சியை நசுக்க முற்படுவது அடிப்படை அரசியல் உரிமையை மறுப்பதாகும்.

"முஸ்லிம் சமுதாயம் கஷ்டம் அறிந்தது. தியாகம் கண்டது. பயமுறுத்தலுக்கும் அநியாயத்துக்கும் முஸ்லிம் லீக் எப்போதும் தலை சாய்க்காது. இப்போது நேஹ்ருவின் 'நான்சென்ஸ் அகராதி' விரிவடைந்து வருகிறது. பார்லிமெண்டில் அவர்களுக்குள்ளாகவே 'பன்டாஸ்டிக் நான்சென்ஸ்' (Fantatstic Nonsense) என்று பேசிக் கொள்ளுகிறார்கள்! (கர கோஷம்) அப்படிப்பட்ட 'பன்டாஸ்டிக் நான்சென்ஸ்' களுக்கு முஸ்லிம் சமூகம் அடிபணியாது. நாம் சிறுபான்மையினர் தான். ஆனால் நாம் கேட்பது நியாயம். நிச்சயமாக அடைந்தே தீருவோம். வாழுவோம் அல்லது வீழுவோம். இது நாயகமவர்கள் வகுத்துக் காட்டியது."

அருமையான இந்தக் கொள்கை விளக்கத்தில் மெய்மறந்து கடமையை நிறைவேற்ற, தலைவரின் கட்டளைக்கு அடிபணியத் துடிதுடித்திருந்தனர் அத்தனை பேரும். அறவுரைகள் பல கூறினார்கள், காயிதே மில்லத். 'முஸ்லிம் லீக்கை விட்டுவிடு பதவி தருகிறோம்' என்றவர்களை ஏளனமாகச் சிரித்தே தலை குனிய வைத்த கதையை விளக்கினார்கள். 'இஸ்லாத்தை விட்டுவிடு பொன்னும், பொருளும் தருகிறோம்' என்ற குறைஷியர்களிடம், செங்கதிரையும் தண்மதியையுமே நீங்கள் கொடுத்தாலும் எம் கொள்கை விடமாட்டோம் என்றுரைத்த நாயகத்தை அடியொற்றி நடப்பவர்கள் நாம் என்பதை மிக அழகாகக் கூறினார்கள்.

முதல்நாள் மகாநாடு முடிந்தது.

மறுநாள் பனிரெண்டாம் தேதி..

முன்தினம் காலையில் கொடியேற்றுவதாயிருந்தது. கேரள இராஜ்ய முஸ்லிம் லீக் தலைவர் அல்ஹாஜ் ஹலரத் ஸையித் அப்துர் ரஹ்மான் பாபக்கி தங்ஙள் அவர்களின் வருகை தாமதித்ததால் மறுநாள் அன்றுகாலையே கொடியேற்றப்பட்டது.

12-ம் தேதி மாநாட்டில் கனம் தங்ஙளவர்களின் சொற்பொழிவு மிகப் பிரமாதமாக அமைந்திருந்தது. அவர்களின் மலையாளப் பேச்சை சுவை குன்றாது அருமையாகத் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தார்கள் திருப்பூர் மொய்தீன். இதையடுத்து தலைவர் பிரேரணை நடைபெற்றது. சேலம் நகரைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் தொண்டரை மாநாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுத்த திருச்சி ஊழியர்களை நிச்சயம் பாராட்ட வேண்டும். சகோதரர் ஜனாப் அப்துல்பாஸித் அவர்கள் சிறந்த சமூக ஊழியர்; தொண்டருக்குத் தொண்டராக அரும்பெரும் பணிகளைச் செய்திருக்கிறார்கள். அடக்கமான தோற்றம். ஆனால் கம்பீரமானவர். அஞ்சா நெஞ்சம் படைத்தவர். இப்படிப்பட்ட ஒரு நல்லமனிதரை தலைவராகப் பிரே

ரித்தனர். ஆதரித்து அநேகர் பேசினர். சகோதரர் எம். எம். பீர் முஹம்மது அவர்களும், நாவுக்கரசு மொய்தீன் அவர்களும் தலைவரை ஆதரித்து முத்து முத்தாகப் பேசினார்கள்.

இதையடுத்து, அவைத்தலைவரவர்களின் முன்னுரை. மிக அழகான அடக்கமானபேச்சு. இன்றைய முஸ்லிம்களின் பிரச்னைகளையும், அரசியல் நெருக்கடிகளையும் பற்றி விரிவாக விளக்கமாகப் பேசினார்கள்.

அடுத்து 'கேரள சிங்கம்பேசப் போகிறது' என்றதை கேட்டதும் எல்லோரும்திடுக்கிட்டுவிட்டார்கள். ஆனால் உண்மையிலேயே மேடையிலே ஒருமுஸ்லிம் சிங்கம் வந்து நின்றது. கம்பீரமான தோற்றம். புன்மனி...முறுவல்தவழும் வதனம். சிவந்த நல்ல இதயம் படைத்த அந்தச்சிங்கம் கர்ஜிக்க ஆரம்பித்தது. மூச்சு விட்டால் கேட்கக் கூடிய அளவுக்கு அமைதி நிலவியிருந்தது ஜன சமுத்திரத்தில். கூட்டத்தை நோக்கி தன் ஆள் காட்டி விரலை நீட்டி, "வகுப்புவாதிகளே!" என்று கோபமாகக் கூறியது சிங்கம். அசந்து விட்டேன். ஆனால் நொடியில் விழிப்பு ஏற்படச் செய்து விட்டது. "ஆமாம். காங்கிரஸ்காரர்களின் அகராதிப்படி நீங்களெல்லாம், ஏன்; நான் கூடத்தான் வகுப்பு வாதிகள். வகுப்புத் துவேஷம் புரிபவர்களெல்லாம் விசுவாசிகள். உண்மையில் காங்கிரஸ்காரர்கள் அகராதி தயாரித்தால் இப்படித்தான் அர்த்தம் செய்வார்கள்" என்றது சிங்கம்.

"என்னைச் 'சிம்ஹம்' என்று கூறினீர்கள். உண்மையில் நான் சிங்கமல்ல. எங்கள் நாட்டில் சிம்ஹங்களும் சிம்ஹிணிகளும் ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கின்றனர். இன்று கேரளத்தில் முஸ்லீம் லீக் தழைத்துச் செழித்து வளர்ந்து நாங்களெல்லாம் அதில் பணியாற்றுகிறோம் என்றால் அதற்கு கேரளத்து வீரமுஸ்லிம் பெண்மணிகள் தான் காரணம். தமிழ் நாட்டு முஸ்லிம் வீராங்கனைகளிடம் அந்தத்திறமையில்லாமலில்லை. அவர்கள் கூடிய விரைவில் தங்கள் பணியை ஆரம்பிப்பார்கள்." என்றது சிங்கம். இந்தச் சிங்கம் யார் தெரியுமா? கேரள கம்யூனிஸ்ட் அரசாங்கத்தில் சட்டசபை முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர். மலையாள முஸ்லிம் தினசரியான 'சந்திரிகா'வின் ஆசிரியர் முஹம்மது கோயா.

இதன் பின்னர் பதினேழு தீர்மானங்கள் ஜனாப் கா. த. மீ. அஹ்மது இப்ராஹீம் அவர்களால் பிரேரிபிக்கப்பட்டன. அவற்றை ஜனாப் ஆ. கா. அ. அப்துஸ் ஸமது தமிழ்ப் படுத்தியதும் தீர்மானங்களை ஆதரித்துப் பலர் பேசினர். மாநாட்டுக்கென்று சிங்கப்பூரிலிருந்து வந்திருந்த "மலாயா நண்பன்" ஸ்தாபகர் ஜனாப் கே. எம். முஹ்யித்தீன் பார்-அட்-லா அவர்கள் ஆங்கிலத்தில் அருமையானதொரு சொற்பொழிவாற்றினார்கள். இதன் பின்னர் தீர்மானத்தை ஆதரித்துப் பேசியவர்களில் முக்கியமானவர்கள் ஜனாப் எம். எம். பீர்முஹம்மது (இவர்களும் மகாநாட்டில் பங்கெடுத்துக்கொள்வதற்காகவே மலாயாவிலிருந்து வந்திருக்கிறார்கள்) தளபதி திருப்பூர் மொய்தீன், இன்றைய இளம் பேச்சாளர் பலருக்குக் குருவான வடகரை ஜனாப் எம். எம். பக்கர்,மதுரை எஸ். எம். ஷரீப்,பி.ஏ, கவிஞர் சாரணபாஸ்கரன், திருச்சி "பாஷா", ஜனாப் அப்துல்காதர் ஜமாலி, காரை ஏ. எம். அலீ, மன்னார்குடி யூசுப்பாவலர் ஆகியோரின் பேச்சுக்கள் அழகாகவும் தரமாகவுமிருந்தன.

தலைவரவர்களின் முடிவுரையோடு மகாநாடு இனிது முடிவுற்றது. கலைந்து சென்றவர்கள், அடுத்த மாநாடு எங்கள் ஊரில் என்று தங்கள் தங்கள் ஊர்களைச் சொல்லிக் கொண்டு சென்றபோது விவரிக்க முடியாத உணர்ச்சி உடலெல்லாம் பரவி மெய் மறக்கச் செய்தது. இறைவனுக்கே நன்றி அனைத்தும்!

இறைவனும் இஸ்லாமும்

★

எம். எஸ். அப்துல் மஜீது பி. ஏ.,

இன்று நாம் விஞ்ஞான யுகத்தில் வாழ்கிறோம். இவ்வாறு இயம்புவதன் பொருள், அன்று விஞ்ஞானம் இருக்கவில்லை என்பதல்ல. உலகத்தில் மனிதன் தோன்றிய காலந்தொட்டு, விஞ்ஞானம் ஓரளவுக்கு இருக்கத்தான் செய்தது. ஆனால் சென்ற ஒரு நூற்றாண்டாக அது ஒரு புதிய பரப்பையும் பரபரப்பையும் அடைந்துள்ளது. விஞ்ஞான ஆராய்ச்சி மூலம், மனிதன், இன்று எத்தனையோ வஸ்துக்களின் தன்மையையும் போக்கினையும் தெளிவாகத் தெரிந்திருக்கின்றான். தெரிந்ததோடு நிற்கவில்லை, மனிதன். தெரிந்ததால் ஏற்பட்ட அறிவைக் கொண்டு, அதிசயப்படக் கூடிய கருவிகளையும், இயந்திரங்களையும் உருவாக்கியுள்ளான்.

எல்லாப் பொருள்களுக்கும் அடிப்படையான அணுவையும் தெரிந்து, அதைத் துளைத்து, அதில் அடங்கியுள்ள அங்கங்களையும் சக்திகளையும் தெரிந்து, அவற்றையும் வெளியாக்கியிருக்கிறான். இதுகாறும் உலகப் பொருள்களை அளந்த மனிதன் இன்று அண்ட கோடிகளையும் அளக்க ஆரம்பித்துவிட்டான். பறக்கிறது செயற்கைச் சந்திரன், இன்று! ஒன்றல்ல, இரண்டு!! இரண்டல்ல, இன்னும் எத்தனையோ?

அவன் உருவாக்கிய கருவி இயற்கைச் சந்திரனையும் அடைந்துவிடும்.—இயற்கைச் சந்திரன் என்ன, பரந்த ஆகாய வெளியில் காணக்கிடைக்கும் அனந்த கோடி கோளங்கள், இன்று, அவனுக்கு வெகு தூரத்தில் இருப்பதாகக் காணோம்.

விஞ்ஞான அறிவின் மதுவை உண்டு, இன்று ஆனந்தக் கூத்தாடுகிறான், மனிதன்! தன்னை மிஞ்சிய பொருளோ அல்லது சக்தியோ, இங்கும் இல்லை—எங்கும் இல்லை என்கிறான் மனிதன். என்னே, அவனின் மமதை! என்னே, அவனின் இறுமாப்பு! மது மயக்கம் தலைக்கேறிவிட்டது; கடவுள் இல்லை — மார்க்கமில்லை என்கிறான், மனிதன். கடவுளும், மார்க்கமும் சில பித்தர்களால், போலிகளால், கோடானு கோடி மக்களை ஆளுவதற்காக அவர்கள் மீதும் ஆன்மாக்கள் மீதும் ஆதிக்கம் செலுத்துவதற்காக உருவாக்கப்பட்ட புல்லுருவிகள் என, அவன் அறையிலும் அம்பலத்திலும் அறைகூவி எக்காளமிடுகிறான். இந்த அறைகூவல் பக்குவப்படாத உள்ளங்களை, கலக்குகின்றது, பந்தப்படுத்துகின்றது.

விஞ்ஞான ஆராய்ச்சி, அந்த ஆராய்ச்சியில் மனிதன் கண்ட வெற்றி, அந்த வெற்றியில் ஏற்பட்ட மதி மயக்கம், அம் மதி மயக்கத்தில் அவனிடத்தில் தோன்றிய

புதிய கருத்து, ஒனுன் கொடியைப் போல, மனித சமுதாயத்தில் படர்ந்து வருகிறது.

"கடவுள் இல்லை" என்ற கருத்தை மாத்திரம் நாம் எடுத்து சற்று விசாரணை செய்வோம். விஞ்ஞான சக்தியால் கண்டுபிடிக்கப் பட்ட இயந்திரங்களுள் ஒன்று, பெட்ரோல் சக்தியால் ஓடும் மோட்டார் வண்டி. அதில் அமைந்திருக்கும் விசை ஒன்றை நாம் தட்டினுல் வண்டி ஓடுகிறது. அவ்வண்டியில் ஓட்டுபவன் இல்லாவிட்டாலும் வண்டி ஓடத்தான் செய்யும். வண்டி ஓடுமேயொழிய, எந்தப் பாதை வழியாக ஓடவேண்டும், எந்த வேகத்தில் ஓடவேண்டும் என்று அதற்குத் தெரியாது. கட்டுப்படுத்தப்படாத முறையில் ஓடுவதால், அது தன் பிரியம்போல் ஓடி பல பொருள்கள் மீதும் மோதி, நாசத்தை விளைவிக்கும். கடைசியாக வண்டியும் நாசமடையும். வண்டி இவ்வாறு நாசத்தை விளைவிக்காமலிருக்கவும், அதுவும் நாசமாகாமலிருக்கவும், அதை ஓட்டுபவன் கையில் ஒப்படைக்கிருர்கள். பாதையில் வண்டி சரியான முறையில் ஓடும் சமயம், அதில் அதை ஓட்டக்கூடியவன் ஒருவன் இருக்கின்ருன், என்பதை நாம் அறிகிறோம். இந்த உதாரணம், மோட்டார் வண்டிக்கு மாத்திரம் பொருத்தமானதல்ல. இது, மனிதனுல் உருவாக்கப்பட்ட எல்லா வாகனங்களுக்கும், எல்லாக் கருவிகளுக்கும் பொருத்தமானதாகும்.

செயற்கைப் பொருள்களை மறந்து சிறிது இயற்கைப் பொருள்களைக் கவனிப்போம். சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், உலகம்—உலகத்தில் காணும் மரம், செடி, கொடி, புற்பூண்டுகள், பறவை, விலங்குகள், ஊர்வனம், மண், தண்ணீர், அனல், சுருங்கக் கூறுமிடத்து, அண்ட சராசரங்கள்; இவை ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்வதற்காக, ஒரு குறிப்பிட்ட சக்தி உண்டு. ஓடும் சக்தியைக் கொண்ட மோட்டார் வண்டி சரியான முறையில் ஓடுகின்றது என்ருல், அம் மோட்டார் வண்டியுடன், ஓட்டுபவன் ஒருவனும் இருக்கின்ருன் என்பதை நாம் தெரிந்தோம். அது போன்று, சூரியனும் சந்திரனும் மற்றும் ஏனைய பொருள்களும், அவற்றின் சக்தியைக்கொண்டு, அவையாற்றவேண்டிய பணிகளை ஒழுங்காகச் செய்கின்றன என்ருல், அவற்றுக்கும் அப்பாற்பட்ட ஒரு சக்தி அவற்றைக் கட்டுப் படுத்துகின்றது அல்லது ஓட்டுகிறது என்பது வெளிப்படை. அவற்றைக் கட்டுப்படுத்தும் ஒரு சக்தி இல்லை என்ருல், அப்பொருள்கள் எல்லாம், அவற்றின் பிரியம் போல் இயங்க ஆரம்பிக்கும். அவ்வாறு இயங்க ஆரம்பித்தால், என்ன ஆகும்? உலகம், தான் தினசரி சுற்றக்கூடிய வேகத்தைச் சற்று அதிகப்படுத்தினுலும் சரி, சற்று குறைந்தாலும் சரி, அல்லது ஆகாய வெளியில் அது உருண்டோடும் பாதையை விட்டு விட்டு சற்று விலகி ஓடினுலும் சரி, அதன் கதி அதோகதிதான்! கட்டுப்படுத்தும் சக்தி ஒன்று இல்லையென்ருல், சூரியனும் அதோகதி தான்! சந்திரனும் அதோகதி தான்! பிரபஞ்சப் பொருள்கள் யாவும் அதோ கதிதான்!

இது போன்றே, மனிதனின் ஒவ்வோர் உறுப்பும் கூட! மனிதனின் இதயத்தை உதாரணமாக எடுத்துக் கொள்வோம்: இரத்தத்தைச் சுத்தி செய்ய வேண்டியது, அதன் கடமை. ஓயாது, அது வேலை செய்ய, மற்ருெரு சக்தி அதனைக் கண்காணிக்கிறது. இந்தக் கண் காணிப்பு இல்லையென்ருல், அது வேலை செய்யும் வேகத்தை அதிகப்படுத்தலாம்—அல்லது குறைக்கலாம். அவ்வாறு ஏற்பட்டால், உயிர் உடலை விட்டுப் பிரியும்.

அண்ட சராசரங்களை ஆட்டி வைக்கும் சக்தியை நாம் இறைவன் என்கிறோம். அல்லது கடவுள் (உள்ளத்தை விட்டுக் கடந்தவர்)

என்கிறோம். விஞ்ஞானிகளுக்கு இது தெரியாமலில்லை. ஆனால் அவர்கள், இச்சக்தியை இறைவன், கடவுள் என்று சொல்லாமல், அதை, "தெரியாத ஒரு நியதி" (Unknown phenomenon) என்று சொல்கிறார்கள்.

இறைவன், அல்லது பிரபஞ்சப் பொருள்களை ஆளக் கூடிய சக்தி, இல்லையென்றால், ஒன்றுமில்லை! சூரியன் இல்லை—சந்திரன் இல்லை—அண்ட சராசரங்களும் இல்லை. இறைவன் இல்லை எனும் மனிதனும் இல்லை!

நான் விசாரணையின் மற்றொரு கட்டத்திற்கு வருகிறேன். இஸ்லாம் ஒரு மனிதனால் உண்டாக்கப்பட்ட மார்க்கமல்ல—மதம் அல்ல! மதம், மார்க்கம் எனும் சொற்கள், நம் பழக்க வழக்கத்தில் ஒருவரால் உண்டாக்கப்பட்டது எனும் தாத்பரியத்தை உடையதாய் இருப்பதால், நான் இஸ்லாமை அவ்வாறு சொல்லப் பிரியப்படவில்லை. யூதர் ஒருவர் மார்க்கத்தை உண்டாக்கினால், அதை நாம் யூத மார்க்கமென்கிறோம். இயேசு கிறிஸ்து போதித்த மார்க்கத்தை கிறிஸ்து மார்க்கமென்கிறோம். புத்தர் பரப்பிய வழியை புத்த மதம் என்கிறோம். கன்பூஷியஸ் கண்ட நெறியை கன்பூஷியஸ் மார்க்கமென்கிறோம். இதுபோன்று நபி பிரான் முஹம்மது ரஸூலே கரீம், (ஸல்) அவர்கள் போதித்ததை முகம்மதிய மதம் என்றால் பொருந்துமா? ஒருக்காலும் பொருந்தாது! அவர்கள் கொண்டுவந்த மார்க்கம், அவர்களுடையதல்ல! திருமறை அதை இஸ்லாம் என்று அழைக்கிறது.

"இஸ்லாம்"—ஆழ்ந்த கருத்துக்கள் நிறைந்த அழகிய அரபியச் சொல். இது இன்று நேற்று வந்த சொல் அல்ல; இறைவனால் அருளப்பட்ட சொல். இஸ்லாம் ஏற்பட்ட காலம் தொட்டு ஏற்பட்ட சொல்! அப்படி என்றால், இன்றைக்கு ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பு அரபு நாட்டில் நபி பிரான் தோன்றிய காலத்தில் ஏற்பட்ட சொல் என்றும் சொல்வதற்கு இல்லை. இறைவன் பிரபஞ்சத்தை உண்டாக்கிய அதே விநாடியில் ஏற்பட்ட ஒரு நியதியின் பெயர், "இஸ்லாம்".

இஸ்லாம் எனும் சொல்லுக்கு ஒரு பொருள் சாந்தி—சமாதானம். மற்றொரு பொருள், "அவனுக்குக் கீழ்ப்படிதல்", "அவனிடத்தில் தன்னை அர்ப்பணித்தல்"; "அவன் கட்டுப்பாட்டுக்கு அடிபணிதல்", "அவன் சட்டத்திற்கு அடிமையாகுதல்."

இந்தப் பொருள்களை நம் கருத்தில் வைத்து, பிரபஞ்சத்தைச் சற்று கவனிப்போம். இறைவன் உண்டு என்பதை விளக்கும் சமயம், அண்ட

சூரியாஞ்சனம்

ஒரு சிறந்த பெயின் பாம். தலைவலி, தசைவலி, மார்புச்சளி முதலியவைகளுக்குச் சிறந்தது. ஒரு முறை உபயோகித்தால் இதன் குணத்தைக் கண்டு பெரிதும் பாராட்டுவீர்கள்.

சூரியன் மார்க் பயோரியா பற்பொடி

இந்தப் பற்பொடியை உபயோகித்து வந்தால் பல் வியாதிகள் எதுவும் வராமல் தடுத்து உங்கள் பற்களை எப்போதும் உறுதியாக இருக்கச் செய்யும்.

MFG; M. A. ரஜாக், சூரியாஞ்சனம் டிப்போ, திண்டுக்கல்

N-B: ஏஜெண்ட் இல்லாத ஊர்களில் ஏஜெண்டுகள் தேவை

சராசரங்களையும் ஆட்டி வைக்கக் கூடிய ஒரு சக்தி இருப்பதாக எடுத்துக் காட்டினேம். அதையே இங்கு சற்று மாற்றிச் சொல்லப் பிரியப் படுகிறேம். அதாவது, எல்லாப் பொருள்களும், அவற்றையும் விட்டுப்பிரிந்த ஒரு சக்தியின் கட்டளைக்கு அடிபணிந்து நடக்கின்றன. மாற்ற முடியாத ஒரு சட்டம், தட்ட முடியாத ஒரு ஏவல், கடந்து செல்ல முடியாத ஒரு கட்டுப்பாடு, சூரியனையும் சந்திரனையும், அனந்த கோடி கோளங்களையும் இணைத்து நிற்கின்றது. அந்த இணைப்பின் அடியில், அவை செயலாற்றுகின்றன. இது போன்றே உலகமும், உலகப் பொருள்களும் செயலாற்றுகின்றன. இந்த மகத்தான சட்டத்தின் அடியில் தான், அவை தோன்றுவதும் மறைவதும், பிறப்பதும், இருப்பதும், இறப்பதும், மாறுவதும் மாருமல் இருப்பதும்! இதே சட்டம் தான், மனிதனையும் ஆள்கின்றது. அதன்படி தான், அவன் பிறக்கின்ருன், சுவாசித்து வாழ்கின்ருன், இறக்கின்ருன், அவனின் பகுத்தறிவு ஒன்று தவிர, மற்ற எல்லா உறுப்புக்களும் உணர்ச்சிகளும், அதே சட்டத்தில், அதே கட்டுப்பாட்டில் தான் வேலை செய்கின்றன. இந்த தனிப்பெரும் சட்டத்தின் எஜமானன், சர்வாதிகாரி, எல்லாம் வல்ல இறைவன். அவனுக்குக் கீழ்ப்படிதல், அவன் கட்டளைப்படி நடத்தல், அவனுக்குத் தன்னை அர்ப்பணித்தல்--' இவை யாவும் இஸ்லாம் எனும் சொல்லுக்கு பொருளாயிருக்கும் சமயம், அவனுக்கு அடிபணிந்து நடக்கக்கூடிய அண்ட சராசரங்கள் யாவும் முஸ்லிம்கள். செங்கதிரைப் பரப்பி, உலகை விளக்கி ஆகாய வெளியில் திரிகிற சூரியன், முஸ்லிம். வெண்ணமுதம் நிறைந்த கிரணங்கள் கூடிய சந்திரன் முஸ்லிம். அந்தரத்தில் தவழ்ந்தோடுகிற நட்சத்திரக்கூட்டங்கள் முஸ்லிம்கள். சுவன லோகமும் முஸ்லிம். அதிலுள்ள தூதர்களும் முஸ்லிம்கள். பூவுலகில் இருக்கின்ற எல்லாப் பொருள்களும் முஸ்லிம். உலகத்தில் பிறக்கிற எல்லா மனிதர்களும் முஸ்லிம்கள்.

> **பெருமானரின் பொன்மொழி**
>
> தன் மனைவியை அறிவிலியாக ஆக்கி வைத்திருப்பதை காண, பிறிதொரு பெரும் பாவத்துடன் எந்த மனிதனும் இறைவனைச் சந்திப்பதில்லை.
>
> *ரௌஜுல் பாயிக்*

ஆனல் மனிதனுக்கும், மற்றையப் பொருள்களுக்கும் ஒரு தனிப்பட்ட வித்தியாசம் உண்டு. அந்த வித்தியாசம், அவனுக்கு ஒரு தனிப்பட்ட சிறப்பைக் கொடுக்கிறது. அதுவே அவனிடமுள்ள பகுத்தறிவாகும். பகுத்தறிவை வழங்கிய இறைவன், மனிதனுக்கு இன்னும் பல சக்திகளை அருளினுன்.

இறைவனின் சக்தியை குருமணி குணங்குடியார் தமது திருப்பாடல் திரட்டிலே இரத்தினச் சுருக்கமாக விளக்குகிருர்.

"அண்ட கோடிகளும் ஓர்
  பந்தெனக் கைக்குள்
    ளடக்கி விளையாட வல்லீர்!
அகிலமோர் ஏழினையும்
  ஆடும் கரங்குபோல்
    ஆட்டி விளையாட வல்லீர்!
மண்டலத் தண்டரை
  அழைத்தரு கிருத்தியே,
    வைத்து விளையாட வல்லீர்!
மண்ணகமும் விண்ணகமும்
  அணுவைத்துளைத்து அதில்
    மாட்டி விளையாட வல்லீர்!
கண்டித்த கடுகில் ஏழு
  கடலைப் புகட்டிக்,
    கலக்கி விளையாட வல்லீர்!"

இவையாவும் இறைவனின் எல்லையற்ற சக்தியின் சாகரத்தை ஓரளவுக்கு விளக்குகின்றன. மனிதனை உருவாக்கிய இறைவன்; தன் சக்தி-சாகரத்தில் ஒரு துளியை மனிதனுக்கும் தந்து, அவனை படைப்புக்களிலெல்லாம் தலை சிறந்த படைப்பாக—('அஷ்ரபுல் மக்லூகாத்') செய்தான். அது மாத்திரமல்ல, அவனை பூவுலகில் தன் பிரதிநிதியாக ('கலீபுல்லாவாக')—செய்தான். இந்தச் சிறப்புகளைக் கொண்ட மனிதன், தனக்கிருக்கும் சிறப்புகளுக்குப் பொருத்தமாகவும், தகுதியுடையவனாகவும் நடக்கின்றானா?

பகுத்தறிவு மனிதனுக்கு ஒரு சுதந்திரத்தைக் கொடுக்கிறது. அதனால் அவன் தன் பிரியம்போல் நடக்கின்றான். ஒன்றை ஏற்கவும், அதனை மறுக்கவும், அவனால் முடியும். இவ்வாறான சுதந்திரம், இறைவனால் படைக்கப்பட்ட மற்றவற்றிற்குக் கிடையாது.

படைக்கப்பட்ட எல்லாப் பொருள்களின் போக்கையும் நாம் கவனித்தால், அப்பொருள்களெல்லாம் மனிதனுக்காகத்தான் படைக்கப்பட்டிருக்கின்றன என்பது விளங்கும். ஆகவே மனிதன், இறைவனுக்கு என்றென்றும் கடமைப்பட்டவன்—நன்றி செலுத்த வேண்டியவன். அவனுக்கு ஏற்பட்ட கடமையை அவன் எவ்வாறு பூர்த்தி செய்யவேண்டும்? அவன் தன் நன்றியை எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும்? "இறைவனுக்குக் கடமைப் பட்டவன் நான் அல்ல!" என்று மனிதன் உண்மையை மறைத்துப் பேசலாம். அது அவனுக்கிருக்கும் பகுத்தறிவால் ஏற்படும் சுதந்திரம். இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்குப் பதிலாக அதற்கு மாறும் செய்யலாம். அதுவும் அவனுக்கு இருக்கும் சுதந்திரம்.

பகுத்தறிவால் மனிதனுக்கு ஏற்படும் சுதந்திரம், மனித இனத்தையே இரு பகுதிகளாகப் பிரிக்கிறது. ஒரு பகுதியினர், தங்களைப் படைத்தவன் இறைவன்—அவனே தங்களுக்கு எஜமானன் என்பதை மனோ, வாக்கு, காயத்தால் உணர்ந்து அவனுடைய நீதிக்கு கடுகளவும் மாறு செய்யாது அடிபணிந்து நடக்கிறார்கள். அவ்வாறு நடக்கும் பகுதியைச் சார்ந்த மனிதர்கள் பூர்த்தியடைந்த முஸ்லிம்கள். இஸ்லாம் அவர்களிடம் பூர்த்தியடைகிறது. இந்நிலையில் அவர்களின் போக்கிற்கும் பிரபஞ்சத்தின் போக்கிற்கும் எவ்விதமான முரண்பாடும் இல்லை. இவ்விதப் பக்குவத்தை அடைந்த மனிதர்தாம் இறைவனின் பிரதிநிதிகளாக விளங்குகிறார்கள்.

பிரபஞ்சம், அவர்களுக்கு! அவர்கள், இறைவனுக்கு!!

"படைத்தான் படைப்பெல்லாம்
மனுவுக்காக—
மனுவைப் படைத்தான்,
தன்னை வணங்க!"

மற்றொரு பகுதியைச் சார்ந்த மனிதர்கள், பிறப்பில் முஸ்லிம்களாக இருந்தாலும் அவர்களின் பகுத்தறிவைப் பயன்படுத்த வேண்டிய முறையில் பயன்படுத்தாமல், இறைவனைத் தெரியாது, வழி புரண்டு, இறைவனே இல்லை என்று சாதிக்கிறார்கள். இம்மனப் பான்மையைத் தான் இஸ்லாம் "குப்ரு" என்று சொல்லுகிறது. "குப்ரு" எனும் அரபிச் சொல்லுக்கு, 'மூடுதல்','மறைத்தல்' என்பது பொருள். மனிதன், தன் இயல்பான போக்கின்படி தெரிந்ததை, மூடுகின்றான்— மறைக்கின்றான். அவனின் ஒவ்வோர் உறுப்பும் உணர்ச்சியும் இறைவனுக்கு அடிபணிய முனைகின்றது. ஆனால் அவன் அவற்றைத் தடுக்கின்றான். இந்த நிலையில், அவனுக்கும் பிரபஞ்சப் பொருள்களுக்கும் இருக்கவேண்டிய தொடர்பு அற்று விடுகிறது.

"குப்ரு" எனும் சொல்லை மற்றொரு பொருளில் அறிவின்மை என்றும் சொல்லாம். கண்ணாரக் காண்பதையும் மனசார உணர்வதையும் தெரியாமலிருப்பது, அறிவின்மை தானே? எதிர்ப்புத் தன்மை, கிளர்ச்சித் தன்மை, நன்றி கெட்ட தன்மை, பணிவற்றதன்மை ஆகியவற்றையும் "குப்ரு" என்று சொல்லலாம். மனிதனைப் படைத்தவன், மனிதனா? இல்லை! அவன் பயன்படுத்தும் பொருள்கள், அவனிடமுள்ள உறுப்புகள், இவற்றை மனிதனா படைத்தான்? இல்லை! அண்ட சராசரங்களை உண்டாக்கியவன், மனிதனா? இல்லை! இறைவன் தானே! அப்படியிருக்க அவனை இல்லை யென்று சொல்வது தகாத செயல் தானே! நன்றி கெட்ட தன்மைதானே!

இறைவன் உண்டு — அவனே, படைப்புக்களுக்கெல்லாம், அதிபதி! அவையெல்லாம் மனிதனின் தன்மைக்காகவே படைத்தான்! ஆகவே, அவனை அறிந்து, அல்லும் பகலும், அறுபது நாழிகையும், அவனுக்கு அடிபணிந்து, அவனுக்குத் தன்னை அர்ப்பணித்து நடத்தலே இஸ்லாம்.

உண்டி கொடுத்தோரை, உயிர் கொடுத்தோரைப் போற்ற வேண்டுமென்கிறான், மனிதன்! நன்றி செய்தோரை மறத்தலாகாது என்கிறான். மனிதன். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமென்கிறான், மனிதன். அதிபதிக்கு விசுவாசம் காட்டுவது, மனிதனின் உயரிய பண்பு என்கிறான், அவன். பகுத்தறிவைக்கொண்டு, இவற்றையெல்லாம் யாதொரு தர்க்கமுமின்றி ஏற்றுக் கொள்ளும் மனிதன், ஏன் எண்ணற்ற நன்மை செய்த இறைவனை, படைப்புகளின் அதிபதியைப் போற்றக் கூடாது? நன்றி செலுத்தக்கூடாது? விசுவாசம் காட்டக் கூடாது? மனோ வாக்கு காயத்தால் இறைவனை மனிதன் தெரிந்து அவனைப் போற்றுதல், அவனுக்குக் கட்டுப்பட்டு நடத்தல், அவனுக்கு நன்றி செலுத்தல், அவனுக்கு விசுவாசம் காட்டுதல்; இவைதான் இஸ்லாம்.

குழந்தையில்லாது தவித்த இரு அன்பு உள்ளங்களைக் குளிர்வித்தவள் நான். ஓர் ஆணின் தாய்மை வேட்கை என்னிடம் தாய்மை வேட்கையை எதிரொலிக்கச் செய்தது.

—கற்றறிந்த டாக்டரம்மா.

தாய்மை

வி. நூர்முகம்மது

"டாக்டர் ஜுபைதா? நம்ம ஜுபைதா தானே!" என்று சிந்தித்தவாறே அஸீஸ் சிகரெட் புகையை விட்டுக் கொண்டிருந்தான். கார் "காதர் கிளினிக்" முன் நின்றது. காரைவிட்டு அஸீஸ் இறங்கி நடந்தான்; அவன் மனைவி, குழந்தை ஜலாலை இடுப்பில் எடுத்துக்கொண்டு பின் தொடர்ந்தாள். டாக்டரின் அறைக்குள் நுழைந்ததும், அஸீஸின் சந்தேகம் பறந்தது; ஆம், அதே ஜுபைதாதான்!

"டாக்டர் ஜுபைதா!"

"...ஹான்...தாங்களா? இது யார் ...தங்கள்...?"

"ஆம்! என் மனைவி லதீபா. இவன் என் பையன் ஜலால்."

"என்ன நின்றுகொண்டிருக்கிறீர்கள்! உட்காருங்கள்......நீங்களும் உட்காருங்கம்மா..." என்று கூறிக்கொண்டே டாக்டர் ஜுபைதா, லதீபாவின் இடுப்பில் இருந்த குழந்தையை வாங்கினாள்.

"இதென்ன குழந்தைக்கு உடம்பு கொதிக்கிறது? சளியும் இருக்கும் போல் தெரிகிறது"

"அதற்காகத்தான் இங்கு வந்தோம். இங்கே வந்து பார்த்தால் நீங்களே டாக்டர்!" என்று தன் ஆச்சரியத்தை வெளிப்படுத்தினான் அஸீஸ்.

"விபரமெல்லாம் வீட்டிற்குப் போய்ப் பேசிக்கொள்ளலாம். முதலில் குழந்தையைப் பார்ப்போம்" என்று கூறிக்கொண்டே டாக்டர் ஜுபைதா குழந்தையைக் கட்டிலில் போட்டுப் பரிசோதித்து, ஓர் ஊசியும் போட்டாள். பிறகு குழந்தையைத் தானே எடுத்துக் கொண்டே, தன் நர்ஸிடம் "இந்த மிக்ஸரை வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வா. இன்னும் பத்து நிமிஷங்களில் திரும்ப வந்து மற்றப் பேரை பார்க்கிறேன்" என்று கூறியவாறே

அஸீஸ் தம்பதியுடன் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்.

மதுரமான டீயை அருந்திய பிறகு ஜுபைதாவின் ஹாலில் நிலவிய அமைதியை அஸீஸ்தான் முதலில் கலைத்தான்.

“தாங்கள் எப்படித் திருவாரூரில் தங்கினீர்கள்?''

''மதுரையிலிருந்து திருச்சிக்கு மாறுதல் ஆனதல்லவா? அதன் பிறகு தஞ்சாவூர் ஜில்லாவிற்கு எங்கள் பாவாவை மாற்றினுர்கள். தஞ்சை மாவட்டக் கல்வி அதிகாரியாக இருந்ததினுல் இவ்வூரில் இருக்கும் முஸ்லிம் ஹைஸ்கூல் மானேஜர் ஹாஜி அப்துல் கனி மரைக்காருக்கும் பாவாவுக்கும் நல்ல சிநேகம் ஏற்பட்டது. பாவா நான்கு வருஷங்களுக்கு முன் தஞ்சாவூரில் மவுத்தானுர்கள். மவுத்துக்கு முன் தங்களுடைய இன்சூரன்ஸ் பாலிஸிக்கு என்னையே வாரிசாக்கி இருந்தார்கள். மேலும், ரொக்க இருப்பெல்லாம் என்பேராலேயே பாங்கில் இருந்தது. நான் அப்பொழுது ‘ஹவுஸ் சர்ஜ’னுக ஜெனரல் ஆஸ்பத்திரியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். அவர்களது மரணத் தருவாயில்தான் நான் தஞ்சாவூர் வந்தேன். அப்பொழுது இவ்வூர் ஹாஜியார் அவர்களும் பாவாவுடனே இருந்து பல வகையிலும் உதவி செய்து வந்தார்கள். நான் வந்ததும் பாவா என்னை ஹாஜியார் கையில் ஒப்புவித்து, “இனி இவர்கள்தான் உன் பாவா'' என்று கூறினுர்கள். நான் தேம்பித் தேம்பி அழுதேன்.

''அழாதேம்மா! அழுதுகொண்டிருக்கும் பலருக்கு நீ ஆறுதல் அளிக்கவேண்டியவள்! உன் படிப்பு முடிந்ததும் குழந்தைகள் ஆஸ்பத்திரி ஒன்றை ஆரம்பித்து நடத்து. திருவாரூரிலேயே ஆஸ்பத்திரி கட்டி நடத்தி வா, அங்கேதான் உன் பாவா...இந்த ஹாஜியாரும் இருக்கிருர்கள் ஆண்டவன் உனக்கு ஒரு குறைவும் உண்டாக்க மாட்டான்'' என்று பா

வா தேற்றினுர்கள்.''

அவர்களின் அந்தக் கடைசி வேண்டுகோள்தான் என்னைத் திருவாரூர் டாக்டராக்கிவிட்டது'' என்று தன் வரலாற்றின் ஒரு பகுதியைக் கூறிய ஜுபைதா அஸீஸைப் பார்த்து, “தாங்கள் எப்படித் திருவாரூர் வந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

“நாங்கள் நாகூருக்குச் சென்ருேம். இவ்வூர் இரும்பு வியாபாரி அசன் ராவுத்தர் எங்கள் குடும்ப நண்பர். அவர் வேண்டுதலின்மீது இரண்டு நாள் தங்கும் உத்தேசத்துடன் நேற்றுத்தான் இங்கே வந்தோம். நேற்று இரவே குழந்தைக்குக் கடும் காய்ச்சல். இன்று காலை அசன் ராவுத்தர், தங்கள் ஆஸ்பத்திரியையும் தங்கள் கைராசியையும் கூறி அவர் காரிலேயே எங்களை இங்கு அனுப்பிவைத்தார்.''

''சரி! நீங்கள் இங்கேயே இருங்கள் மத்தியானம் சாப்பிட்டுவிட்டுப் போகலாம். நான் ஆஸ்பத்திரிக்குச் சென்றுவிட்டு பனிரெண்டு மணிக்கெல்லாம் வந்துவிடுகிறேன். முக்கியமான கேஸ் ஒன்றுமில்லை, எல்லாம் ‘புளூ' கேஸ்கள்தான்!

''இல்லை! அசன் ராவுத்தர் வீட்டில் மத்தியானச் சாப்பாட்டிற்கு ஏற்பாடுகள் செய்துவிட்டார். இன்னெரு முறை வரும்பொழுது......''

"அதெல்லாம் முடியாது. நானே காரில் வந்து அசன் ராவுத்தரிடம் கேட்டு நாளைப் பூராவும் என் வீட்டில் விருந்திற்கு ஏற்பாடு செய்து இறேன்."

"உங்களுக்கும் டைம் ஆகிறது. நாங்கள் வரட்டுமா டாக்டர்!"

"அதெல்லாம் சரி. நீங்கள் சாயந்தரம் ஐந்து மணிக்கு குழந்தையை மறுபடியும் கொண்டு வாருங்கள். இன்னொரு ஊசி போடவேண்டியதிருக்கும்." என்று கூறிக்கொண்டே டாக்டர் ஜுபைதா எழுந்தாள். அலீஸ் குடும்பத்தினரும் பின் தொடர்ந்தனர்.

அலீஸ் காரிலிருந்து இறங்கு முன்பே, அசன் ராவுத்தர் காரின் கதவைத் திறந்து வரவேற்றார். லதீபா குழந்தையுடன் வீட்டிற்குள் சென்றுவிட்டாள்.

"என்ன! டாக்டரம்மா நல்லா கவனிச்சாங்களா? என்ன காய்ச்சல்ன்னு சொன்னாங்க?"

"டாக்டரம்மா எங்களுக்குத் தெரிந்த டாக்டரம்மதானே!" என்று சிரித்துக்கொண்டே அலீஸ் அளித்த பதில் அசன் ராவுத்தருக்கு ஆச்சரியத்தை அளித்தது.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"இவர்கள் பாவா எங்கள் மதுரையிலே டி. பி. ஓ. வாக இருந்தவர் தான். எங்கள் பங்களாவிலேதான் குடியிருந்தார்கள். அதோடு அங்கே காலேஜிலே நான் பி. ஏ. படிக்கும் பொழுது, ஜுபைதா இண்டர் மீடியட் படித்தது."

"தம்பி! அவுங்க பாவா ரொம்ப நல்லவரு தம்பி" என்றார் அசன் ராவுத்தர்.

"ஆமாம் ரொம்ப நல்லவர்தான். அவர்கூட என்னை மருமகனாகக் கொள்ள விரும்பினார். எங்க அத்தாவுக்கும் சம்மதந்தான்......"

"உங்களுக்குத்தான் பிடிக்கவில்லையாக்கும்."

"அப்படியும் சொல்ல முடியாது: பின்னால் 'தன் மகள் தான் இப்பொழுது கல்யாணத்தை விரும்பவில்லை' என்று கூறுவதாகச் சொல்லி அவரே பிரச்னையை அமுக்கி விட்டார்."

"அது சரிதான் தம்பி. நம்ம மாதிரிப் பெரிய குடும்பங்களுக்குப் படிச்ச பெண்கள் ஒத்து வராது தம்பி!" என்று அசன் ராவுத்தர் திருப்தி செய்யும் மனப்பான்மையில் மெழுகினார்.

"ஆமாமா!" என்று அலீஸ் அளித்த பதிலில் வெறும் உதட்டசைவே இருந்ததை அசன் ராவுத்தர் எப்படிப் புரிந்து கொள்ள முடியும்.

"தம்பி நீங்க கொஞ்சம் 'ரெஸ்ட்' எடுத்துக்கிட்டு இருங்க. நான் கடைக்குப் போய்விட்டு வருகிறேன்" என்று சொல்லி அசன் ராவுத்தர் சென்று விட்டார்.

அலீஸுக்குத் தனிமை பிடிக்கவில்லை. ரேடியோவைத் திருப்பினான். கொளும்பு நிலயத்தில்,

"திரும்பிப் பாராயோ!" என்று அலறிய இசைத்தட்டைக் கேட்டதும், அலீஸ் ரேடியோவை நிறுத்தி விட்டான். அவன் அடக்கி ஒடுக்க முயல்வதெல்லாம் தன் சிந்தனை தன் வாழ்நாளைத் திரும்பிப் பாராமல் இருப்பதற்குத்தானே! எதை மனிதன் மறந்துவிடவேண்டும் என்று நினைக்கின்றானே அதுதானே கல்லின்மேல் எழுத்துப்போல் அவன் மனதில் பதிந்துவிடுகிறது.

மதுரை அமெரிக்கன் காலேஜ் வாழ்க்கை—ஜுபைதாவையும் தன்னையும் மணமக்களாகக் கண்டு களிக்க தங்களின் இரு குடும்பங்களும் ஆசைப்பட்டன. பிறகு திடீரென்று அந்த முயற்சி தடைப்பட்டது. காரணமற்ற காரணமாக "ஜுபைதா தற்சமயம் திருமணத்தை விரும்பவில்லை" என்று அவள் தகப்பனார் கூறியது. இவையெல்லாம் அவன் மனத்திரையில் மாறி மாறிச் சுழன்றன. எவ்வளவோ ஆழமாகச் சிந்தித்தும் "ஜுபைதா திருமணத்தை விரும்பவில்லை." என்று கூறியதற்குக் காரணமாக அமைந்த எந்த ஒரு சிறு நிகழ்ச்சியையும் அவனால் நினைவுக்குக் கொண்டு வரமுடியவில்லை.

o o

மாலையில் குழந்தை ஜலீலை எடுத்துக் கொண்டு அலீஸ் மட்டுமே டாக்டர் ஜுபைதாவின் வீட்டுக்குச் சென்றான்.

"குழந்தைக்கு இப்பொழுது ஜுரம் குறைந்திருக்கிறது. இரவு ஒன்பது மணிக்கு இந்த மாத்திரையை தேனில் குழைத்துக் கொடுங்கள்" என்று கூறிக்கொண்டே ஒரு மாத்திரையை தாளில் சுற்றி அலீஸ் கையில் கொடுத்தாள் ஜுபைதா.

அலீஸ் பொட்டலத்தைப் பெறும்பொழுது டாக்டர் ஜுபைதாவின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். அவன் முகத்தில் நன்றியறிதலும் திகைப்பும்—வியப்பும் மாறி மாறி வட்டமிட்டன.

"உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?" என்று ஜுபைதா கேள்வி எழுப்பாதிருந்தால் அலீஸின்

நிலைமை பரிதாபப்பட வேண்டிய தாக இருந்திருக்கும்.

"எனக்கா...எனக்கு, நாலு குழந்தைகள்."

"உங்களுக்கு எப்பொழுது கல்யாணம் ஆயிற்று?"

"பி. ஏ. முடிந்த உடன்; கல்யாணம் ஆகி ஏழு வருஷங்கள் ஆய்விட்டன."

"ஏழு வருஷங்களுக்குள் நாலு குழைந்தைகள்! பரவாயில்லை. பரக்கத்துத் தான்!"

"டாக்டர்! உண்மையைச் சொல்லப் போனால் நீங்கள் கேலி செய்வீர்கள். பிறந்தது ஆறு குழந்தைகள். இரண்டு குழந்தைகள் பிறந்த உடனேயே இறந்து விட்டன!"

"அப்படியா! வருத்தம் தரும் விஷயந்தான். ஆமாம்! தாங்கள் மாணவராக இருக்கும் பொழுதே கர்ப்பத் தடை பற்றி அதிகம் பேசி வந்தீர்களே...எனக்குக் கூட நன்றாக ஞாபகமிருக்கிறது. நீங்கள் உங்கள் நண்பர் ஒருவருக்கு...எழுதிய கடிதத்தில்...'என் வாழ்க்கை லக்ஷியமே குழந்தை குட்டி இல்லாத குஷியான வாழ்க்கைதான்' என்று எழுதினீர்களே; நிலபுல வருமானத்தையும்—கட்டிட வாடகை வருமானத்தையும் வைத்துக் கொண்டே, அதிக பந்தமில்லாமல் வாழ்க்கையைக் கழிக்கத் திட்டமிட்டிருக்கிறேன் என்று கூட எழுதினீர்களே! அத்தகைய மனப் பான்மையில் இருந்த தங்களுக்கு எப்படி மனமாற்றம் ஏற்பட்டது?"

"டாக்டர்! என்னைக் கேலி செய்ய வேண்டாம்! எனக்கு ஒன்றும் மனமாற்றம் ஏற்படவில்லை. இப்பொழுது கர்ப்பத்தடையை அழுத்தம் திருத்தமாக ஆதரிக்கத் தான் செய்கிறேன். என் வாழ்க்கையில் என்

மதுரை பிரசுரம்

லக்ஷியத்திற்கு தவிர்க்கமுடியாத இடையூருக வாய்த்து விட்டாள் என் மனைவி. கல்லூரியில் நான் படித்துக் கொண்டிருக்கும் காலத்தில் எல்லாம், குழந்தைகள் நிறையப் பெற்றெடுக்காத ஒரு பரம்பரையில் பெண் எடுக்கவேண்டுமென்று முடிவு செய்திருந்தேன். முடியுமாஞல் நான் மணக்கப்போகும் பெண்ணைத் தவிர வேறு சந்ததியே இல்லாத இடத்தில் தான் மனைவியைத் தெரிந்தெடுக்கத் திட்டமிட்டிருந்தேன்...அது!...''

''ஏன், அது ஈடேறவில்லையா?''

''ஈடேறியது. என் மனைவி லதீபா தவிர வேறு குழந்தைகள் அவள் பெற்றோருக்குப் பிறக்கவேயில்லை. ஆனால் இவள் அந்த ஈவையும்...''

''அப்படிச் சொல்லாதீர்கள். மக்கள் செல்வத்திற்கு மிஞ்சியது எதுவும் இல்லை. உங்களுக்கென்ன பணத்திற்குக் குறைச்சலா? எத்தனை பிள்ளைகள் இருந்தால் என்ன?''

''என் வாழ்கையைப் பற்றிய என் சிந்தனையெல்லாம் கனவாகவே ஆய்விட்டன டாக்டர்!''

''அடிக்கடி குழந்தை பிறப்பது வாழ்க்கையில் சில சிக்கலை ஏற்படுத்தத்தான் செய்யும். தங்கள் போன்ற அறிவும் அனுபவமும் மிக்கவர்களுக்கு இது தவிர்க்க முடியாத பிரச்சினையல்லவே!

''டாக்டர்! என் மனைவி, விஞ்ஞானத்தின் விரோதி! விதியின் சிஷ்யை! இதற்குமேல் நான் என்ன சொல்வது? மூன்று வருஷங்களுக்கு முன்னதாக நானே ஒரு ஆபரேஷன் செய்து கொண்டேன். அந்தப் பைத்தியக்கார டாக்டர் சிரங்குக்குப் பதிலாக சிரசை வெட்டுகிறவன்! அவன் செய்த ஆபரேஷனுக்குப் பிறகும் இரண்டு குழந்தைகள்! இனியும் ஒரு நல்ல டாக்டரிடம் போகவேண்டியது தான்.''

''நீங்கள் செய்துகொள்ள நினைக்கும் ஆபரேஷன் அவ்வளவு வரவேற்கத்தக்கதல்ல. ஆண்டவன் அளித்துள்ள ஆக்கல் சக்தியை இழப்பதா! நிரந்தரமான ஒரு தடையை மனிதன் செய்துகொள்வது பிறகு அந்த மனிதனுடைய மனதுக்கு நிம்மதியற்ற நிலையை ஏற்படுத்தினாலும் ஏற்படுத்தக்கூடும்.''

''நீங்கள் கூறுவதை நான் புரிந்து கொள்கிறேன். நான் இப்பொழுது ஆபரேஷன் செய்துகொண்ட பிறகு எதிர்பாராத விதமாக இப்பொழுது இருக்கும் குழந்தைகள் இறந்துவிட்டால் என் இன்றைய செய்கை என் மனத்தில் நின்று நிலைத்து வருத்தும் என்று சொல்கிறீர்கள்! ஆனால் குழந்தைகளே இல்லாத நிலையில் ஒரு ரஸிக வாழ்வு வாழத்தானே நான் கனவு கண்டிருந்தேன்.''

''மனிதனுடைய கனவுகள் எல்லாம் பலிதமாகிவிட்டால் உலகில் மனிதத்துவம் நிலைக்காது. உங்களுடைய கனவு விசித்திரமானது என்பதை நான் மதுரையில் இருக்கும்பொழுதே என் சின்னஞ்சிறு அறிவினால் புரிந்துகொண்டேன்!''

''ஜுபைதா! மன்னிக்கவும் டாக்டர்! என் கனவு விசித்திரமானதா?...''

அறிவிப்பு

ஏராளமான அன்பர்கள் கதை, கட்டுரை, கவிதைகள் அனுப்பி வருகிருர்கள். ஆகவே, இவற்றைப் பரிசீலனை செய்து, முடிவு காணுவதில் சிறிது தாமதம் ஏற்பட்டு விடுகிறது. எனினும் இரண்டு, மூன்று வாரங்களில் பதில் தெரிவித்து விடுகிறோம். பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படா எழுத்தோவியங்களை திரும்பிப் பெற விரும்பும் அன்பர்கள், போதிய தபால் தலைகள் அனுப்பவேண்டும்.

ஆசிரியர்.

''நீங்கள் என்னிலும் வயது மூத்தவர்கள். என் சொந்த அண்ணன் போன்றவர்கள். நீங்கள் என்னை டாக்டர்! டாக்டர்! என்று அழைப்பது என்னை அன்னியப்படுத்துவது போல் தெரிகிறது. ஜுபைதா! என்றே அழையுங்கள்''

''சரி, ஜுபைதா! மனம் திறந்து ஒரு கேள்வி கேட்கட்டுமா?''

''ஓ! நன்றாகக் கேளுங்கள்.''

''மதுரையில் நீங்கள் இருக்கும் பொழுது நம் இரு குடும்பங்களுக்கும் பிணைப்பு ஏற்படுத்துவதற்கு என் அத்தா முயற்சி செய்தாரே...''

''ஏன், எங்கள் பாவாவும் கூடத்தான் முயற்சி செய்தார்கள்!......''

''பின் ஏன் அப்பேச்சு நின்று விட்டது?''

''என்னால்!''

''என்ன! உங்களாலா?''

''ஆம்! நான்தான் மறுத்துவிட்டேன். என்னைப்பற்றி நீங்கள் தவறாகப் புரிந்திருந்தீர்கள். நான் காலேஜ் பேச்சுப்போட்டியில் கர்ப்பத்தடை பற்றிப் பேசியது மனப்பூர்வமான என் கருத்தல்ல. பேச்சுப் பயிற்சியைத் தவிர அதற்கு வேறு உட்கருத்தே கிடையாது. நீங்கள் அதைத் தவறாகப் புரிந்து கொண்கொண்டீர்கள்.

''நான் உங்களுக்கு அறிமுகமான படி டி. யி. ஓ வின் ஒரே மகளுமல்ல. டி. யி. ஓ. விற்கு பிள்ளைகளே பிறக்கவில்லை! அவர்கள் வீட்டில் வேலைக்காரியாக இருந்தது என் தாயார் தான். என் தகப்பன் ஒரு குதிரை வண்டிக்காரர். குடியின்மேல் தந்தை கொண்ட காதல் நாற்பது வயதுக்குள் அவரை மரணமடையச் செய்தது. கூலிவேலை செய்து என்தாய் தன் நாலு குழந்தைகளைக் காப்பாற்றி வந்தாள். நான் பாவா என்றழைக்கும் பெரியவர் கல்வி அதிகாரியாக இருந்தபொழுது என் தாயார் அவர்கள் வீட்டில் வேலைக்குச் சேர்ந்தார்கள். அந்தச் சமயத்தில் நானும் என் அக்காளுமே

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
PRO:- A சங்குபிள்ளை, 115 திண்டுக்கல்ரோடு மதுரை

மிஞ்சினோம். மற்றக் குழந்தைகள் ஆண்டவனளவில் சென்று விட்டன.

''குழந்தை இல்லாப் பாசத்தால் என்னையும் என் அக்காளையும் மிகவும் பிரியமாக வளர்த்து வந்தார்கள். என் அக்காளுக்கு அப்பொழுது பத்து வயதுக்கு மேலிருக்கும் எனக்கு ஏழு வயதுதான். நான் நன்றாகப் படித்து வந்தேன். எங்கள் பாவா பிறகு கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்டார்கள். அங்கு ஒரு நல்ல மாப்பிள்ளைக்கு என் அக்காளை மணமுடித்துக் கொடுத்தார்கள். நான் எஸ். எஸ். எல். ஸி படித்துக் கொண்டிருக்கும் பொழுது, என் தாயாரும் இறந்து விட்டார்கள். ஆம்! எங்களை அன்போடு வளர்த்த ஆருயிர் அம்மா அவர்களும் இறந்து விட்டார்கள். நாங்கள் மதுரைக்கு வரும்பொழுது, நான் மட்டுமே அந்த வீட்டில் பிள்ளையாக இருந்தேன். எங்கள் பாவா தன் இதயத்தில் ஒரு நாளாவது என்னை வளர்ப்புப் பிள்ளையாகக் கருதியது கிடையாது. எனவே அவர்கள் இந்த விபரத்தை யாரிடமும் கூற வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. நான் தான் இதைத் தங்களிடம் கூற நினைத்தேன். ஆனால் அவசியமில்லாது போயிற்று. நாம் வெவ்வேறு துருவங்களில் நிற்கிறோம் என்பதை அப்பொழுதே புரிந்துகொண்டேன். குழந்தையில்லாது தத்தளித்த இரண்டு அன்பு இதயங்களைக் குளிரச் செய்தவள் நான். குழந்தை வேட்கையின் காரணமாக சீரும் சிறப்புமான வாழ்வைப் பெற்றவள் நான். குழந்தை வேட்கை என்ற

அன்புச்சுடர் இல்லாதிருந்தால் நான் எந்த வீட்டில் பாத்திரம் தேய்த்துக் கொண்டிருப்பேன் என்பதைச் சொல்ல முடியாது. விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்ட இறைவன் விருப்பத்தோடு மனிதனைப் படைத்தான். ஆம் அருளாளனும் அன்புடையோனுமான காரணத்தால் ஆண்டவன் விருப்பத்தோடு மனிதனைப் படைத்தான். மனித குலத்தைப் பெருகச் செய்வதை மனிதனுக்கு விரும்பத் தக்கதாக ஆக்கி வைத்தான். மனித குலத்திற்குத் தாய்மை உணர்வை கருணைநிதியாகிய இறைவன் வழங்கிய ஒரே காரணத்தால்தான் நான் இன்று டாக்டர் ஜுபைதாவாகியுள்ளேன்! என் உள்ளமும் தாய்மை உணர்வை நாடி நின்றது. அதுதான் நான் நின்ற துருவம்! தாங்கள் நின்றது—நிற்பது; அதற்கு நேர் எதிரான துருவம்! நாம் இருவரும் இரு துருவங்களில் நிற்கிறோம் என்பதை அன்று புரிந்துகொண்ட நான் நம் குடும்பங்களுக்குள் ஏற்படவிருந்த தொடர்பை மறுத்தேன். "இப்பொழுது திருமணம் வேண்டாம்" என்று மட்டுமே சொன்னேன். என் அன்பு பாவா அவர்கள் "ஏன்?" என்றுகூடக் கேட்கவில்லை" என்று நிதானமாக—தெளிவாக ஜுபைதா விஷய விளக்கம் செய்துகொண்டு வரும்பொழுது, "டாக்டர்....நீங்கள் ஏன்..." என்று தன் வரண்ட குரலிலிருந்து வலுக்கட்டாயமாக வார்த்தைகளை வெளியே தள்ள முயன்றான் அஸீஸ்.

"ஏன்? ஜுபைதா என்றே கூப்பிடுங்கள். நான் உங்கள் தங்கை தானே!"

"சரி, இனிமேல் மிஸ் ஜுபைதா என்றே கூப்பிடுகிறேன்..." என்று அஸீஸ் கூறி முடிப்பதற்குள் ஜுபைதா 'கடகட'வென்று சிரித்து விட்டாள்.

"நான் மிஸிஸ் ஜமால்! எனக்கு மணமாகி இரண்டு வருஷங்களாகின்றன. என் கணவர் நேற்றுத்தான் குழந்தைகளை அவர்கள் பாட்டியம்மா வீட்டிற்கு அழைத்துப் போயிருக்கிறார்கள். இன்றைக்கு வந்துவிடுவார்கள். அவர்கள் வந்ததும், நாங்கள் இரண்டுபேரும் அசன் ராவுத்தர் வீட்டுக்கு வந்து உங்களை நாளைக்கு விருந்துக்கு அழைக்க வருவோம்" என்று ஜுபைதா கூறியவுடன் அஸீஸ் அதிர்ச்சியடைந்துவிட்டான்.

"குழந்தைகளா?"

"ஆம்! என் கணவரின் முதல் தாரத்திற்கு இரண்டு குழந்தைகள் உண்டு. முதல் தாரம் நான் ஆஸ்பத்திரி ஆரம்பித்த வருஷத்தில் இறந்துவிட்டது. அவர்கள் அப்பொழுதுதான் என் ஆஸ்பத்திரிக்கு கம்பவுண்டராக வந்தார்கள். குழந்

நீங்கள் கேட்டீர்களா?

சென்ற ஜனவரி 20, 27ம் தேதிகளில் இரவு மணி 9-45 முதல் 10 மணி வரையில் சிலோன் ரேடியோ நிலையத்தார் ஒலி பரப்பிய,

'யூசுப் ஜுலைகா' காவியச் சித்திரம்

என்ற நிகழ்ச்சியை நீங்கள் கேட்டீர்களா? இன்றேல் இந்த பிப்ரவரிமாதம் 3, 10, 17, 24 தேதிகளில் இரவு மணி 9-45 முதல் 10 வரையில் (திங்கட்கிழமை தோறும்) இலங்கை ரேடியோ நிலையத்தார் தொடர்ந்து ஒலி பரப்பும் இக் காவிய நிகழ்ச்சியைத் தவறாது கேளுங்கள். 'யூசுப் ஜுலைகா' காவியத்தை இயற்றித் தந்த கவிஞர் சாரணபாஸ்கரனாரே இந்தக் காவியச் சித்திரத்தையும் தயாரித்து உங்களுக்கு வழங்கியுள்ளார். கவிஞரின் குரலில் காவியச் சித்திரத்தைக் கேட்டு மகிழுங்கள்.

மீட்டர் 60:42

தைகள் மாயவரத்தில் அவர்கள் பாட்டி வீட்டில் வளர்ந்துவந்தன. குழந்தைகளைக் காண வாரம் ஒரு முறை தவருமல் மாயவரம் போய் விடுவார்கள். முதல் மனைவி இறந்த ஆறு மாதத்திற்குள் அவர்களும் டைபாயிடில் விழுந்துவிட்டார்கள். நான் இரவு பகலாக கவனித்து வந்தேன். ஒரு வாரம் நினைவு இழந்து பிதற்றியதெல்லாம், குழந்தைகள் நினைவாகவே இருந்தது. வியாதி குணமானவுடனே மீண்டும் அவர்கள் விவாஹம் செய்துகொள்ள வேண்டுமென்பதை நானே வற்புறுத்தினேன். அவர்கள் கேட்ட ஒரே கேள்வி: "எனக்கு மனைவி கிடைத்து விடுவாள்; என் பிள்ளைகளுக்குத் தாய் கிடைப்பாளா?"

இந்தக் கேள்விக்கு அப்பொழுது என்னுல் பதில் கூற முடியவில்லை. ஆனுல் அந்தக் கேள்வி ஆறு மாதம் வரை என்னைச் சுற்றிச் சுற்றிச் சுழன்றது. ஓர் ஆணின் தாயுள்ளம் எனக்குத் தாய்மை வேட்கையை எதிரொலிக்கச் செய்தது. நான் அவர்களிடம் சொன்னேன். ஆம், நானேதான் நேருக்கு நேராகச் சொன்னேன்! "நான் உங்கள் குழந்தைகளுக்குத் தாயாகத் தயாராக இருக்கிறேன்!" இதற்கு அவர்கள் அளித்த பதில் பொலபொலவென்று கண்ணீர் கொட்டியதுதான்! அதன் பிறகும் அவர்கள் ஒரு தடையும் சொல்லவில்லை. எங்கள் திருமணம் நடந்தது. இந்த இரண்டு வருட வாழ்க்கையில் "என் பிள்ளைகளுக்குத் தாய் கிடைக்குமா?" என்ற அவர்களின் கேள்விக்கு பதிலளித்து விட்டேன் என்பதை அவர்களே பலமுறை ஒப்புக்கொண்டுவிட்டார்கள்."

"இன்னும் அவர் கம்பவுண்டர் தானு?" என்று அஸீஸ் இடைமறித்தான்.

"அவர்கள் இப்பொழுது யூனனி டாக்டர்! ஆனுலும் நான் வழக்கம் போல் கம்பவுண்டர் ஸார் என்று தான் அழைத்து வருகிறேன்!" என்று சிரித்துக் கொண்டே பதில் சொன்னுள் ஜுபைதா. அவள் மடியில் படுத்து நன்ருக உறங்கிக் கொண்டிருந்த குழந்தை ஜலால் சிறிது உசும்பினுன்.

"ஜுபைதா! நான் நாளைக்காலை வருகிறேன்" என்று கூறிக்கொண்டு குழந்தையைத் தூக்கக் கையை நீட்டினுன்.

"ஏன் நாங்கள்தான் எட்டரை மணிக்கெல்லாம் உங்களை அழைக்க அசன் ராவுத்தர் வீட்டுக்கு வருகிருேமல்லவா? அப்பொழுது என் மருமகனையும் கொண்டுவருகிறேனே!" என்று உரிமையோடு ஜுபைதா விடுத்த வேண்டுகோளை மறுக்க அஸீஸுக்கு வலுவேது?

மறுநாள் டாக்டர் ஜுபைதா வீட்டிலிருந்து விடைபெற்றுத் திரும்பும் பொழுது ஜுபைதாவை இறுகத் தழுவிக்கொண்டு இதயத்தைப் பிரதிபலிக்கும் கண்களின் களங்கமற்ற ஒளியோடு,

"மச்சிக்கு அடுத்த வருஷம் ஆண் குழந்தை பிறக்க வேண்டும்" என்ருள் லதீபா. பக்கத்திலே நின்று கொண்டிருந்த யூனனி டாக்டர் ஜமால்,

"தங்கச்சி! பெண் குழந்தை பிறக்கட்டும்னு துவாக்கேளும்மா. அப்பத்தான் உன் மகன் ஜலாலுக்குப் பெண்கிடைக்கும்! "என்று சொல்லி கல கல வென்று சிரித்தார். அதைத் தொடர்ந்து ஜுபைதாவின் நாணங் கலந்த நகைப் பொலியும், லதீபாவின் கள்ளங் கபடற்ற சிரிப்பொலியும் அந்த அறையில் பரந்து நிறைந்தன. அந்தச் சூழ்நிலையில் என் அரை குறைத் தத்துவங்கள் எழுப்பிவந்த சிறு எதிரொலி தேய்ந்து மறைந்து விட்டது! ★

மார்க்க மேதை மறைந்தார்

★

அல்ஹாஜ் மௌலவீ அப்துஸ் ஸமத் நத்வீ

சென்ற நூற்றுண்டாக இஸ்லாமிய ஞான உலகிலே ஒளிச்சுடராகப் பிரகாசித்து வந்த ஹலரத் ஷெய்குல் இஸ்லாம் மௌலாஞ ஸய்யித் ஹுஸைன் அஹ்மத் மதனீயவர்கள் 4-12-57ல் வபாத்தான செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம் (இன்ஞ லில்லாஹி......)

மக்களெனப் பிறந்தோர் மாண்டதும் அவர் பெயரும் காலவெள்ளத்தில் கலந்து, கரைந்து, மறைந்து விடுகிறது. ஆனல் இதற்கு விதி விலக்காக, உலகின் அறிவுச் சின்னமாக விளங்கும் உத்தமர் பட்டியலிலே உயர் இடம் பெறுபவர்கள் மௌலாஞ மதனீ. அன்னவர் புகழ் இந்திய நாடுதாண்டி அனைத்துலகிலும் பரிமளித்தது.

மௌலாஞ அவர்கள் மார்க்கக் கல்வி கேள்விகளில் தலைசிறந்து விளங்கியவர்; அருள் நபியவர்களின் அருங்குணங்களைப் பூரணமாகப் பேணியவர்; தூய நோக்கும், கலப்பற்ற எண்ணமும் நிறைந்தவர். மனிதப் பண்பும், மலர்ந்த முகமும் வாய்க்கப் பெற்றவர். இந்திய விடுதலை வீரர்களின் தளபதி; தேவ்பந்து தாருல் உலூம் என்னும் இஸ்லாமிய கலாபீடத்தின் வேந்தர், 'ஹதீது கலைகளில் தேர்ச்சிமிக்கோர்,' அரபி, உர்தூ பார்ஸீ மொழிகளில் புலமை வாய்ந்தவர்.

தேவ்பந்த் அரபிச் கல்லூரியை நிறுவிய காஸிமுல் உலூம் மௌலாஞ காஸீம் நானூத்தவி; குத்புல் இர்ஷாத் மௌலாஞ ரஷீத் அஹ்மத் கங்கூஹீ; குத்புல் ஆலம் ஷெய்குல் ஹிந்த் மௌலாஞ மஹ்மூதுல் ஹஸன் [ரஹ்] ஆகிய பெரியோரின் பிரதிநிதி என்ற முறையில் மார்க்கம் பேணுதலில், அரசியல் மார்க்க, தேசப் பணியில் தன்னிகரில்லா உத்தமர். இந்திய அரசாங்கம் வழங்கிய பட்டத்தையும் துறந்த பற்றற்றவர். தர்வேஷுகளுள் ஓர் அரசியல் ஞானியாக; அரசியல் ஞானிகளுள் ஓர் ஆத்மார்த்த வழிகாட்டியாக; தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹு ஆகிய மார்க்கக் கலைகளின் ஒளிவிளக்காக; நேர்வழியின் இமாமாக மௌலாஞ அவர்கள் திகழ்ந்தார்கள்.

சென்ற 14 நூற்றுண்டு காலத்தில் மதீஞ முனவ்வராவில் அண்ணல் நபியவர்களின் புனித ரௌலா ஷரீபின் அருகே அமர்ந்து கொண்டு, அண்ணலாரின் அருள் மொழிகளை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தவர்களில் முதல்வர் இமாம் மாலிக் இப்னு அனஸ் (ரஹ்); இரண்டாமவர் மௌலாஞ மதனீ. இமாம் மாலிக் ஏதாவதொரு ஹதீஸை மாணவர்களுக்கு எடுத்துக் கூறும் போது,—"கால ஹாதன்னபீ......"–இந்த நபியவர்கள் அருளிஞர்கள்—என்று நாயகத் திருமேனியின் அடக்கத் தலத்தைச் சுட்டிக் காட்டி, பொருளுரைப்பது வழக்கம். இவ்வாறே மௌலாஞ மதனீயும் 18 வருட காலம் நாயகத்தின் ரௌலாவினருகே அமர்ந்து ஹதீது கலையை போதித்து வந்தார்கள் என்ருல், மறைந்த இம்மேதையின் பெருமையை அறிந்து கொள்ளலாம்.

இத்தகைய உத்தம அறிஞர்கள் மரணம் பற்றித்தான் எம்பெருமாஞர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் "மவ்துல் ஆலிமி; மவ்துல் ஆலமி"—அறிஞர் மரணம்; அவனியின் மரணம் என மொழிந்துள்ளார்கள் போலும். மௌலாஞ அவர்களின் மரணச் செய்தி கேட்டதும் நாடெங்கும் ஜஞஸாத் தொழுகைத் தொழப்பட்டது. அன்ஞரின் ஆத்மா சாந்தியடைய அல்லாஹ் (ஜல்) அருள் செய்வாஞக.

வேண்டாத வாழ்த்து!

—'ஹகீம்'—

"ஆயிரத் தோ ரிரவுகள்" என்னும் அரபிக் கதைகளிலே கலீபா ஹாரூன் அர் ரஷீதுடன் அவருடைய மந்திரியான ஜாபர் பர்மக்கி, பணியாள் மஸ்ரூர் ஆக மூவரும் சேர்ந்து மாறுவேஷத்தோடு இரவு நேரங்களில் பக்தாது நகரத்தைச் சுற்றிவரும்போது இடையிடையே ரசமான சம்பவங்களில் அவர்கள் ஈடுபட நேர்ந்ததைப் பற்றி நாம் படித்திருக்கிறோம்.

ஜாபர் பர்மக்கீயின் பாட்டனுரான காலித் இப்னு பர்மக் என்பவரும் தந்தை யஹ்யாவும், ஹாரூன் ரஷீதுக்கு முன்னால் ஆண்ட அப்பாஸிய கலீபாக்களுக்கு மந்திரிகளாக இருந்து சிறந்த சேவை செய்திருக்கிறார்கள். ஹாரூனுடைய ஆட்சியின் சிறப்புக்குக் காரணம் ஜாபரின் திறமையே என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள்.

பதினேழு வருஷகாலம் மந்திரி பதவி வகித்த ஜாபரிடம் சிறுகச் சிறுக அரசாங்க அதிகாரம் அத்தனையும் சேர்ந்து விட்டது. மாகாணங்களின் கவர்னர் பதவியாயினும் அரண்மனையில் பொறுப்புள்ளபதவி எதுவாக இருந்தாலும் அவற்றிற்கு பர்மக்கி குடும்பத்திலிருந்தே ஆட்கள் நியமிக்கப்பட்டு வந்தனர்.

தனி மனிதரின் செல்வாக்கு வளர வளர, கூடவே மற்றவர்களின் பொறாமையும் வளர்வது இயற்கை தானே!

கலீபா ஹாரூன் ரஷீதின் "காதைக் கடிக்கத்" தொடங்கினார்கள் ஜாபரின் விரோதிகள். அப்பாஸிய கலீபா வம்சத்தையே ஒழித்து விட சதித்திட்டம் வகுத்துக்கொண்டிருக்கின்றனர் பர்மக்கி குடும்பத்தினர் என்று கலீபாவின் காதில் ஓதப்பட்டது.

அதற்குமேல் சந்தேகக் கண்களோடு எதையும் நோக்கத் தலைப்பட்ட ஹாரூன் ரஷீதுக்கு பர்மக்கீ பரிவாரத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரின் நடவடிக்கையும் சூழ்ச்சிகள் நிறைந்ததாகவே தோன்றியது. இனியும் இப்படியே விட்டுவைத்தால் நிச்சயமாக ஆபத்து விளையும் என்று நினைத்துவிட்டார் கலீபா.

பாரெங்கும் புகழ அரசுரிமை கொண்டுவாழ்ந்த பர்மக்கீயரின் திடீர் வீழ்ச்சியானது, "ஆயிரத்தோரிரவின் கதாநாயகி"யான ஷஹ்ரஸாதீ கூறுவது போல, உலக வரலாற்றில் எங்குமே இணைகாண முடியாத ஒரு சோகச் சம்பவமாகும்.

ஓரிரவு திடீரென்று ஜாபரின் முன்பாக அவர்களுடைய நகர்வலத் துணைவனான பணியாள் மஸ்ரூர் வந்து நின்றான்.

"உங்களுடைய தலையைக் கொய்து வரும்படி கலீபா எனக்கு உத்தரவிட்டிருக்கிறார்!" என்றான் அவன். ஹாரூன் ரஷீதின் ஆணை நிறைவேறியது!

அதையடுத்து ஜாபரின் வயது முதிர்ந்த தந்தையான யஹ்யா, அவரைத் தந்தை யென்றழைத்து வந்த ஹாரூனின் கட்டளைப்படி சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஜாபரின் சகோதரர்களும், ஏன் பர்மக்கீ குடும்பத்தைச் சேர்ந்த எந்த ஆண்மகனுமே ரஷீதின் கோபத்திற்குத் தப்பவில்லை.

கலீபாவின் செய்கைக்கு வேறு பல காரணங்களும் கற்பிக்கப் பட்டுள்ளன.

அவருடைய எஞ்சிய காலம் முழுதும் ஹாரூன் ரஷீத் தாம் அவசரப்பட்டுச் செய்து விட்ட கொடுஞ்

செயலை எண்ணி மனம் நொந்திருந் தார் என்றும் சொல்லப்படுகிறது.

இவையாவும் வேறு கதைகள்!

* * *

ஒருநாள், கலீபா ஹாரூன் அர் ரஷீதின் சபைக்குள்ளே மூதாட்டி யொருத்தி பிரவேசித்தாள்.

நுழைந்தவுடனேயே அவள் கலீபாவுக்கு பின்வருமாறு வாழ்த்துரை வழங்கத் தொடங்கினாள்.

"ஹாரூன், உன்னுடைய கண்கள் அமைதி பெறட்டும்!"

"அல்லாஹ் உனக்கு அளித்துள்ள அருட் கொடைகள் யாவற்றையும் நீ நன்கு அனுபவித்துச் சுகிப்பாயாக!"

"உன்னுடைய நல்ல வாழ்வு விரைவிலேயே அதன் உச்ச நிலையை அடையுமாக!"

"ஹாரூன் ரஷீத் மிகச் சிறந்த ஆட்சியாளன், நீதியில் தவறுதவன் என்று எல்லோரும் போற்றட்டும்!"

கலீபா பொறுமையிழந்து குறுக்கிட்டார். "அம்மா, தாயே, வாழ்த்தியது போதும்! நீ யார் என்பதைச் சொல்!"

"நானு, உன்னுடைய தனிக்கருணைக்குப் பாத்திரமான பர்மக்கி குடும்பத்தைச் சேர்ந்தவள்!" என்று கூறி கலீபாவை அலட்சியமாய்ப் பார்த்தாள்.

அவளுடைய விழிகளின் ஒளியைக் கண்கொண்டு காண முடியாமல் ஒரு கணம் தவித்தார் கலீபா.

பார்வையை வேறு திக்கில் திருப்பிக் கொண்டு, "அன்னையே, அல்லாஹ்வின் நாட்டப்படி நடந்து விட்டதை மறந்து, மன்னித்து விடு. உங்கள் குடும்பத்தாரிடமிருந்து பறிமுதலான சொத்து, பொருள் யாவும் விரைவிலேயே உங்களிடம் திரும்ப ஒப்படைக்கப்படும். நீ போகலாம்!" என்று விடைகொடுத்து அவளை அனுப்பினார், ஹாரூன். கிழவி சென்றதும் சற்றுநேரம் ஆழ்ந்து சிந்தித்திருந்த பிறகு, கலீபா சபையினரைப் பார்த்து, "அம் மூதாட்டி என்ன கூறினாள் என்பதை யாராவது கவனித்தீர்களா?" என்று கேட்டார்.

"ஏன், எல்லோருக்கும் நன்றாகக் காதில் விழும்படி தானே பேசினாள். வந்தவுடன் தங்களை வாயார வாழ்த்தினாள்!" என்றார் ஒருவர்.

"ஆமாம்!" என்று தலையசைத்து ஆமோதித்தார்கள் மற்றவர்களும்.

"உங்களுக்குப் புரிந்தது அவ்வளவு தானா!"—ஏளனமாய்ச் சிரித்தார், ஹாரூன்.

ஒன்றும் புரியாமல் ஒருவரையொருவர் பார்த்து விழித்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

"அவள் கூறியவற்றின் உண்மையான கருத்துகளை விளக்குகிறேன், கேளுங்கள்!" என்று கலீபா சொல்லத் தொடங்கினார்.

"என் கண்கள் அமைதி பெறட்டும் என்று கூறினாள் அல்லவா? கண்கள் அமைதி பெறுவது எப்போது? மரணத்திற்குப் பிறகு தானே! நான் சீக்கிரமே சாக வேண்டுமென்ற தன்னுடைய சாபத்தை அவ்வாறு வெளியிட்டாள் அவள்.

"அவளுடைய அடுத்த வாழ்த்து குர்ஆனின் வசனம் ஒன்றைக் கருத்தில் கொண்டு கூறியதாகும். "நாம் அளித்தவற்றைக் கொண்டு அவர்கள் (நிராகரிப்போர்) சுக போகங்களில் மூழ்கி (நம்மை மறந்து) விட்டிருந்தபோது நம்முடைய தண்டனை அவர்களைப் பற்றிப் பிடித்தது" என்று இறைவன் கூறுவது போல அவனுடைய தண்டனைக்கு நான் ஆளாக வேண்டுமென்பது அவள் விருப்பம்.

"வளர்ச்சியானது பூரணத்துவம் அடையும் வரையிலேயேதான். எதுவும் அதன் உச்சத்தை அடைந்து விட்டதென்றால் வீழ்ச்சி துவங்கி விட்டதென்பதே அதன் பொருளா

கும்!" என்று கூறும் பிரசித்தமான அரபிக் கவிதை உங்களுக்கு நினைவில்லையா? அதை மனத்தில் கொண்டே என்னுடைய நல்வாழ்வு அதன் உச்சநிலையை விரைவில் எய்த வேண்டும் என்று ஆசித்தாள் அவள்; ஏனென்றால் அதன் பின்னர் என் வீழ்ச்சி துவங்கி விடுமல்லவா?

"இனி அவளுடைய கடைசி ஆசியைப் புரிவதும் கடினமல்ல. என்னுடைய ஆட்சியும் நீதியும் இனிமேல் தான் புகழப் படவேண்டுமென்றால் இதுவரைக்கும் அவை போற்றத்தக்க முறையில் இல்லை என்று குத்திக் காட்டுவது தானே அதன் நோக்கம்.''

இவ்வாறு ஹாரூன் கூறிமுடித்து ஒரு பெருமூச்சு விட்டபின், அவருடைய ஆட்சிமன்றத்திலே வெகு நேரம் நிசப்தம் நிலவியது! ★

பிராண மித்ரா

தாது விருத்திக்கு சிறந்த மருந்துகள்

பலஹீனத்தையும், நபும்சகத்தையும், போக்கி, ரத்த ஓட்டத்தைப் பெருக்கி, நரம்புத் தளர்ச்சியைக் களைந்து, சிறுநீர் கழிக்கும் போது சிறுநீருடன் சுரத நீர் ஒழுக்கும், வெள்ளை, வெட்டைகளையும் நீக்கி, தாது விருத்தியை யூட்டவல்ல வீரிய சக்தி படைத்த மருந்துகள். இல்லற வாழ்க்கையில் விளைந்துள்ள எல்லாக் கஷ்டங்களையும் இவை உடனே நிவர்த்தி செய்துவிடும். பத்தியமே கிடையாது.

'பிராணமித்ரா' (3 மருந்துகள் சேர்ந்த ஸெட்) 40 நாட்களுக்கு விலை ரூ. 18·75. 20 நாட்களுக்கு ரூ. 12·75. முன் பணம் அவசியம் ரூ. 10/- அனுப்பவேண்டும். 40 நாள் மருந்து: இலங்கை (சுங்கத் தீர்வையுட்பட) ரூ. 25·87. மலாய் நாட்டுக்கு 40 ஷிலிங் (பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்) ஏர்மெயில் ரிஜிஸ்டர் கவரில் வைத்து அனுப்பவும். முன்பணமின்றி ஆர்டர்கள் கவனிக்கப்பட மாட்டா.

தனிப்பட்ட நபர்கள் தமக்குரிய பூரா வியாதியைத் தெரிவித்து, 15 ந. பை. ஸ்டாம்பு வைத்து எழுதவும். மலேயாவாசிகள் 1 ஷிலிங் B. P. O. அனுப்பவேண்டும். எமது கேட்லாக் தேவைப்படுவோர் 15 ந. பை. ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

DR. K. K. RAMAN (REGD.) டாக்டர் கே. கே. ராமன் (ரிஜிஸ்) (பி)
INDIAN MEDICAL PRACTITIONER இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்
Kerala Vaidya Sala கேரள வைத்திய சாலை
POST BOX 473. CHOOLAI. MADRAS-7 தபால் பெட்டி 473. சூளை. சென்னை-7.

நேரில் வர :—வாத்தியார் கந்தபிள்ளை தெரு,
சூளை போஸ்டாபீஸ் சமீபம், சென்னை-7.

ஹலீமா பேசினாள்

முன் இதழ் தொடர்ச்சி

ஜமீலா

“என்ன தான் நடந்தது!” பிசைந்து கொண்டு மலங்க மலங்க விழித்தாள் ஹலீமா.

“உன்னை ‘அண்டின வனை’க் கொன்றுவிட்டான் அந்தப் பாவி! அவன் நல்லா இருப்பானா?”—ரஹ்மத்துல்லா எழுப்பிய ஓலம் அந்த ஓட்டு வீட்டையே கிடுகிடுக்க வைத்தது.

“பாவாஜான்”—உடலும் உள்ளமும் படபடக்க தந்தையை இறுகக் கட்டிக் கொண்டாள் ஹலீமா. சூறுவளியில் சிக்கிய தென்னை மட்டை போல் அவள் மேனி சிலிர்த்தது.

“தன் மகனைத் தூண்டிவிட்டு அந்த அப்பாவிப்பையன் உனக்குத் ‘தலாக்’ கொடுத்து விடும்படி சகல பந்தோபஸ்துகளையும் செய்து விட்டான் அந்தக் கேடு கெட்ட ஹராமி. நல்லா இருப்பானா அவன்! இதயம் இரு கூறுகளாகப் பிளந்து விடும்படி கதறினார் அந்த ஏழை ரஹ்மத்துல்லா.

“இருக்காது பாவாஜான். இருக்கவே இருக்காது”— பதறினாள் ஹலீமா, ஒன்றும் தோன்றாது.

“அடி பேதைப் பெண்ணே!” கழுத்தை வெடுக்கென்று அசைத்தார் ரஹ்மத்துல்லா.

“அவருக்கோ அவர் குடும்பத்துக்கோ நெஞ்சறிய ஒரு பாவமும் நான் செய்யவில்லையே”— விதிர்விதர்த்துப் போன அந்த வஞ்சிக் கொடி துவண்டு பிரலாபித்தது.

“உலகத்தில் நியாயம் இல்லாமல் அக்கிரமங்கள் நிகழும்போது உன் இதயத்தின் ஓலத்தை யாரம்மா கேட்கப் போகிறார்கள்? உன் உடல் நிலையை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு அல்லாஹுத்தாலா பிணைத்த உன்னையும் உன் கொழுநனையும்பிரித்து விடப்போகிறார்கள் அந்தப்படுபாவிகள். அந்த அநியாயச் செய்தியை காதில் போடத்தான் இந்தக் கடிதம் வந்திருக்கம்மா”

மகளை இறுகக் கட்டிக் கொண்டு பொக்கை வாயைத் திறந்து கொண்டு தேம்பித் தேம்பி அழுதார் பெண்ணைப் பெற்ற அந்தப் ‘பாக்கியசாலி’.

அன்றிரவு தந்தையும் மகளும் வடித்த கண்ணீர் வெள்ளம் கூடத்தையே கழுவி விட்டது. தன் மகளுக்கு அந்தப் பயங்கரமான ‘விபரீதம்’ நேராத வண்ணம் சகலவிதமான பிரயத்தனங்கள் செய்தார் ரஹ்மத்துல்லா. என்னென்னவோ குக் கிராமங்களுக்குத் தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்று தனக்குப் பரிச்சயமான பிரமுகர்களையும் மௌலவி சாஹிபுகளையும் சந்தித்து பிளவுபட்ட தன் இதயத்தைத் திறந்துகாட்டி அங்கு கசிந்தோடும் ரத்தக் கண்ணீரைச் சுட்டிக் காட்டி தன் சம்பந்தியிடம் அவர்கள் முறையிடும்படி அவர் கெஞ்சாத நாளில்லை. ‘தக்தீர்’ தன் சிலம்பாட்டத்தைத் தொடங்கி விட்டால் அதன் கேளிக்கையை நிறுத்துவதற்கு கேவலம் ஒரு மனிதப் பிறவியினால் முடியுமா? ரஹ்மத்துல்லாவின் கால்கள் தளர்ந்து விட்டன. கண்கள் பார்வையை இழந்தன.

நெஞ்சில் உண்டான பிளவு விரிவடைந்தது. படுக்கையில் படுத்தவர் போர்வையை இழுத்து நிரந்தரமாக அக் கட்டிலுக்கே உரியவராகப் போய்விட்டார்.

எத்தனையோ ஜமாப்ந்திகளைக் கூட்டி சிக்கலான பிரச்னைகளை 'பைஸல்' செய்த அந்த 'இரும்புத் தலை' கலெக்டர் வஹாப் சாஹிப் உள்ளூர் காஜி சாஹிப், கத்தீபீத், சில தெரிந்த 'உறவினர்கள்' இவர்களை ஓர் இடத்தில் கூட்டி, "தம்பதிகள் இனி மேல் கணவனும் மனைவியுமாய் ஒரு கணமும் ஒத்து வாழ இயலாது" என்ற 'காரணத்தை' அடிப்படையாக வைத்து 'காரியத்தை' அமுல் படுத்தி விட்டார். 'தலாக்' நிறைவேறிய பின் தன் மருமகள் ஆசையுடன் கொண்டு வந்த நகைகளையும் பொருள்களையும் 'மஹர்' கட்டணத் தொகையுடன் தாராள மனப்பான்மையுடன் ரஹ்மத்துல்லாவுக்கு திருப்பி அனுப்பி விட்டார் அந்த உபகாரி வஹாப் சாஹிப்!

மூன்று மாதங்கள் இதய துடிப்புடன் இயங்கி மாண்டன.

பண்ருட்டியில் ரஹ்மத்துல்லாவும் ஹலீமாவும் வேதனை வெள்ளத்தில் மூழ்கி தத்தளித்துக் கொண்டிருந்த சோகமயமான வேளையில் சென்னையிலுள்ள நுங்கம்பாக்கத்தில் கரீம் ஐ. ஸி. எஸ். க்கு மறு விவாகம் ஒரு தடபுடலுமின்றி நடந்தது! இந்தப் புண்ணிய வைபவத்தில் முக்கிய பங்கெடுத்துக் கொண்ட வஹாபின் மூத்த மகள் குர்ஷித் அந்த மங்கள தினத்தன்று நடத்திய ஆர்ப்பாட்டம் விவரிக்க இயலாது. கலெக்டர் சாஹிப் தன் சிரத்தைக் கவிழ்த்துக் கொண்டு மூலை முடுக்குகளில் ஒளிந்த வண்ணம் காலத்தைக் கழித்ததை பலர் கவனிக்காமல் போகவில்லை.

மறு வாரமே தன் புது மணப் பெண்ணை உடன் அழைத்துக் கொண்டு ஷில்லாங்குக் கிளப்பினான் கரீம். ஸப்-கலெக்டரின் பேகமான அந்த மங்கை ஆறு மாதத்திற்குள் அந்த நகரில் ஓர் ஒப்பற்ற சமூக ஊழியை என்ற பெயரை பெற்று விட்டாள். பி. ஏ. பட்டதாரியான அவள், சூழ்நிலையை ஆய்ந்தோய்ந்து அங்குள்ள பெரிய 'புள்ளிக'ளின் மகளிருடன் பழகி வந்தாள். சதா கலகலப்பாக தன்னோடு பழகி வரும் தன் 'பியாரி'யின் மதிவதனத்தில் தோன்றிய துயர ரேகைகளை ஜாடை மாடையாக கவனித்து வந்த கரீம் தன் காதலியின் நெஞ்சில் புகைவிடும் அவலத்தின் காரணத்தை அறிய முடியாது மனம் நொடிந்து போனான். நண்பர்களின் யோசனைப்படி தன் இல்லாளின் முதல் பிரசவத்தை நகரிலுள்ள 'நர்ஸிங் விடுதியில்' நடத்திவிட முடிவுகட்டி ஷர்புன்னிஸாவை சேர்ந்து விட்டான். தம் மகனின் இருப்பிடத்திற்குப் போக முடியாது சென்னையில் ஏக்கத்தில் அமிழ்ந்திருந்த வஹாபுக்கு ஒரு பேரிடி காத்துக் கொண்டிருந்தது.

ஷில்லாங்கிலிருந்து வந்த தந்தியைப் பிரித்ததும் மின்னல் அவர் நெஞ்சைத் தாக்கிற்று. எழுத்துக்

களின்மீது அவர் பார்வை ஓடியதும் கட கட வென்று தொடர்ந்த இடி முழக்கம் அவர் இதயத்தைப் பிளந்தது.

"யா ரஹ்மானே! இது உன் தண்டனையா!" என்று அரற்றிக் கொண்டு விக்கிவிக்கி அழலானார் வஹாப். பிரசவத்தில் சிக்கல்கள் பல உண்டாகி இறுதியில் தன் நாயகனிடம் கடைசி 'சலாம் வைத்து விடை பெற்றுக் கொண்டாள் ஷர்புன்னிஸா என்ற செய்தி அந்த ஓய்வு பெற்றவரை பைத்தியமாக்கிவிட்டது. அவள் உயிர் பிரிவதற்கு முன் ஷில்லாங்கில் நிகழ்ந்த நாடகம் பின் வருமாறு:



"நீங்கள் உத்தமர். உங்கள் அன்பும் ஆசையும் எனக்குத் தெரியாதா? இனி உங்கள் நிழலில் நான் தங்குவேன் என்ற நம்பிக்கை எனக்கில்லே. உங்கள் கைகளினால் ஒரு பிடி மண் என் 'கபர்' மீது வீழ்ந்து விட்டால் நான் பாக்கியசாலி ஆவேன். இனி நான் மன்றாடிக் கேட்கப் போவதும் இது ஒன்றுதான். ஒரு உத்தமி இருக்கவேண்டிய இருப்பிடத்தைக் கைப்பற்றிய இந்தப் பாவியின் வார்த்தைகளை நீங்கள் தட்டக் கூடாது. எந்தப் புண்ணியவதியை அநியாயமாகவும் அக்கிரமாகவும் ஒதுக்கித் தள்ளிவிட்டீர்களோ—அந்த மாதர்குல மாணிக்கம் ஒருகால் மறு விவாகம் செய்து கொள்ளாமலிருந்தால்—அந்தப் 'பொறுமையின் சிகரத்தை' திரும்பவும் உங்கள் 'பீவி'யாக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று நிதானமாக நவின்று சிரத்தை கணவனின் மடி மீது சாய்த்த அந்தத் தையல் மந்தஹாஸம் தாண்டவமாடும் இதழ்களுடன் இமைகளையும் இறுதியாக மூடிக்கொண்டாள்.

துணைவியின் மறைவு கரீமைப் பித்தனாக்கி விட்டது. 'தீவானு' மனுஷன் போல் தோற்றமளித்த அவனை நீண்ட நாள் 'ரஜா'வில் தெற்கே போய் விடும்படி சகா உத்தியோகஸ்தர்கள் வற்புறுத்தினார்கள். மதி மருண்டு கதி கலங்கி உடைந்த உள்ளத்துடன் கரீம் ஷில்லாங்கை விட்டுப் புறப்பட்டான்.

சென்னைக்குத் திரும்பி வந்து ஒரு வாரமாகியும் கரீமின் நடத்தை விபரீதமாகவே யிருந்தது. சகோதரிகள், உறவினர்களுடன் சரியாக அவன் வாய் கொடுத்துப் பேச வில்லை. தந்தையிடம் கூட அவன் விலகிய வாறு பழகலானான்.

தாரமிழந்த தம்பிக்கு ஆறுதலளிக்க குடும்ப சகிதம் வந்திறங்கிய சகோதரிகள் இரண்டு நாட்கள், மௌனமாக இருந்து விட்டு, தங்கள் 'இப்லீஸ்' சேஷ்டைகளை மறுபடியும் காட்டலானார்கள். "ஏதோ விதி செய்த 'ஜுலுமினால்' மூன்றாம் தாரமாக தம்பி 'நிக்காஹ்' செய்து கொள்ள நேரிடுகிறதே!" என்று வருத்தமாகப் பேசுவது போல் கல்

யாணப் பேச்சிற்குப் பீடிகை போட்டார்கள் அந்த குணவதிகள்!

மயான அமைதியுடன் கழிந்த ஒருமாதம் இறுதியில் சமாதியடைந்தது.

காலே 'பஜ்ர்' தொழுகையை முடித்துக் கொண்டு மஸ்ஜிதிலிருந்து திரும்பிய வஹாப் சாஹிப் மிக்கக் களைப்புடன் காணப்பட்டார். அவர் முன் தோன்றினான் கரீம்.

"என் ரஜா இந்த மாதக் கடைசியோடு முடிந்து விடுகிறது." என்றான் கரீம்.

"மேலும் ஒரு மாதம் அதை நீட்டி விடேன்" என்றார் தந்தை, பாசம் பொங்கும் நேத்திரங்களால் தன் பிள்ளையை உற்றுப் பார்த்துக் கொண்டு.

"நான் போய் விடுகிறேன். இங்கே எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை"—உதடுகளைச் சுளித்தான் கரீம்.

"இது உன் தகப்பன் வீடு. கூடப் பிறந்த சகோதரிகள் வேறு இருக்கிறார்கள்."

"இங்கே என் மனத்திற்கு நிம்மதி இல்லை பாவாஜான்"

"அதற்கு வழி செய்யாமலா உன்னை வெறுமனே நாங்கள் அனுப்பப் போகிறோம்?"—ஆசையுடன் மகனை நோக்கினார் வஹாப்.

"என்ன?"–திடுக்கிட்டான் கரீம்.

"ஏன் பதற்றமடைகிறாய்? ஆண்டவன் கைப்பொம்மையாகிய 'இன்ஸான்' அந்த அருளாளனின் திருவிளையாடல்களுக்கு முன்னால் என்ன செய்ய முடியும்? உன் நஸீப் 'மூன்றும் முறை'! நீ ஆண் பிள்ளை; படித்தவன் பொறுப்புள்ள பெரிய ஆபீஸர். 'கப்சிப்' என்று ஒரு கலாட்டாவுமில்லாமல் கல்யாணம் செய்து கொண்டு போய்விடு. அதற்கான 'நடவடிக்கைகளில்' உன் சகோதரிகள் ஏற்கெனவே இறங்கி விட்டார்கள்!"

"எனக்குப் பூர்ண சம்மதந்தான் பாவாஜான். என் விருப்பப்படி அந்த 'நிக்காஹ்' நடந்துவிட்டால்."—கரீம் நிதானமாகப் பேசினான்.

"அதற்கென்ன? சீக்கிரம் 'ஜட் பட்' என்று முடித்து விடுகிறேன்"—நிமிர்ந்து உட்கார்ந்தார் வஹாப் சாஹிப்.

"அது எப்போதாவது நடக்கட்டும். நாம் செய்துவிட்ட மகா பாதகச் செயலுக்குப் பிராயசித்தம் ஒன்று பண்ணிவிட்டால் போதும்."

"பிராயசித்தமா? இது என்ன தமாஷா!" திடுக்கிட்டார் வஹாப்.

"எந்த அபலையை அநியாயமாக விரட்டி அனுப்பினோமோ அந்த அப்பாவியை மறுபடியும் துணைவியாக ஏற்றுக்கொள்ள நான் தீர்மானித்து விட்டேன்!"

இதைக் கேட்டதும் ஆயிரம் கருந்தேள்கள் ஒரே சமயத்தில் கொட்டினாற்போல் வஹாபுக்குப் பட்டது. கெளுத்தி மீன்போல் துள்ளிக் குதித்தெழுந்தார்.

"அந்தக் குட்டியை நினைந்தா வாடுகிறாய்?"—இரைந்தார் வஹாப். புழக்கடைப் பக்கமிருந்த சகோதரிகள் இருவரும் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்து தந்தைக்கும் தனயனுக்கும் நடுவில் ஒன்றும் விளங்காமல் நின்றனர்.

"நீங்களும் கேளுங்கள், இந்தக் கதையை. அந்த ஹலீமாவை மறு நிக்காஹ் செய்துகொள்ள உன் தம்பி நிச்சயித்து விட்டானாம்!" ஏளனத்துடன் கடகடவென்று உரக்கச் சிரித்தார் வஹாப்.

"அட ரஹ்மானே!"—இரண்டு நாரீமணிகளும் ஒரே ஸ்தாயியில் பூனைகள்போல் கூப்பாடு போட்டார்கள்.

"பேதமையினால் புரிந்துவிட்ட பாதகச்செயலுக்கு பரிகாரம் தேடித்தான் நான் இங்கே வந்தேன். என் எண்ணத்தை யாராலும் மாற்ற முடியாது"—ஆர்ப்பரித்தான் கரீம்.

நீங்கள் கோவைக்கு வரும் போது மக்கள் உணவு விடுதியை சந்தியுங்கள்.

"கரீம் உன் லக்ஷ்யம் நிறைவேற வேண்டுமானல் அதனல் விளையும் விபரீதங்களைத் தெரிந்துகொள். ஐ. ஸி. எஸ். பாஸ் பண்ணிவிட்டால் போதுமா? உலக அனுபவம் வேண்டாமா?'' என்ருர் வஹாப், பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டு.

"எல்லாம் அறிந்து தான் இந்த முடிவுக்கு வந்தேன் பாவாஜான்.''

"உன் தந்தைக்கு முன்னல் நின்று கொண்டு பேசுகிருய் என்பதை மறந்து விடாதே. பெற்றவன் உனக்கு அறிவுறுத்துவது கடமையாகும். ஹலீமாவுக்கு 'தலாக்' கொடுத்து ஒரு வருஷம் உருண்டோடி விட்டது. அவளுக்கு இன்னும் மறுமணம் நடக்கவில்லை என்பதை நான் அறியாமலில்லை. நீயோ பிடிவாதக்காரனகி விட்டாய். இது தான் நான் கண்ட பலன். தொலையட்டும். நம் ஷரியத், ஹதீஸ்படி நடக்க வேண்டிய விஷயம் இது என்பதை ஞாபகம் வை. எத்தனை சோதனைகளைக் கடக்கவேண்டும் என்பதை நீ அறிவாயா? என்ன சொல்லுகிருய்? இனி உன் இஷ்டம். ஏன் இந்த வம்புத் தொல்லை?''-வஹாபின் நெற்றிச் சுருக்கங்கள் நெளிந்தாடின. நெடுமூச்சு அவர் உடலை உறுக்கியது.

"எல்லாம் அலசிப் பார்த்துத் தான் முடிவுக்கு வந்தேன் பாவாஜான்'' என்ருன் கரீம் தலையைக் கவிழ்த்தவாறு.

தந்தையையும் தம்பியையும் மாறி மாறி கோட்டான்கள்போல் பேந்தப் பேந்த பார்த்துக் கொண்டிருந்த சகோதரிகள் விரல்களை நொடித்துக் கொண்டு கீழ் உதடுகளை இறுகக் கடித்துக் கொண்டார்கள்.

"அட கரீம்! பெற்றவர் இவ்வளவு மாரடித்தும் பிடிவாதம் செய்கிருயே! குடும்பத்துக்கும் கௌரவத்துக்கும் இழுக்குக் கொண்டுவந்து ஊரார் நகைத்து 'மஜாக்' செய்யும்படி ஏதாச்சும் செய்து விடாதே'' என்றனர் அவர்கள் மிக்க மன மொடிந்தவராய்.

"என் தாழ்மையான வேண்டுகோள் மாத்திரம் நிறைவேருவிட்டால் இந்தக் கடிதத்தை நீங்களே தபாலில் சேர்த்துவிடுங்கள். இந்த வீட்டின் படிகளிலே கால் தூசியை உதறிவிட்டு நான் மறைந்து விடுகிறேன்'' என்று மிக்க உணர்ச்சியுடன் சொல்லி தன் பையிலிருந்த கடிதத்தை எடுத்து தன் தந்தையிடம் நீட்டினன் கரீம்.

கடிதத்தைப் படித்ததும் வஹாப் அரண்டு விட்டார். அவர் குல்லா எகிறிக் குதித்தது, "அட புத்தியில்லா புள்ளே! வேலையை ராஜிநாமாவா செய்துவிடப்போகிறே?... பேஷ்...பேஷ் எனக்கென்ன வந்தது. உன் எதிர்கால நன்மையைக் கருதி நானும் உன் சகோதரிகளும் மன்ருடினேம். உன் விதியை யார் மாற்ற முடியும். உன் இஷ்டப்படியே நடக்கட்டும்.'' என்று சொல்லிவிட்டு சிரத்தை இறுகப் பிடித்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்ருர் வஹாப்.

எதிர்பாராதவிதமாக கலெக்டர் வஹாபிடமிருந்து வந்த கடிதத்தைப் படித்தவுடன் ரஹ்மத்துல்லா திக்குமுக்காடிப் போனர். தாம் உண்மையில் இந்த புவனத்தில் இருக்கிருேமோ அன்றி சுவனத்துக்குச் சென்று விட்டோமோ என்ற பீதி அவரை உலுக்கி விட்டது.

"ஹலீமா......ஹலீமா......இங்கே சட்னு வாயேன்''—அவர் மகிழ்ச்சி தாளாது குரலை உரக்க எழுப்பியதும் அடுக்களையில் சமையலிலீடுபட்டிருந்த அவர் புத்திரி நழுவிய தாவணியைக்கூடச் சரிப்படுத்திக் கொள்ளாது ஓடோடி வந்தாள்.

"என் அருமை மகளே! அந்த 'பர்வர்திகார்' நம்மீது இரக்கம்

நீங்கள் கோவைக்கு வரும் போது பாம்பே பிரியாணி ஹோட்டலை சந்தியுங்கள்.

காட்டி விட்டான். இத்தனை மாதங்களாக அவலத்தில் ஆழ்ந்து கிடந்த உனக்கு நல்ல காலம் பிறந்து விட்டதம்மா!'' ஆனந்தம் தாளாது நா தழுதழுக்கப் பேசினார் ரஹ்மத்துல்லா.

மௌனம் சாதித்துக்கொண்டு திக்பிரமையுடன் நின்ற ஹலீமா தன் தந்தையின் பிடியில் சிக்கியிருந்த கடிதத்தைப் பார்த்து இமைகளைப் படபடவென்று கொட்டினாள்.

''ஹலீமா......உனக்கு நிக்காஹ் செய்து வைக்க இந்தக் கிழப்பயலுக்கு அதிர்ஷ்டம் வீட்டை நோக்கித்தேடி வந்துவிட்டதம்மா. இனி இந்த ஏழையின் ஆயுசு நீடிக்கத் தேவையில்லை.''–ரஹ்மத்துல்லாவின் முகமெல்லாம் மலர்ந்தது.

''எங்கிருந்து கடிதம் வந்திருக்கு பாவாஜான்?'' என்றாள் ஹலீமா தயங்கிய வண்ணம்.

''அதை நான் இப்போது கூற மாட்டேன். நாளன்னிக்கு அவர்கள் இங்கே வருகிறார்கள். அப்போது நீ கண்களை அகல விரித்துப் பார்த்துக்கொள் என் கண்ணு!'' என்றார் ரஹ்மத்துல்லா பரிவுடன். கலகலவென்று அவர் சிரிப்பைக் கிளப்பியதும் அவர் நேத்திரங்களில் சுரந்த மகிழ்ச்சி நீர், சுருக்கங்கள் பதிந்த கன்னங்களில் உருண்டோடிற்று.

ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு 'தலாக்' ஆகி இத்தனை மாதங்களாக துயரத்தில் தத்தளித்த தனக்கும் விடிவு காலமா? தன்னை ஆசையுடன் ஏற்றுக்கொள்ள வருகின்ற அந்தத் தீர புருஷர் யாராக இருக்க முடியும்? ஹலீமாவின் உள்ளத்தில் களிப்புத் துள்ளிக் குதித்தது. கால்கள் ஒரு இடத்தில் நிலை கொள்ளவில்லை.

இரண்டு நாட்கள் 'சலாம்' வைத்து விட்டு விடை பெற்றுக்கொண்டன.

ரஹ்மத்துல்லாவின் வீட்டின் முன்னால் இரண்டு ஜட்காக்கள் வந்து நின்றதும் தனது பிரத்தியேகமான அறைக்குள் ஓடி தன்னை சிங்காரித்துக் கொண்டாள் ஹலீமா. வாசலில் வந்திறங்கிய 'மணமகன்' வீட்டாரை தன் தந்தை பலத்த 'சலாம்கள்' போட்டுக்கொண்டு ஒரே களேபரத்துடன் வரவேற்கும் இன்ப நாதம் அவ்வணங்கின் செவிகளை லேசாக மோதியது. அதைத் தொடர்ந்து ஆடவரும் பெண்டிரும் உரையாடும் ஓசையைச் செவிமடுத்ததும் அந் நங்கையின் நெஞ்சு திக்கென்றது. கதவின் இடுக்கின்வழியாக அவர்களைக் காண அவாளமுந்தவுடன் அவள் சட்டென்று எழுந்தாள். மறு கணத்தில்தன்னைப் பெற்றவர் தன்முன் நிற்பதை உணர்ந்ததும் சிரங்கவிழ்த்து அசையாது நின்றாள்.

''ஹலீமா...அவர்களை முன் அறையில் உட்காரவைத்திருக்கி



றேன். பெரியவரும் மகள்களும்தான் வந்திருக்கிருர்கள். அவர்கள் பசியாற பரோட்டாக்களையும், குர்மாவையும் கூட சேமியாவையும் அனுப்பு. இனி உன் சம்மதத்தை அவர்களுக்கு அறிவித்துவிட்டால் எல்லாம் சுபமாக முடிந்தது போல்தான்'' என்ருர் ரஹ்மத்துல்லா ஒரே பேரானந்தத்துடன்.

''அவர்கள்? எந்த ஊர் பாவாஜான்?'' – ஹலீமாவின் குரலில் நடுக்கம் ஊர்ந்தது.

''அடி என் அருமை மகளே! கடிதம் வந்த நாளன்று விஷயம் முழுவதையும் உனக்கு நான் சொல்லத் தவறிவிட்டேன். உன்னை அன்புடன் வரவேற்க கலெக்டர் வஹாப் சாஹிபும் அவருடைய மகள்களும்தான் வந்திருக்கிருர்கள்''—முறுவலித்தார் தந்தை.

''ஹா...அவர்களா?''—தீ மிதித்தவள் போல் எகிறிக் குதித்தாள் ஹலீமா.

''ஆம்......அவர்கள் தான், என் கண்ணு!''

''அந்தப் புண்ணியவான்களா?''–ஹலீமாவின் இதயம் படக் படக்கென்று கௌளி அடித்துக்கொண்டது. வதனத்தில் அனற் சிரிப்பு சுடர் விட்டது.

''ஏன் இப்படி பயந்துட்டே!''—ரஹ்மத்துல்லாவின் திகைப்பு கட்டுக்கடங்காமற் போயிற்று.

''பாவாஜான்...தன்மானம், சுயமரியாதை இல்லாத நாலுகால் 'ஹய்வானக' உங்கள் மகள் பிறக்கவில்லை என்பதை மறந்து விடாதீர்கள்'' ஹலீமாவின் சொற்களில் ஏளனமும் வேதனையும் கொழுந்து விட்டெரிந்தன.

''என்ன''— ரஹ்மத்துல்லாவின் குரல் கம்மியது.

''பாவாஜான்! இந்தப் பாவிப் பெண்ணைப் பெற்றெடுத்த செம்மலாகிய நீங்கள் என் நல்வாழ்வுக்காக அனுபவித்த கணக்கில்லா கஷ்டங்களை நான் எப்படி மறக்க முடியும்? இந்தத் திக்கற்றவளின் 'நிக்காஹ்வை' நடத்திவைக்க தளர்ந்த உங்கள் உடலுக்கு உறை

தெறித்த முத்துக்கள்

''இறைவனே! என் கல்வியறிவை அதிகப்படுத்து.'' என்று கேட்பீராக.

—அல்குர்ஆன்

2. புனிதமாம் மார்க்கப் போரினில் கொட்டிடும் இரத்தத்தைவிட, கல்வியைத் தேடும் மை சிறந்தது.

—நபிகள் நாயகம்

3. கல்வியானது உன்னுடைய நல்ல காலத்தில் உனக்கோர் அணிகலன்; வறுமையில் உன்னுடைய அடைக்கல பூமி; முதுமையில் அது உனக்கு உணவு

—அரிஸ்டாட்டில்

4. நம்முடைய சந்தேகங்கள் தாம் நம்முடைய துரோகிகள்.

—ஷேக்ஸ்பியர்

5. முட்டாள்களின் தலைமீது வழக்கறிஞர் தம் வீடுகளைக் கட்டுகிருர்கள்.

—ஜெர்மானியப் பழமொழி

6. கவலையைப் போக்க ராஜ மருந்து என்னவென்ருல் இறைவன்மீது அசையாத நம்பிக்கை வைப்பதுதான்.

—வில்லியம் ஜேம்ஸ்

தொகுப்பு: அ. அப்துல் காசீம்

விடம் தந்த குடிசையைக்கூட விற்ற தியாகி அல்லவா நீங்கள்! இப்போது இங்கே வந்திருக்கும் அந்த குணவான்கள் உங்கள் மகளுக்கு அநியாயமாக 'தலாக்' கொடுத்து உங்களை வாட்டி வதைத்து பிணமாக்கிய பாதகர்கள் அல்லவா? அந்தப் படுபாவிகளுக்கு இந்த வீட்டு வாசலில் நுழைவதற்கு எப்படி தைரியம் வந்தது?'' வீராங்கனை போல் கர்ஜித்தாள் ஹலீமா. அவள் பேசிய தோரணையும், வீசிய பார்வையும், நின்ற கோலத்தையும் காண ரஹ்மத்துல்லாவுக்குக் கண்கள் கூசின.

''தாங்கள் இழைத்த தவற்றை உணர்ந்து வந்திருக்கிறார்கள்'' கெஞ்சினார், பெற்றவர் கைகளைப் பிசைந்துகொண்டு.

''அந்த 'ஆமில்'களின் நிழல் இந்தக் குடிசையில் வீழ்ந்ததே பெரும் பாவமாகும்''—ஹலீமாவின் சொற்களில் வெறுப்பும் ஆவேசமும் தகித்தன.

''நீயா இப்படி பேசுகிறாய்!''—வாயடைத்து சித்த பிரமையுடன் நின்றுவிட்டார் ரஹ்மத்துல்லா. அவர் மூச்சு திணறியது.

''என் நெஞ்சின் குமுறலை நீங்கள் கேட்டீர்கள் பாவாஜான்''— ஹலீமாவின் வார்த்தைகளில் தீப் பொறிகள் பறந்தன.

''ஒரு சப்-கலெக்டரின் 'பீவியாக' வாய்க்கப்போவதை மறந்து விடாதே. வலிய வந்தடைந்த பாக்யத்தையும், 'பர்க்கத்தையும்' உதறித் தள்ளிவிடாதே அருமை மகளே!'' மன்றாடினார் ரஹ்மத்துல்லா.

''மயானத்தில் குழித் தோண்டிப் பிழைப்பவனை வேண்டுமானால் எனக்கு கணவனாகக் கொண்டு வாருங்கள் பாவாஜான்—ஹலீமாவின் உடல் காந்தியது. ரத்த நாளங்கள் துடித்தன.

''ஏற்கனவே வெடித்து விட்ட இந்தக் கிழவனின் நெஞ்சை இரு துண்டுகளாகப் பிளந்து விட வழி செய்து விடாதே அம்மா''—விழி நீர் ஆறாக ஓட நா தழுதழுக்கக் கெஞ்சினார் ரஹ்மத்துல்லா.

''வற்புறுத்துவதை விட இந்த அபலையை உங்கள் கையாலேயே பாழும் கிணற்றில் தள்ளி விடுங்கள் பாவாஜான்''-ஹலீமாவின் உள்ளம் சாம்பியது. இதயம் ஓங்காரமிட்டது.

''வந்தவர்களுக்கு என்ன ஜவாப் சொல்வேன் ஹலீமா?—ரஹ்மத்துல்லாவின் மேனி சிலிர்த்தது. பற்கள் தந்தியடித்தன. நயனங்கள் கலங்கின. உதடுகளில் நீலம் பாரித்தது.

''பயப்படாதீர்கள் பாவாஜான். அந்தப் புனிதக் கடமையை உங்கள் மகளே செய்து விடுவாள்'' என்று சொல்லிக் கொண்டு அடிமேல் அடி வைத்து அடிபட்ட வேங்கை போல் முன்னறைக்குச் சென்றாள் ஹலீமா. கதவை லேசாக பாதி திறந்து கொண்டு அந்த 'வாயில்லாப் பூச்சி-' பொறுமையின் மாணிக்கம்—'பேசா மங்கை' பேசலானாள்.— பாய் சாஹேப்! என் அருமை சகோதரிகளே! அஸ்ஸலாமு அலைக்கும்! தந்தை தங்களுக்குக் கூறவேண்டியதை அவர் பெற்ற மகளே சொல்லி விட நேரிடுகிறது. கொல்லாமல் கொன்று இந்த ஏழைகளை வழியனுப்பிய உத்தமர்களாகிய நீங்கள் இந்தக் குடிசையை அண்டுவதில் பிரயோசனமில்லை'' என்று பகர்ந்தபின் மடாரென்று கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டாள் ஹலீமா. மறு கணத்தில் அவள் நயனங்களில் அந்தகாரம் சூழ்ந்து கொண்டது. கால்கள் பின்னிக்கொண்டன. இதயப் படபடப்பு ஓங்காரமிட்டது. இரு கைகளால் முகத்தைப் பொதிந்து கொண்டு கண்ணீர் வடித்த வண்ணம் அவ்விடத்தை விட்டு தத்தித் தத்தி நடந்து சென்று தன் தந்தையை இறுகக்கட்டிக்கொண்டு 'ஓ' வென்று விக்கி விக்கி அழலானாள் ஹலீமா!



ஆராய்ந்து பார் கிளியே!

— எம். ஸி. எம். ஸுபைர் —

பகல் முழுதும் வியர்வை சிந்த உழைத்தவன், நிம்மதியாக நித்திரை செய்ய எண்ணிக் கட்டிலிற் சாய்ந்தான். ஆழ்ந்த தூக்கம் தன்னை அரவணைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசை பொங்கி வழிந்தது அவனுள்ளத்தில். இமைகளை மூடினான். எண்ணத் திரையிலே மின்னி மறைந்தாள் அவனன்பு நாயகி. தூக்கம் எங்கோ மூலையிற் சென்று தூங்கிவிட்டது போலும். அவன் விழித்துக் கொண்டான்.

இல்லறச் சோலையுட் புகுந்து ஒரு மாதத்தில் தன் அன்புத் துணைவியைப் பிரிந்து அயலூர் சென்றவன் அவன். ஓயாத வேலையால் இரண்டு மாதங்களாக ஊர் போகவில்லையவன். அன்பு மனைவியின் எண்ணம் அடிக்கடி வரும். 'இரண்டு கிழமையால் உன் முன்னே வந்து நிற்பேன் கண்ணே' என்று கூறி அவளைப் பிரிந்து வந்ததை எண்ணுவான். கண்ணீர் மல்கிய கண்களுடன் அவள் விடைகொடுத்து வழியனுப்பிய காட்சி அவனுள்ளத்தை உருக்கும். இந்த நிலையில் அவனுக்குத் தூக்கந்தான் எங்கிருந்து வரும். நாயகியின் எண்ணம் நெஞ்சைப் பிழிந்தது.

"முத்தாயுதித்த முழுமதி
நிலவொளிவே
நித்தம் உனை நினைந்து
நெருப்பா யெரியுதடி"

என்று பெருமூச்சு விட்டு மறுபுறமாகப் புரண்டு படுத்தான் அவன்.

காலை மலர்ந்தது. அவன் கண்விழித்து எழுந்தான். காக்கை யொன்று மரக்கிளையில் நின்று கத்திக்கொண்டிருந்தது. கத்தும் காக்கை தன் கண்மணியைப் பற்றிய செய்தியை யாவது உணர்த்தும்படி கத்தக் கூடாதா என்று ஏங்கியது அவனுடைய ஏழை நெஞ்சம்.

"கத்துறயே காகம் என்
கண்மணியைக் கண்டாயோ
சந்தித்துக் கேட்டால் என்
சரித்திரத்தைச் சொல்வாயோ"

என்று காக்கையுடன் உரையாடியது அவன் கருத்து. 'கண்மணியைப்' பற்றி எனக்குத்தான் சொல்லாவிடினும் நான் ஒருவாறு ஆற்றிக் கொள்வேன். என்னையே நினைந்துருகும் அவளுடைய ஆற்றுமையைத் தீர்த்துக் கொள்ளுமாறு அவளைக் கண்டு என் நிலையை எடுத்துக் கூறும் உதவியையாவது நீ செய்யக் கூடாதா என்று கேட்கிறான் அவன்.

அவள் மச்சானின் வருகைக்காக வாசலிலே நின்று ஏமாற்றமடைந்த நாட்கள் பல. அன்றுந்தான் வந்து நின்றாள். கண்கள் பூத்ததுதான் கண்ட பலன். 'அந்தோ, ஆசை மச்சானின் உள்ளம் ஏன்தான் இப்படிக் கல்லாய் விட்டதோ' என அங்கலாய்த்தது அவள் உள்ளம். அப்பொழுதுதான் ஆகாயத்திற் பறந்தது பறவை ஒரு கோடி. இன்பம் பொங்க இணைந்து பறந்த அவற்றைப் பார்த்த அவள் அகம் வேதனையால் உருகியது.

"உயரப் பறக்கும் ஒரு
கோடி நங்கணங்காள்
தாழப் பறங்க என்ட
வேதனையைச் சொல்லியழ"

வாய்விட்டுக் கூறிப் பெருமூச்செறிந்தாள் அந்த ஏந்திழை. கண்களிற் சுரந்து வீழ்ந்தன கண்ணீர்த் துளிகள்.

"பாயிற் படுக்கவொண்ணு
பசிக்குணவும்தின்னவொண்ணு
நோயால் மெலிவதுபோல் உங்கட
நினைவெனையே வாட்டுதுகா"

இப்படியாக மேலும் தன் உயிர் வாடும் நிலையைப் புலம்பி வருந்தி நின்ருள் அவள்.

அன்றுதான் அவள் மாமனுர் வந்தார் அயலூரிலிருந்து. அதையறிந்த அவள் மச்சானைப் பற்றிய செய்தியை அவரிடம் கேட்டறியத் துடியாய்த் துடித்தாள். நல்லவேளையாக மாமனுரே அங்கு வந்துவிட்டார். "மாமா, அவரைக் கண்டீர்களா? சுகமாயிருக்கிருரா?" என்று ஆவல் ததும்பக் கேட்டாள். "ஆமாம்; இருக்கிருன், அவனுக்கென்ன குறை" என்று அவர் கொடுத்த மறுமொழி அவளைப் பிரமிக்கச் செய்துவிட்டது. "ஏதோ, அதிக சீர்வரிசை கிடைக்கிறதாம்; அதனுல் அங்கு இன்னெரு பெண்ணைக் கட்டிக் கொள்ளப் போகிருனும்" என்று தொடர்ந்து கூறினுர் அவர். அவள் தலை சுழன்றது. "மச்சான் அவ்வளவு பெரிய துரோகியாய் மாறி விட்டாரா?" என்று வாய்விட்டுக் கூறி விழிநீர் பெருக்கினுள் அந்தப் பேதை. "என்னவோம்மா, இரண்டு நாளையில் இங்கு வருகிருனும். உன் விருப்பையும் தெரிந்து கொள்ளத் தானே என்னவோ...ஹும்...நான் வருகிறேன்" என்று சொல்லி அகன்ருர் அந்த மாமனுர்.

'வெந்த புண்ணில்வேல் நுழைந்த' செய்தியால், வேதனைப் புயலிற் சிக்கித் தவித்தாள் அவள்.

அன்று மாலை மறைந்தது. எங்கும் இருள் சூழ்ந்தது. கதவை யாரோ தட்டுவது போலுணர்ந்த அவள் சற்றுக் கவனமாகக் கேட்டாள்.

"கண்ணே கனிப்பாகே
கதவுதிற கண்மணியே
பெண்மயிலே உன் நினைவால்
பறந்துவந்தேன் மச்சியரே"

ஆம். இந்தக் குரல் அவள் காதில் விழுந்தது. பறந்ததுபோலும் கவலையெலாம். பாய்ந்து வந்து கதவைத் திறந்தாள். இருவர் முகமும் மலர்ந்தன, இரவியைக் கண்ட தாமரைப் போல. அடுத்த கணம் மாமனுர் ஓதிய 'மந்திரம்' அவள் சிந்தனையில் துளிர்த்திருக்க வேண்டும். பொங்கி வரும் முழு நிலவைக் கரியமுகில் மறைப்பதுபோலக் கவலை யிரேகைகள் படர்ந்தன அவள் முகத்தில். சிறு குழந்தைபோல விம்மி, விம்மி அழத் தொடங்கிவிட்டாள் அவள்.

அவனுக்கோ ஒன்றும் விளங்கவில்லை. 'கண்ணே, விழி நீர் பெருக்கி விம்மி, விம்மியழக் காரணந்தான் யாதோ?' என்று வினயமாகக் கேட்டான் அவன்.

"ஊசியிலே காந்தம்
ஒட்டிப் பிடித்ததுபோல்
தாவிப் பிடிச்சேன் மச்சான்
என்னைத் தாவரிப்பாயென்று
எண்ணி"

எனக் கூறி மேலும் விம்மினுள் அவள்.

ஆமாம், நான் சொன்னபடி வரப் பிந்தியமையால் வருந்தித்தான் இப்படிக் குறை கூறுகிருளோ என்று சிந்தித்தான். எனினும் அது தக்க காரணமாகப் படவில்லை அவனுக்கு.

"பச்சை யிஞ்சி வால்மிளகு
பற்படாகம் கொத்தமல்லி
ஏலரிசி வாயாளுக்கு
என்னபிழை நான் செய்
தேன்"

எனக் கெஞ்சிடும் பாவனையில் கலக்கத்திற்குக் காரணத்தை விளக்கிடக் கேட்டான் அவன்.

ஆத்திரமும், அளவு கடந்த கவலையும் தோய்ந்த குரலில்,

"என்னை விரும்பி
எடுத்ததெல்லாம் போயிப்போ
பொன்னை விரும்பியல்லோ
புதுப் பெண்ணைத் தேடுகிறீர்"

எனக் கூறிக் கொதித்து நின்ருள் அவள்.

'ஓகோ, விஷயத்தை விளக்கமாகப் புரிந்து கொள்ளாத அந்த மாமா கொடுத்த 'வாலுந் தலையுமற்ற' செய்தியின் விளைவுதான் போலும் இது' என்று தீர்மானத்துக்கு வர அவனுக்கு அதிக நேரமாகவில்லை. அவளுடைய வார்த்தைகளே போதிய ஆதாரமாக அமைந்திருந்தன.

"கோபத்தை நீயடக்கிக்
கொஞ்சம் சபூறு செய்து
ஆராய்ந்து பார் கிளியே
ஆர்மேல குற்றமென்று"

என அன்பு கனிந்த வகையிலே தன் ஆசை நாயகியை வேண்டினன் அவன்.

"ஆமாம், வேறு பெண்ணை நாடிச் செல்லுமளவுக்கு என்னிடம் என்ன குறையைக் கண்டு விட்டீர்களோ? அதை நீங்கள்தான் சற்று ஆராய்ந்து பாருங்களேன்—" என்று ஆத்திரம் ஆத்திரமாகக் கதறினள்.

ஆனல் அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. 'கண்ணே, எப்பொழுதும் அவசரப்படக்கூடாது. தீர ஆராயாமல் தீர்ப்புக்கும் வந்துவிடக் கூடாது. இப்பொழுது நானும் பிழை செய்யவில்லை. நீயும் தவறிழைக்கவில்லை. உன்னிடம் 'தூது' வந்த அந்த மாமனர்தான் 'கலகத்தை' விளைத்து விட்டார். ஏற்றுக் கொள்கிறயா?" என்றன் சிரித்துக் கொண்டே.

'அப்படியானல் மாமா சொன்னது...?'—ஆம். இன்னும் அவளுக்குப் பூரண நம்பிக்கை ஏற்படவில்லை போலும்.

தாது புஷ்டிக்கு நிகரற்றது. 25 வருஷங்களுக்கு மேல் லக்ஷக்கணக்கான மக்களால் வாங்கி உபயோகிப்பது பழனி K. S. பதி

சிட்டுக்குருவி லேகியம்

நரம்புத் தளர்ச்சி, பலஹீனம், ரத்தக் குறைவு, ஜீரணசக்தி குறைகளை நீக்கி நீண்ட தாது புஷ்டியும், தம்பன சக்தியும் உண்டாக்கி உங்களை ஆனந்திக்கச் செய்கிறது.

30 வேளை லேகியம் விலை ரூ. 15—0—0 (மலரைக் குறிப்பிட்டு எழுதுபவர்களுக்குமட்டும் குறைந்த விலை ரூ. 13—0—0.)

மூலகோடாலி லேகியம் & கருநாக பூபதி

சாப்பிடுங்கள். [ஆபரேஷன் தேவையில்லை]

நீடித்த மூலம், சீழ் மூலம், ரத்த மூலம், வரள் மூலம், வெளி மூலம், ஆசனத் தடிப்பு, குத்தல், வலி, மலச்சிக்கலை அறவே யொழித்து நிர்மூலமாக்கும். பரம்பரை அனுபவம். கை கண்டது.

இரண்டு மருந்துகளும் 30 வேளைக்கு ரூ. 20—0—0.

கே. எஸ். பதி வைத்தியசாலை, பழனி S. I.

சிங்கப்பூர், கோலாலம்பூர், பினங்கு முதலியவைகளுக்கு நாணயமான ஏஜண்டுகள் தேவை.

'மாமா சொன்னதா...! அது...! விபரீதத்தை விளைக்கக் கூடிய விஷயம் என்பதைச் சற்றும் சிந்தியாமல், மற்றவர்கள் பேசுவதை அரை குறையாய்க் கேட்டுச் சொந்தமாகவும் கொஞ்சத்தைச் சேர்த்து ஒலி பெருக்கியிருக்கிறார்......''

தன் மச்சானின், களங்கமில்லா உள்ளத்தை அவர் மலர்ந்த முகத்திலே கண்டாள் அவள். மச்சான் மேல் நம்பிக்கை யேற்பட்டு விட்டது அவளுக்கு. 'நடந்ததைத்தான் சொல்லுங்களேன்...! என்று விவரமாக அறிய வினவினாள் அவள்.

''சொல்லட்டுமா, நம்ம பெரியம்மாவின் மகன்—தம்பி, என்னுடன் தொழில் பார்ப்பது உனக்குத் தெரியுந்தானே. அவனைப் பற்றிய ஒரு பேச்சு வந்தது. 'அதற்கென்ன, சீர் வரிசைகளையெல்லாம் சிறப்பாகக் கொடுப்பீர்களென்றால், கூடிய விரைவில் முடித்து விடுகிறேனே' என்று சொன்னேன் வந்தவரிடம். அதைத்தான் கேட்டிருக்கின்றன உன் அருமை மாமனாரின் கூரிய செவிகள். அதனால் வந்த விபரீதந்தான் இது'' என்று கூறி முடித்தான்.

அவளை வெட்கம் பிய்த்துத் தின்றது. முகம் சிவந்தது. 'என்னை மன்னித்து விடுங்கள் மச்சான். ஆராய்ந்து பாராமல் உங்களை வேதனைக்குள்ளாக்கி விட்டேன்' என்றாள் சேலைக் கரையை விரலிற் சுற்றிக் கொண்டே.

''பரவாயில்லை. வந்ததும் கதவையே திறவாமல் வந்த வழியிலே திரும்பி விடுங்க மச்சான் என்று அனுப்பி விடாமலிருந்தாயே, அந்த மட்டிலும் நான் பாக்கியசாலிதான்'' என்று குறும்பாக நோக்கினான் அவளை. மலர்ந்த குறுநகையுடன் அவளும் நோக்கினாள்.

இரண்டு மாதங்களாக ஏங்கித் தவித்த இரண்டு உள்ளங்களும் இன்பத்திற் பொலிந்து திகழ்ந்தன அங்கே. ★

அழகு பொருந்தியவர்களுக்கு நூதன காணிக்கை!

அசோகா ராயல் டால்க் பௌடர் டீலக்ஸ்

சர்மத்தை மிருதுவாகவும், பிரகாசமாகவும் செய்யக் கூடிய வஸ்துக்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

நாள் முழுவதும் சரீரத்தில் உற்சாகத்தைக் கொடுக்கக் கூடிய வாசனைத் திரவியங்கள் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது.

புதிய முறையில் தயாரித்த இந்த பௌடர்—உயர்ந்த வஸ்துக்களால் நிபுணர்கள் தயாரித்தது. நாள் முழுவதும் புதிய உற்சாகமும், மன அமைதியும், குளிர்ச்சியும் மிகுந்த பரிமளமும் உண்டாவதற்கு உங்களுக்கு உதவியளிக்கிறது. இன்றே உபயோகியுங்கள்.

அழகுள்ள இரண்டு சைஸ்களுள்ள டப்பிகளில் கிடைக்கும். உடனே உங்கள் டீலர்களை விசாரிக்கவும்.

விஜயா கெமிகல்ஸ், சென்னை-7.

நமக்கு வடக்கே.....

இறைவணக்கத்திலீடுபட்டு, எளிமையும், அமைதியும் நிறைந்து வாழ்ந்த மாமன்னர் ஔரங்கஜேப், தம் தலைநகரிலே தம் வாழ்க்கைத் துணைவியின் நினைவுச் சின்னமாக பேகம் ஸாஹிபா தில்ராஸ்பானுவின் பெயர் கூறிப் பேரதிசயமாக விளங்கிநிற்க 'பீபிகா மக்பரா'வை நிர்மாணிப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

தந்தையார் ஷாஜஹான் சக்கரவர்த்தி கட்டிமுடித்த 'தாஜ்மஹாலை' விட 'மக்பரா' சிறப்பாக அமைய வேண்டும் என்ற நினைவு நிரம்பியிருந்தது அவர் நெஞ்சத்திலே. கட்டிடக்கலை நிபுணர்களும், சிற்பிகளும் ஓவியக் கலாவிற்பன்னர்களும், கொத்தர்களும், கல்தச்சர்களும் வந்து நிறைந்து விட்டனர் அவ்ரங்காபாத் நகரிலே. எகிப்திலிருந்தும், பாரசீகத்திலிருந்தும், ஸிரியாவிலிருந்தும் சலவைக் கற்கள், வெண் சுண்ணக்கற்கள் யாவும் ஒட்டகங்களின் மூலமும் குதிரைப்படைகளின் மூலமும், கப்பல்கள் மூலமும் வந்த வண்ணமிருந்தன. ராஜபுதனத்திலிருந்து வெண்மணலும் சுண்ணும்புக் கற்களும் வந்தன. எனினும் அரசர் அவ்ரங்கஜேபுக்கு மனம் நிறைவுறவில்லை. "தாஜ்மஹால் போல அமையா விட்டால்..." என்றெண்ணி நெஞ்சங்கலங்கினார்.

ஏனெனில், தாஜ்மஹாலைக் கட்டிய பிரதான சிற்பி அஹ்மதின் விரலை வெட்டிய தம் தந்தையின் செய்கையால், அவ்வளவு அழகும் ஒளியும் நிரம்ப இன்னும்ஒன்று

பிரயாணக் கட்டுரை

★

வலங்கைமான் அப்துல்லாஹ்

கட்டிமுடிக்க இயலக்கூடியவன் இத்தரணியில் அவனைத் தவிர வேறு யார் என்றே ஏங்கினார் என்றாலும் விரலை இழந்த அச்சிற்பியின் குமாரனையே அழைத்து வந்து "மக்பராவைக் கட்டவேண்டும் என்று முடிவு செய்தார். அதுபோலவே வரவழைக்கப்பட்டான், அஹ்மதின் குமாரன் அத்தாவுல்லாஹ் கான்.

தந்தையின் உதவியாளனாகவே கூடயிருந்து உழைத்த அத்தாவுல்லாஹ்கான் தன் திறமை முழுவதையும் செலுத்தி 'பீபிகா மக்பராவை" பிரமாதமாகக் கட்டி முடிப்பதாகக் கூறினான். அவுரங்கஜேப் ஓரளவு மகிழ்ந்தார். எனினும் பூரண திருப்தியில்லை.

வேலை துவங்கிற்று. நூற்றுக்கணக்கான அரசாங்க சிப்பந்திகள் பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்களை கண்காணித்து வேலை வாங்கி வந்தார்கள். இருபது அடி ஆழத்துக்குமேலும் பூமியின் கீழே தோண்டினார்கள். மலைகள், கற்கள், இவற்றைப் பிளந்து அவர்கள் அஸ்திவாரம் போடவே பல மாதகாலங்கள் ஓடின.

சிற்பி அத்தாவுல்லாஹ்கான் கட்டிடம் எழுப்பத்துவங்குமுன் தந்தை அஹ்மதுவின் அழைப்பிற்கிணங்கி ஆக்ராவுக்குச் செல்ல அரசர் அவுரங்கஜேபிடம் அனுமதி கேட்டான். அரசர் அனுமதிதர மலைத்தார். — மறுத்தார்.

தன் துணைவியின் பெயரால் நீள் நாள் வரை நிலைத்து நிற்க வேண்டிய, தாஜ்மஹாலை விட பல

மடங்கு வேலைப்பாடுகளோடு, அதிசயக்கலை வடிவமாக நிற்க வேண்டிய கட்டிடத்தின் வளர்ச்சி, தரை மட்டம் கூட எழும்பவில்லை. அதற்குள் அத்தாவுல்லாஹ்கானை அஹ்மது அழைக்கும் அவசரம் என்ன என்ற சம்சயமும் ஏற்பட்டது.



தாஜ்மஹாலல்ல, பீபீகா மக்பரா !

"அத்தாவுல்லாஹ்கான் அவசியம் நீ உன் தந்தையைக் காணப்போக வேண்டுமா?"-வினவினுர் அவுரங்கர்.

"தந்தை அழைத்திருக்கிருர். நான் போய்வரவேண்டாமா?"

"அப்படியானுல் சிற்ப மேதை அஹ்மதை நான் இங்கேயே அழைக்கிறேனே. விஷயம் எதுவானுலும் நீங்கள் இங்கேயே பேசிக் கொள்ளலாமே. மேலும், புதிதாக எழும்பக் கூடிய இந்த மஹலுக்குத் தேவையான ஆலோசனைகளையும் பெறலாமே. தூதரை அனுப்பி வைக்கட்டுமா?"

"உங்கள் பிரியம் எப்படியோ அப்படியே செய்யுங்கள்"

அத்தாவுல்லாஹ்கான் சென்றுவிட்டான். அஹ்மதையும் அழைத்துவர ஆக்ரா நோக்கி அரச தூதர்கள் சென்று விட்டனர்.

ஆனுல்......

திருப்தியற்றும், மனக்கவலையோடும் இருந்து வந்த மாமன்னர் அவுரங்கஜேபுக்கு, சென்று வந்த தூதர்கள் சொன்ன பதில் துயரத்தையே தந்தது.

தள்ளாத வயதிலே தன்னுல் நெடுந்தூரம் வரஇயலாது என்றும், கைவிரலை இழந்ததற்குப் பிறகு அரசர் குல ஆணவக்காரர்களையேதான் காண விரும்பாத நிலையில் இருப்பதாகவும், தன் குமாரன் அத்தாவுல்லாஹ்கானை அவசியம் தன் இருப்பிடம் வரச்சொல்ல வேண்டும் என்று கோரியதாக பதில் கூறினர் தூதுவர்.

உலகம் வியக்கும் கலைக்கூடமான தாஜ்மஹாலைக் கட்டியசிற்பி, தன் விரல் செய்த சிற்பக்கலையே தன் விரலை இழக்கக் காரணமானது என்ற துயரை, இன்னும் மறக்காத நிலையிலே இருப்பதை எண்ணி அவுரங்கர் அளவிலாத் துயரடைந்தார். சிற்பி அஹ்மது பேரிலே அவருக்கு என்றுமில்லாத அளவு இன்று பரிவு ஏற்பட்டது. அஹ்மது வேண்டுகோளின்படியே சிற்பி அத்தாவுல்லாஹ்கானை ஆக்ரா போய்வர அனுமதித்தார். அதோடு தம் கட்டிடம் மேலும் அழகுற தேவையான ஆலோசனைகளையும் அறிந்துவா என்றும் கூறியனுப்பினுர்.

தாஜ்மஹாலை விட மேம்பட்டு நிற்கும் ஒளி மஹலாக அவுரங்காபாதிலே தன் கைத்திறனுல் நிர்மாணிக்க, தந்தையின் அனுபவ ஆலோசனையையும் பெற்றுவர வேண்டும் என்ற ஆவலிலே ஆக்ரா சென்ற அத்தாவுல்லாஹ்கான் — திரும்பி ஏமாற்றத்தோடு, வந்தான்.

ஆவலோடு எதிர்பார்த்த அவுரங்கர், கவலையோடு வந்தவனைக் கண்டு மனங்கலங்கினுர். திருப்தியான எவ்வித பதிலும் அஹ்மது கூறவில்லை. கலைஞர்களை வற்புறுத்தக்கூடாது. அவனுடைய எந்தவிதமான உள் எண்ணங்களையும் வலியுறுத்திக் கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூடாது என்று அறிந்திருந்த அவுரங்கர்—துரிதமாக பீபீகா மக்பராவைக் கட்டி முடிக்கும்படி மட்டும் வலியுறுத்திக் கூறினுர். தந்தை

தாஜ்மஹாலைக் கட்டி முடித்துக் கண்டு, வியந்து, மகிழ்ந்து இருந்ததுபோல தம் துணைவி தில்ராஸ் பானுவையும் பீபீகா மக்பரா மூலமாகக் கண்டுவிட்டால் போதும் என்ற எண்ணம் அவரைத் துரத்திற்று.

ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் வருகிறார்கள்.

பத்து மைலுக்கு அப்பால் எல்லோரா குகைக்குச் செல்லும் வழியிலே, தௌலதாபாத் கோட்டைக்கு அருகாமையிலேயுள்ள குர்தாபாத் என்ற ஊரில் அடக்கம் செய்திருக்கிறார்கள். அழகான பள்ளி வாசல் ஒன்று அதனருகே கட்டப்பட்டுள்ளது. ஏழைகளின் தோழராகவும், எளிமையைக் கடைப்பிடித்த ஏந்தல் நபிகள் பெருமானாரின் ஆத்மீக வழித்தோன்றலாகவும் வாழ்ந்த அவரை மிகவும் எளிமையான முறையிலேயே அடக்கம் செய்திருக்கிறார்கள்.

ஆனால்....எதிர்பாராத விதமாகக் கட்டிடம் கால் பகுதி எழும்பு முன்பே அவுரங்கர் காலமானார். தில்ராஸ்பானுவின் மறைவுக்குப் பின்னர் அளவுக்கு அதிகமான வேதாந்த விசாரணையிலேயும், திருக்குர்ஆன் தெளிவுரைகளிலும் மனம் ஈடுபாடு கொண்டிருந்த காரணத்தால் வெளி உலகில் அவர் கவனம் குறைந்தே வந்தது. மனைவியின் ஏக்கமும் அவர் நெஞ்சை வாட்டிற்று. வாழ்க்கையென்னும் விருந்தில், மனிதன் அருந்தும் கடைசி பானம் மரணம்தானே! அவுரங்கரும் அல்லாஹ்வின் ஆணையால் மண்ணுலகை நீத்தார். உயிர் நீங்குமுன் சிற்பி அத்தாவுல்லாஹகானை அழைத்து 'பீபிகா மக்பரா'வை முடிக்கும் உறுதியைப் பெற்றார்.

மாமன்னன், முகலாயப் பேரரசுகளின் வாரிசு அவ்ரங்கர் காலமான போது அவர் சொந்த சொத்து என்ன தெரியுமா? தம் உடலைப் போர்த்தும் 'கபன்' துணிக்காகத் தாமே தைத்து விற்ற தொப்பிகளிலிருந்து வந்த ரூ. 40200, ஏழைகளுக்குத் தருமம் செய்வதற்காக தானே எழுதி விற்ற திருக்குர் ஆனிலிருந்து கிடைத்த தொகை ரூ. 30,500ம் தான்.

காலமான அவ்ரங்கரின் உடலை

கல்லறையைச் சுற்றிலும் சிற்பி அத்தாவுல்லாஹ் கானின் கைத்திறன் கொண்ட சலவைக்கல் ஜன்னல் வழ வழ வென்று வெண்பட்டு நிறத்திலே காட்சியளித்தது; அதன் வடக்குப்புற மூலையிலே அவுரங்கஜேபின் வாழ்வுக் குறிப்புகள் பொறிக்கப்பட்டுள்ளன. அங்கேயே, அவுரங்கரின் காலடியிலே நின்று வல்ல இறைவனை இறைஞ்சியும், அவுரங்கரின் பேரில் என் நெஞ்சிலே நிறைந்திருந்த வாஞ்சையையும் கொண்ட நினைவையும் நினைத்து 'ஜியாரத்' செய்து கொண்டு திரும்பினேன்.

*   *   *

பேரரசர் அவ்ரங்கஜேப் காலமானதற்குப் பிறகு, சில நாட்களிலேயே பீபிகா மக்பரா எழுப்பப் பட்டுவிட்டது. அவுரங்கஜேபின் குமாரார்கள் தம் தாயாரின் மேல் கொண்ட பாசத்துக்கும், பரிவுக்கும் எடுத்துக்காட்டாக அமையவேண்

டும் என்று எண்ணி வெகுசீக்கிரம் கட்டி முடித்தார்கள். கி. பி. 1664ம் ஆண்டில் பூர்த்தியாக்கப்பட்டது 'பீபிகா மக்பரா'. பீபிகா மக்பரா என்ருல் 'பேகத்துடைய கல்லறை' என்ற பொருள். அவுரங்கர் இருந்தால் 'தில்ராஸ்பானு மஹால்' என்ரே 'ராபியத்து மஹால்' என்ரே வைத்திருப்பார். ஆனுல் தாயாரின் நினைவாகக் கட்டி முடிக்க வேண்டிய பொறுப்பிலே உள்ள தனயர்கள் 'பேகம் சாஹிபாவின் கல்லறை' என்றே பொதுப் படையாக வைத்தனர் என்று கூறப்படுகிறது.

ஏறத்தாழ ஒன்றரை லட்சம் சதுரகஜப் பரப்பிலே இந்த நினைவு மஹல் கட்டப்பட்டுள்ளது. 75 அடி உயரமுள்ள நான்கு மனுராக்கள் நாற்புரமும் வானேக்கி எழும்பி நிற்கின்றன. சுற்றிலும் வெண்சலவைக் கற்களாலான பெரிய தாழ்வாரங்கள், மக்பராவைச் சுற்றிப் பூந்தோட்டங்கள், மக்பராவின் உள்ளே புகு முன் அரண்மனைக் கோட்டை போன்ற முன் வாயில்; உள்ளே தில்ராஸ்பானுவின் சமாதி; அதன்மேல் வெள்ளை வெளேரென்ற பளிங்குக் கற்களின்மேல் அரபி மொழியிலும் உருது மொழியிலும் எழுதப்பட்டுள்ள வரலாற்றுக் குறிப்புகள், திருக்குர்ஆன் ஸூராக்கள், சுற்றிலும் கல்தச்சர்கள் செதுக்கிய வலை மாதிரியுள்ள சலவைக்கல் ஜன்னல்களும், மேல் வளைவுகளிலே கல்லிலே செதுக்கியுள்ள பூ வடிவம் போன்ற வேலைப்பாடுகளும், உள்ளே நின்று கொண்டு 'அல்லாஹ் அல்லாஹ்' என்று கூறுவதுபோல தொனிக்கு எதிரொலிகளும், என்னை மெய்மறக்கச் செய்தன; சொல்ல வியலாத பெருமிதத்தால் மனம் இறுமாந்து நின்றேன் பல நிமிட நேரங்கள்.

வெளிவந்துவிட்டது

மௌலவி எஸ். அப்துல் வஹ்ஹாப் (பாகவி) அவர்கள் மொழிபெயர்த்த

"அரேபியாவிலே சில நாள்"

வில்லியம் லூயி

இஸ்லாம் மக்களுக்களித்திருக்கும் சட்டதிட்டங்களில் பாகப் பிரிவினையும் ஒன்று. இறைவன் ஆண், பெண் இருபாலருக்கும் அளித்திருக்கும் பாக உரிமை குறித்து வியக்காதவர் யாரும் இருக்க முடியாது. சட்ட மேதைகளெல்லாம் தடுமாறும் பிரச்சினைகளுக்குக் குர்ஆன் தெளிவுரை தருகிறது. இது குறித்து "அது சாதாரண ஒரு மனிதரால் இயற்றப்பட்டிருக்க முடியாது. முஸ்லிம்களின் பாகப் பிரிவினையில் அசாதாரண அமைப்பையுணர்கிறேன்" என்று வில்லியம் லூயி கூறுவதில் வியப்பென்ன இருக்கமுடியும்?

விலை ரூ. 1·00

எஸ்ஸேஸவி பதிப்பகம்

36/37, அங்கப்ப நாயக்கன் தெரு,

சென்னை-1.

198313

சுமார் 300 ஆண்டுகட்கு முன்பு கட்டப்பட்ட மக்பராவுக்கு ரூபாய் ரூ 6,68,987-7-0 செலவு செய்யப்பட்டதாக வெளியே மக்பராவைக் கண்காணிக்கும் பொறுப்பிலேயுள்ள அரசாங்க அலுவலகத்திலேயுள்ள குறிப்புகளில் எழுதப்பட்டுள்ளது. மக்பராவுக்கு எதிரே அழகான பெரிய நீண்ட ஹவ்லுகள் (நீர்த்தேக்கங்கள்) உள்ளன. தெளிவான தண்ணீர் அவற்றில் எப்பொழுதும் நிறைந்திருக்கிறது. இரண்டுபுறமும் உயர்ந்து வளர்ந்து பச்சைப்பசேலென்று 'கிருஸ்மஸ் சவுக்கு' மரங்கள் நிற்கின்றன.



உள்ளே ஒரு பகுதி

மாலைநேரங்களில் மக்கள் கூட்டங் கூட்டமாக வந்து உட்கார்ந்து பொழுது போக்குகிறார்கள். அதற்கு வசதியாக சுற்றிலும் பூந்தோட்டங்கள் உள்ளன. பூந்தோட்டங்களில் உள்ள பல வண்ணமலர்கள் முகலாயர் கலை உணர்வின் நிலையான சாட்சியங்கள். நல்ல முறையிலே நானாவித மலர்ச்செடிகளை பன்னூற்றாண்டு காலமாகவே அங்கே காத்து வருகின்றனர் என்றுமறிந்தேன்.

முகப்பு வாயிலிலே மாடியுள்ள கட்டிடம் உள்ளது. அங்கே மக்பராவைப்பற்றிய சகல விவரங்கள் கொண்ட பெரிய பெரிய கண்ணாடிப் படங்கள் உள்ளன.

தாஜ்மஹால் உலகப் பேரதிசயங்களில் ஒன்று என்றால் பீபிகாமக்பரா இந்திய அதிசயங்களில் ஒன்றாகும். தாஜ்மஹாலைவிட அழகு மிளிரக் கட்டவேண்டும் என்று அவ்ரங்கஜேப் எண்ணிய எண்ணம் நிறைவேறவில்லை. காரணம் என்னவென்றால் மக்பராவைக் கட்டிய சிற்பி அத்தாவுல்லாஹ் கானுக்கு அவன் தந்தை அஹ்மது விடுத்த எச்சரிக்கையாகும் என்று கூறப்படுகிறது. "விரலை இழக்கிற அளவுக்கு சிற்பத் திறமை எனக்கு இருந்தது போதும். நீயாவது உன் அவயவங்களை ஹீனப்படுத்திக்கொள்ளாதே" என்று மக்பராவைக் கட்டும் போது தன்மகனை அஹ்மது அழைத்துக் கூறிய காரணத்தால், தாஜ்மஹாலுக்கு சற்று மதிப்புக் குறைவாகவே கட்டினான். உண்மையிலேயே குறைவுபடும்படி எண்ணி கட்டினா, அல்லது அத்தாவுல்லாஹ் கானின் திறமையே அவ்வளவுதானா என்று எண்ணியபடியே, மாலை 4 மணிக்கு சாய்ந்து நின்ற கதிரவன் ஒளியிலே தேங்கி நின்ற அழகோடு காட்சியளித்த அதிசயக் கலைக் கட்டிடமான பீபிகா மக்பராவைப் பார்த்துக்கொண்டே இறங்கினேன்.

அவ்ரங்கஜேப்-தில்ராஸ்பானுவின் புகழை காலமுள்ளளவும் காண்பித்துக் கொண்டிருக்கும் பீபிகா மக்பரா என் நெஞ்சிலே பதிந்துகொண்டது. வாழ்க அவ்ரங்கஜேப் தம்பதிகள் என்று வாழ்த்திக்கொண்டே இறங்கும்போது தூரத்தில் தெரிந்த 'பஞ்சகி' ("Panchaki") என்ற பள்ளிவாசலின் மனாராக்களைக் கண்டேன். அங்கே 40 அடி உயரத்திலிருந்து விழுகிற நீரூற்று என் கண்களுக்குத் தெரிகிறது. இங்கே ஏது அருவி என்று நினைத்தபடியே அத்திக்கை நோக்கிச் செல்கிறேன். அந்த அதிசயத்தையும் பார்க்க வாருங்கள் என்று அழைக்கிறேன்; வருகிறீர்களா?

(தொடரும்.)

பெண்ணின் பெருமை

★

மூலம்: தபஸி ராபியா
ஸய்யித் இம்தாத் அலீ

தமிழாக்கம்: வி. எம். நயினுர்
முஹம்மது, ரங்கூன்

இஸ்லாமிய வரலாற்றின் எழிற் செல்வியான ராபியா நாச்சியார், அறிவிலும், வணக்க வாழ்விலும் சிறந்து, மாதர்குல மாணிக்கமாக — பெண்ணுலக மேதையாக விளங்கினர். நானிலம் புகழ வாழ்ந்து வந்த அந் நாரீமணியிடம் தம் சந்தேகங்களைப் போக்கிக் கொள்ள பலர் செல்வதுண்டு.

''நீரில் நடப்பதும் ஆகாயத்தில் பறப்பதும், இறைவனை நெருங்கி விட்டதற்கு அத்தாட்சிகளல்லவா?'' என்று ஒருவர் அவரிடம் கேட்டதற்கு.

''நீரில் நடப்பதும், ஆகாயத்தில் பறப்பதும் இறைவனை நெருங்கி விட்டதற்கு அத்தாட்சியாகமாட்டாது. சிறிய மீன்குஞ்சு கூட தனது விருப்பம் போல் நீரில் நீந்தி வாழ்கிறது. மிகச் சிறிய ஈயும் கூட ஆகாயத்தில் சுலபமாகப் பறக்கிறது. ஆகவே இவை அற்ப விஷயங்களே! ஆத்மீகப் பண்பாடு பெற்றதற்கு இவை அத்தாட்சிகளல்ல. இவை வெளிப்புறக்காட்சிகள்'' என்று பதிலளித்தார் ராபியா நாச்சியார்.

ஒரு தடவை ராபியா (ரஹ்) அவர்களின் ஞானத்தைக் கண்டு புழுக்கமுற்ற சில ஆண்கள் அவரிடம் சென்று பெருமித்தத்தோடு சொன்னர்கள்;

''உலகில் ஆண்களே உயரிய அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றனர். ஆண்கள் தாம் தெய்வீக அம்சம் பெற்று, நன்குண நல்லொழுக்கமுடையவர்களாயிருக்கின்றனர். பெண்கள் அவ்விதமான உயர்பண்புகளைப் பெற்றிருக்கவில்லை. மனித சக்திக்கு அப்பாற்பட்ட நூதன செயல்களால் உலகை வியக்கச் செய்தவர்கள் ஆண்களேயன்றிப் பெண்களல்ல. ஆகவே தாங்கள் மட்டும் எங்கிருந்து இந்த அற்புத ஆத்மீகச் சக்தியைப் பெற்றீர்கள்?'' என்று கேட்டனர்.

''நீங்கள் சொல்வதெல்லாம் சரியானதாக இருக்கலாம். ஆனல் இந்த உலகில், தெய்வீக அம்சம் பெற்றதாக, ஆணவத்தோடு விளம்பரப்படுத்தி, தன்னையே மக்கள் வணங்க வேண்டுமென்று கட்டளையிட்ட ஒரு பெண்ணையேனும் நீங்கள் காட்ட முடியுமா? தங்களுக்கு உரியதல்லாத ஒன்றை உடைமையாக்கிக் கொண்டு தற்பெருமையுடனும் கர்வத்துடனும் திரிவது, ஆண்களுக்குரிய விநோதமான அம்சமாகுமேயன்றி, பெண்களாகிய எங்களுக்குரியதல்ல.''

பிர்அவ்ன்கள், நம்ரூது போன்ற ஆணவம் பிடித்த அரசர்கள் தாங்களே வணக்கத்திற்குரிய கடவுளர் என்று கூறி மக்களை தமக்கே வணக்கம் செலுத்துமாறு கட்டளையிட்டதை யெல்லாம், அம்மையார் சூசகமாக தம் பதிலில் சுட்டிக் காட்டியதைச் செவியுற்றதும், ஆண்கள் வாயடைத்து நின்றனர். ★

தெய்வீக நகரங்களும் தெளிவான சாட்சியங்களும்

★

மதுரை அல்ஹாஜ்
எஸ். ஸையத் இஸ்மாயீல்

பாழடைந்த வீடு. கல்லும் மண்ணும் கலந்த சுவர்களின்மீது மண் பரப்பப்பட்ட 'லாகடம்'. மேலே நடந்தால் கீழேயுள்ளவர்கள் மீது மண் கொட்டுகிறது. உணவு கொள்ளும்போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சொகுசான வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கும் நேரம் அதுவல்ல. உதட்டில் "லப்பைக்", "அல்லாஹும்ம லப்பைக்" "அடிபணிந்தேன்;" "ஆண்டவனே உனக்கு அடிபணிந்தேன்" என்றும், இதயத்தில் என்ன சங்கடத்தில் மாட்டிக்கொண்டேன் என்றும், இருதலைக்கொள்ளி எறும்பே போல் நடந்து கொள்ளும் நேரமும் அதுவல்ல. அரபாத் மைதானத்துக்குச் செல்வதற்கு முன்னால் ஒரு பகலும் இரவும் மினாவில் தங்கித் தான் ஆகவேண்டும். கூடாரங்களெல்லாம் அரபாத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டன. வாடகை வீடுகளிலோ, ஒரு சில கூடாரங்களிலோ அல்லது பாழடைந்த வீடுகளிலோ ஒரு நாளைக் கழித்தாக வேண்டும். பத்து லட்சம்கொண்ட ஜனக் கூட்டம். அதில் வசதியை விரும்புபவர் பாதிப்பேர். அத்துணை பேர்களுக்கும் மினா நகரம் வீடுகளைக் கட்டி வைக்கவில்லை. ஆகாயக் குடையின் கீழ், பூமியின் விரிப்பின் மீது ஆண்டவனுடைய காவல் கொண்டு பெரும்பான்மையோருக்கு அன்றைய நாள், தானாகக் கழிகிறது. இந்தச் சூழ்நிலையில் பாழடைந்த வீடெனினும் நான்கு சுவர்களுக்குள் மடக்குக் கட்டில் போட்டுப் படுக்க ஓர் இடமாவது கிடைத்ததே! அதுவே பெரிய பாக்கியம் அல்லவா? இரவு சமீபித்தது. உடம்பில் சிறிது வலி ஏற்பட்டது; லேசான ஜுரமும் கூட. உணவு கொள்ள மனமில்லை. படுக்கையையே மனம் நாடிற்று. அயர்ந்த நித்திரை. நடுநிசியில் கண் விழித்தேன். உடம்பு அசவுகரியம், மிதமிஞ்சிவிட்டது. ஜுரம் 105 டிகிரிக்கு ஏற்றம். ஹஜ்ஜுக்காகப் புறப்பட்டுச் சென்று, தொழாமலிருக்க மனம் இடந்தராது. சமாளித்து எழுந்து உட்கார்ந்தேன். தயம்மத்தாலும், சைகையாலும் இஷா தொழுகையை முடித்தேன். மனம் சற்று பேதலிக்க ஆரம்பித்தது; எண்ணங்கள் அலைமோதின. ஊரை விட்டு மூவாயிரம் மைல்களுக்கப்பால் மினாவில் கடும் ஜுரத்தால் பீடிக்கப்பட்டுக் கிடக்கும் ஒருவனுடைய இருதயத் துடிப்பு எவ்வாறு இருக்க முடியும்? அரபாத்துக்குச் செல்வதற்கு இன்னும் ஆறு மணி நேரமே பாக்கி. நடுநிசி; வைத்திய உதவியைக் கோர சந்தர்ப்பம் சரியல்ல. கண்களும் கலங்கின. தன்னந்தனியே உற்றார் உறவினர். உடனின்றி விமானத்தில் பிரயாணம் செய்யத் துணிவிருந்தது; ஆயினும் இக்கடுஞ் சோதனை தாங்கமுடியவில்லை. படுக்கையிலிருந்த என் இரு கரங்களும் ஆகாயத்தை நோக்கி உயர்ந்தன.

"அல்லாஹ்வே! நாளை அரபாத்தில் ஹஜ்ஜுக் கூட்டம். நாளை நான் அதில் கலந்துகொள்ள உனது அருள் இல்லை என்றால் என்னுடைய இத்தனை கஷ்டங்களும் வீணாகும். உன் திருமறையிலே "நிச்சயமாக நான் அருகிலேயே இருக்கிறேன். என்னை அழைக்கும் சமயத்தில் அவ்

வழைப்போனின் அழைப்புக்கு விடையளிப்பேன்'' என்று வாக்குறுதி அளித்திருக்கிறாய். அதுமட்டுமல்ல; மக்காவைப் போன்று மினாவிலும் ஒருவன் இருதயபூர்வமாகக் கேட்கும் துஆவையும் ஒப்புக்கொள்ளப்படுமல்லவா! இந்த இக்கட்டான வேளையில் என்னைக் காத்தருள்வாயாக! முதலில், நாளை அரபாத். ஹஜ்ஜுக்குப் பின்னால் உன் திருத்தூதர் நபிகள் நாயகம் வாழும் மதீனா. பின்னர் என்னுடைய வரவை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் குடும்பம், பந்து, மித்திரர் இவர்களைக் காண முறையே செல்ல வேண்டும். படைத்துக் காத்து ரட்சிக்கும் வல்லமையுடையோனே! என்னுடைய துஆவை ஏற்றுக் கொண்டு என்னுடைய எதிர்பாராத நோயிலிருந்தும் என்னைக் காப்பாற்று'' என்று மனமுருகிப் பிரார்த்தனை செய்தேன். சிறிது நேரத்தில் மீண்டும் தூக்கம். பஜர்நேரம் மினாவிலுள்ள "மஸ்ஜிதே கைப்'' என்ற பள்ளியிலிருந்து பாங்குச் சத்தம் பலத்த ஒலிபெருக்கியிலிருந்து ஒலிக்க ஆரம்பித்துவிட்டது. தெருவிலே மக்கள் நடமாட ஆரம்பித்து விட்டனர். கண் விழித்தேன்.

"ஒலு'' செய்துகொண்டு பஜ்ர் தொழுகையை அந்தப் பாழடைந்த "அதிர்ஷ்ட'' முள்ள வீட்டிலேயே தொழுதேன். சிறிது நேரத்தில் அரபாத்துக்குச் செல்லும் பஸ் வாயிற்படியருகில் வந்து நின்றது. "சீக்கிரம் ஏறுங்கள்'' என்று வண்டிக்காரர்கள் வலியுறுத்த நானும் மற்றும் மூவரும் அதில் ஏறினோம். அவரவர்கள் சாமான்களை அவரவர்களே பஸ்ஸின் மீது ஏற்றினோம். பஸ் புறப்பட்டது. "லப்பைக், அல்லாஹும்ம லப்பைக்'' என்ற சத்தம் முழங்கியது. நானும் அதில் கலந்து கொண்டேன். சிறிது நேரத்தில் வலது கைவிரல்கள் உடம்பைத் தொட்டுப் பார்த்தன. ஏதாவது ஜுரம் இன்னும் பாக்கியுள்ளதா என்று! களைப்பும் நீங்கியது. ஜுரமும் மாயமாய் மறைந்தது. வாழ்க்கையில் மறக்க முடியாத தெய்வீக நகரத்தின் தெளிவான சாட்சி எனக்குக் கிடைத்த இடம் மினா அல்லவா ?

ஹஜ்ஜு முடிந்தது. ஜுலை மாதம் 10ம் தேதி பிற்பகல் மினாவிலிருந்து மக்க மாநகரத்தை அடைந்தோம். ஊருக்குப் புறப்படுவதற்கு முன்னால் கஃபதுல்லாஹ்வை இறுதியாகத் 'தவ்வாப்' செய்யவேண்டும். பைத்துல்லாஹ்வின் போர்வையை முத்தமிட்டு விடை பெற்றுக்கொள்வது ஒரு இலேசான காரியமன்று. கண்ணீர்ப் பெருக்குக்கு ஓர் அளவில்லை. வெளியே செல்லவேண்டும் ஹரம் ஷரீபின் வாயிற்படிக்கருகில் நின்று கொண்டு கடைசி முறையாக இறை இல்லத்தை கண் கொள்ளக் கண்டேன். பத்து ஆண்டுகளாக அணிந்திருந்த மூக்குக்கண்ணாடி கண்ணீரால் நனைந்திருந்தது. அதனைக் கழற்றித் துடைத்துக் கொண்டிருந்த போதும் என் பார்வை கஃபதுல்லாஹ்வை விட்டு நீங்கவில்லை. ஹரம் ஷரீபில் தொழுகை நேரங்களில் தலை வணக்கத்தின்போது இடைஞ்சலாயிருந்த கண்ணாடியை அறவே ஒழித்துக்கட்ட ஆண்டவன் விரும்பினான்போலும். கண்ணாடியின்றியே தூரப்பார்வை கிடைத்து விட்டது. இயற்கைப் பார்வையால் கஃபதுல்லாஹ்வை கண்குளிரக் கண்டேன், இமை கொட்டாமல். அன்று மக்காவில் பெட்டியில் மடித்து வைத்த அந்த மூக்குக் கண்ணாடியை இன்றுவரை எடுத்து உபயோகிக்கவில்லை. தெய்வீக நகரத்தின் தெளிவான சாட்சியுடன் என்னுடைய கண்ணாடி இன்னும் மூலையிலேயே கிடக்கின்றது! அல்ஹம்து லில்லாஹ்.

ஜுலை மாதம் 12ம் தேதி மக்காவிலிருந்து மதீனாவுக்குப் புறப்பட்டேன். மக்காவுக்கும் ஜித்தாவுக்குமிடையே கொடும் வெய்யில். உஷ்ணக் காற்றும் சூழ்ந்து விட்டது. உதடுகளும் கண்ணிமைகளும்

பொரிந்து விட்டன. சுமார் இருபது நிமிஷங்கள் பெரிய சோதனையாக இருந்தது. ஜித்தாவில் சற்று இளைபாறிக்கொண்டு மதீனா செல்வதற்கு அன்றே விமான நிலையத்தை அடைந்தேன். பிரயாணிகள் சேராததன் காரணமாக விமானம் எப்பொழுது புறப்படுமென்பது உறுதி இல்லாமலிருந்தது. தூங்காமலே இரவைக் கழித்துக் கொண்டிருந்தேன். இரவு ஒரு மணிக்கு விமான அறிவிப்பு காதில் ஒலித்தது. விமான நிலையத்திற்குள் புகுந்து விமானத்தில் ஏறிக்கொண்டேன். ஒரு மணி நேரம் பறந்து மதீனாவை அடைந்தேன். மதராஸ் முஅல்லிமுடைய ஜாகையைச் சேருவதற்குள் இரவு மூன்று மணி அடித்துவிட்டது. இரண்டே மணிநேரம் படுக்கையில் சாய்வதற்குள் பஜ்ர் தொழுகையை அறிவிக்கும் மஸ்ஜிதெ நபவியின் ஒலிபெருக்கிகள் எழுப்பிவிட்டன. தொழுகை முடிந்தது. மீண்டும் படுக்கைக்குச் சென்றேன். முன்னாள் பகல் பிரயாணம், அத்துடன் உஷ்ணக்காற்றின் உபத்திரவம், அப்பால் இரவு பிரயாணம் எல்லாம் சேர்ந்து கொண்டு உடம்பைக் கசக்கிப் பிழிந்து விட்டன. காலை ஏழு மணிக்கு முஅல்லிம் வந்து சந்தித்தார். க்ஷேமலாபங்களை விசாரித்தார். ‘‘நபிகள் நாயகத்தின் ரௌலா ஷரீபை ஜியாரத் செய்யச்செல்லுங்கள்’’ என்று கூறினார். எனக்கும் ரௌலா ஷரீபைச் சீக்கிரமாகக் காணும் ஆவல் உள்ளத்தை ஆட்டிக் கொண்டிருந்தது. ஆயினும் உடல் நிலை இடங்கொடுக்காமல் இருந்தது. எனவே ‘‘எட்டு தினங்கள் மதீனாவில் இருக்கத் திட்டமிட்டுள்ளேன். சற்று ஓய்வு எடுத்துக்கொண்டு மாலையில் செல்கிறேன்’’ என்றுதான் சாதாரணமாக அவரிடம் கூறினேன். முஅல்லிம் திடீரென ஒரு போடு போட்டார். அவர் மதீனா வாசி. சுமார் 65 வயது நிரம்பியவர். அரபு பாஷையில் வல்லுநர். நொடிக்கொரு ஆயத்தும் நிமிஷத்திற்கொரு ஹதீதும் கூறுகிறார். புன்சிரிப்புடன் என்னை நோக்கி ‘‘நீங்கள் ஒரு ஹதீதைக் கேட்டிருக்கவில்லையா. மதீனாவில் உடல்நலக் குறைவாலோ அன்றி அசதியாலோ ரௌலா ஷரீபுக்குச் செல்லாமல் இருக்க வேண்டாம். இரண்டு பேரீச்சம் பழத்தை ‘‘பிஸ்மில்லாஹ்’’ என்று சாப்பிட்டுவிட்டு உங்கள் காரியத்தைச் செய்யுங்கள். எல்லாம் சரிப்பட்டுவிடும்’’ என்று நபிகள் நாயகமே கூறியிருக்கிறார்கள் என்று கூறி முடித்தார் இந்த உபதேசத்துக்குப் பின் ஓய்வெடுத்துக்கொள்ள எந்த முஸ்லிமின் உள்ளம்தான் இடங்கொடுக்கும்? உடனே முஅல்லிம் அவர்களுடைய குமாரருடன் கிளம்பிவிட்டேன். மஸ்ஜிதெ நபவி

Estd. 1929

Tele Gram : 'KADIRIA'
Phone No. 94

BEST IN THE MARKET

KADIRIA MATCH FACTORY

P. O. Box No 15 KOVILPATTI (S. Ry.)

யில் நுழைந்தவுடன் இரண்டு 'ரக அத்' தொழவேண்டும். முதல் ரக் அத்தில் முழங்கால்களை மடித்து உட்கார்ந்து பின்னர் எழ என்றால் முடியவில்லை. பொறுக்க இயலாத வலி; மனதில் ஏற்பட்ட கலக்கமும் துக்கமும் சொல்லி முடியாது. இரண்டாவது ரகஅத்தில் முழங்கால்களை மடிக்கும்போது ஆரம்பத்தில் இருந்த கஷ்டமில்லை. பின்னர் சலாம் கொடுத்து எழுந்து நிற்கும் போது வலி அறவே ஒழிந்துவிட்டது. நபிகள் பிரானின் இந்தக் கிருபையை அனுபவித்தவனாய் ரௌலா ஷரீபில் அவர்களுடைய சன்னிதானத்தில் நின்று ஆனந்தக் கண்ணீர் வடித்து சலாம் கூறினேன். சற்று நேரத்திற்குள் உடல் அசதியே மறைந்து விட்டது. ரௌலா ஷரீபில் நபிகள் நாயகத்தின் தலைமாட்டிலிருக்கும் "சுவர்க்கத்தின் துண்டு" என்ற அடையாளமிடப்பட்டுள்ள பாகத்தில் பத்து தொழுகைகளை நிறைவேற்றி யான் வெளியேறினேன். இரண்டு மணி நேரம் கழித்து மீண்டும் முஅல்லிம் அவர்களைச்சந்திக்கும் போது "சையத் சாஹிப், உடம்பு வலி எப்படி இருக்கிறது?" என்று புன்சிரிப்போடு கேட்டார். எனக்குக் கண்ணீர் பொங்கியது. தெய்வீக நகரத்தின் தெளிவான சாட்சியத்தை மதீனாவிலும் கண்ட என் நெஞ்சம் நெக்குறுகி நின்றது.

தெய்வீக நகரங்களின் தெளிவான சாட்சியங்களுடன் ஹஜ்ஜுப் பிரயாணத்தை இனிது முடித்துக் கொடுத்த இறைவனை நாள்தோறும் இறைஞ்சிக் கொண்டுள்ளேன். இவ்வாறு நூற்றுக்கணக்கான ஹாஜிகளுக்கும் ஆண்டவன் அருள் கிட்டியிருக்குமென்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை. இந்தச் செய்திகளைக் கண்ணுறும் வாசக அன்பர்களுக்கும் தெய்வீக நகரங்களுக்குச் செல்ல இறைவன் அருள்பாலிப்பானாக. ஆமீன்!

ஏ. எம். மீரான் எழுதிய துப்பறியும் நாவல்கள்

ஒவ்வொன்றும் தனித்தனிச் சுவையுடையது. பத்திரிகைகளெல்லாம் ஒரு முகமாகப் பாராட்டிய அற்புத நாவல்கள்.

1. கண்ணம்மாவைக் காணவில்லை! 1·50
2. தங்கமாளிகை ரகசியம் 1·50
3. நீலத்திரை மர்மம் 1·75
4. குயில் பூங்கா மர்மம் 1·50
5. இருளிலே ஓர் உருவம்! 1·00
6. இரண்டே நாள்! 1·00
7. பழி தீர்ந்தது! 1·00
8. பணத்துக்கு ஓர் உயிர்! 1·25
9. இவனைத் தெரிகிறதா? 1·25
10. மர்ம மாளிகை 1·00
11. அபாயச் சீட்டு 1·00
12. மர்மக் கடிதம் 1·50
13. எமனுக்கு எமன்! 1·25
14. துப்பறியும் குற்றவாளி 1·50

அத்தனை நாவல்களையும் விரும்புபவர்கள் விலையை மட்டும் அனுப்பினால் போதும். தபால் செலவு இனாம்! இலங்கைக்கு மட்டுமே வி. பி. பி. அனுப்பப்படும்.

பிறை நிலையம்

192, அங்கப்பநாய்க்கன் தெரு, சென்னை-1.

வாழவைக்கும் வளமார் கவிஞர்

கவிஞர்கள் இருவகைப் படுவர். அழகிய சொல்லடுக்குகள், சொல்வரிசைகள், எதுகை, மோனை ஆகியவற்றைக் கோத்துக் கவிதையாக்குபவர்கள் ஒரு சாரார். இவர்களுக்குக் கவிதைகளிலே கருத்து இருக்க வேண்டுமே என்பதைப் பற்றிக் கவலையிராது. அழகான சொற்கள், அந்தந்த இடங்களிலே தூவப்பட்டிருந்தாலே போதும், அவர்களுடைய கவிதை உருவாகிவிடும். ஆனால் அந்த வார்த்தைகளை இங்கங்கே மாற்றிவிட்டால் அவர்கள் கவிதையே உருக்குலைந்துவிடும். உர்தூவில் மட்டுமல்ல மற்றும் பல மொழிகளிலும் கவிதைகள் பெரும்பாலும் இப்படியே பிறந்திருக்கின்றன.

இரண்டாம் வகைக் கவிஞர்களின் கவிதைகள் உள்ளத்தில் பிறப்பவை, அவர்கள்தம் உள்ளப்பொய்கையில் புதுப் புதுக் கருத்துக்கள் குமிழிட்டுக் கொண்டிருக்கும். உயரிய கருத்துக்கள், உன்னதமான இலட்சியங்கள். மனிதவாழ்வை வளப்படுத்த உதவும் மாண்புள்ள எண்ணங்கள் ஆகியவை இக்கவிதைகளின் அடிப்படையாக அமையும். இக் கருத்துக்களைச் சுமந்து வாசகர்களிடம் வரும் வாகனங்களாகவே வார்த்தைகள் இவர்கட்குப் பயன்படும். கவிதையில் வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பின்னே, பாடும் கவிஞனின் பரந்த உள்ளத்தையும், பண்புறு நோக்கையும் காணலாம். இத்தகைய ஒரு நல்லிசைக் கவிஞராக இக்பால் இன்று உலகம் முழுவதிலும் போற்றப் படுகிறார்.

மனித வளர்ச்சியிலே காணப்படுவது போலவே, இக்பாலின் கவிதைகளிலேயும் குழந்தைப்பருவம், இளமைப் பருவம், முதிர்பருவம் ஆகிய மூன்று பருவங்களைக்காண்கிறோம். இக்பாலின் ஆரம்பக்கவிதைகள், இதர பல கவிஞர்களுடையவை போல, அழகுசொற்களும், அணிகளும் நிறைந்தவை. அடுத்த கட்டம், மேலை நாட்டுக்கருத்துக்கள் இந்தியாவில் இடம் பெறத் தவித்துக் கொண்டிருந்த காலம். தம் சொந்த சமூகத்தவரின் செயலற்ற தன்மையைக் கண்டு மனம் நொந்த கவிஞருக்கு சுறுசுறுப்பும், வேகமும்,

ஒட்டமும் மிகுந்த ஐரோப்பிய நாக ரீகம் கவர்ச்சிகரமாக இருந்தது.

இக்பாலுடைய கவிதா வளர்ச்சியின் இறுதிக்கட்டத்தில்தான் அவர் கவிதைகள் முழு மலர்ச்சியடைகின்றன. மனிதனின் அறிவு வளர்ச்சி இளமையில் வெகு வேகமாக மாறுதலடையும்; முப்பது நாற்பது வயதுகளுக்கிடையில் ஒருவாறாக அது நிலைக்கு வரும்; அதன் பின்னர் அநேகமாக அதில் மாறுதலிராது. இந்த நியதிக்கொப்ப இக்பாலின் கவிதைகள் இக்கட்டத்திலேயே நிலையான கருத்துக்களைக் கொண்டமைந்திருந்தன.

இதே காலத்தில்தான் உர்து மொழியில் எழுதுவதைவிட பார்ஸீ மொழியில், தம் உள்ளத்தில் கவிதை ஊற்றெடுப்பதற்கொப்ப, உணர்ச்சி வசமாக எழுதமுடியும் என்று கவிஞர் கண்டார். பார்ஸீயில் அவர் எழுதியவற்றுள் சிறந்தவை 'அஸ்ராரேகுதி' (இதயத்தின் இரகசியங்கள்), 'ரமூஸே பேகுதி' (இதயத்துக்கும் அப்பாற்பட்ட தத்துவம்) ஆகிய இரண்டும் ஆகும். ஒரு பாரகாவியத்தில் இருக்கவேண்டிய பொருள் செறிவு, ஒரு பேரிலக்கியத்தில் இருக்கவேண்டிய கருத்தழகு, இன்பம் சுரக்கும் இனிய கவிதையிலே இருக்கவேண்டிய பண்பாடு ஆகிய அனைத்தையும் இவ்விரண்டு பார்ஸீ கவிதைகளிலும் காணலாம்.

எம். அப்துல் வஹ்ஹாப்
எம்.ஏ., பி.டி.எச்.

இவ்விரு கவிதைகளும் கருக்கொண்டிருக்கும் கருத்தே மனிதன் 'தன்னுணர்வு' பெறவேண்டும் என்பதுதான். 'மன் அரப நப்ஸஹு' 'ஃபகத் அரப ரப்பஹு': தன்னை, தன் உள்ளத்தை, அறியும் மனிதன், இறைவனை அறிவான் என்று நாயகம்(ஸல்) கூறியிருக்கிறார்கள். இந்த "தன்னுணர்வு" என்றால் என்ன, மனித சாதனைகளுக்கு இது எப்படி அடித்தளமாக அமைந்திருக்கிறது என்பதை இக்பாலின் வாயிலாகப் பார்ப்போம்.

மனிதன் தன் சதாரண விருப்பு, வெறுப்புகளைப் பற்றி நன்கு அறிந்திருப்பான்; உணர்ந்திருப்பான். தனக்கு எது தேவை, எது பிடிக்கும், எது பிடிக்காது என்பனவற்றைக் குறித்து அவன் அடிக்கடி பேசுவான். "வெட்ட வெளியிலே படுத்தால் என் உடலுக்கு ஒத்துவராது." "நண்பர்களுடன் பேசிக்கொண்டே சாப்பிடுவது எனக்குப் பிடிக்கும்" என்பன போன்ற சாதாரண உடல் உணர்வுகளை மனிதன் பெற்றிருக்கிறான். இவ்வித சாதாரண உணர்வுகளைத் தாண்டி, தன் உள்ளத்தில் புகுந்து, ஆழமாகச் சென்று தன்னையே மனிதன் ஆய்ந்து கொள்வதில்லை.

மனிதன் தன்னுள்ளே எத்தகைய சக்தியை அடக்கி வைத்திருக்கிறான்; அவனுடைய ஆற்றல், துணிவு, திறமை ஆகியவை எப்படிப் பட்டவை; அவன் முயன்றால், துணிந்தால், பாடுபட்டால் எத்தகைய சாதனைகளை அவனால் சாதிக்க முடியும் என்பன பற்றி அவன் ஆராய்ந்து தெரிந்து கொண்டதில்லை.

வேளா வேளையில் உணவருந்தி, ஒழுங்கான முறையில் வாழ்ந்து, கட்டுப்பாடாக உடற் பயிற்சி செய்து வரும் மனிதனின் உடல் நல்ல நிலையிலிருக்கக் காண்கிறோம். அவன் ஓடியாடி சுறு சுறுப்பாகப் பாடுபடுவதைப் பார்க்கிறோம். இதே போன்று தன்னுள்ளே அடக்கி வைத்திருக்கும் ஆற்றலை, சக்தியை சீராகப் பயன்படுத்த இசையும் மனிதனுக்கு எவ்வளவோ சாதிக்க முடியும்.

இந்த சக்தியை வெளிக் கொணர்வதால், பயன் படுத்துவதால் மனிதன் எவ்வளவு முன்னேற்றம்

அடைகிருனே அந்த அளவுக்கு அவன் உயர்ந்தவன்! உன்னதமானவன்!! இத்தகைய உயர்வு பெற்ற உண்மை முஸ்லிம்களைக் கொண்ட சமுதாயம் சீருடைய சமுதாயம். ஆகவே தன்னைப்பற்றி தாழ்வாக நினையாது, "நான் மனிதப் பதர்; நான் துரும்பு; நான் தூசி; நான் ஒடிந்துபோன முள்" என்றெல்லாம் எண்ணமிடாது, "நான் ஆண்டவனின் அருமையான படைப்பு, அவன் ஒருவனைத் தவிர நான் இந்த உலகில் யாருக்கும் அடிபணிய மாட்டேன்; அவன் ஒருவன் தவிர யாருக்கும் அஞ்சமாட்டேன்: அவன் எனக்குத் துணை செய்வான், நான் செயலாற்றுவேன்; சாதிப்பேன், வெற்றி கொள்வேன்" என்று தலைநிமிர்ந்து மனிதன் முழங்க வேண்டும் என்பதே இக்பால் கருத்து.

> **கவிஞன்**
>
> கவிஞனின் இதயத்திலே அழகு மலர்கிறது. அவனுடைய உள்ளமென்னும் மலை முகட்டிலிருந்து அழகுச் சூரியன் கவிதைகள் என்னும் ஒளிக் கதிர்களைப் பரப்புகிருன்.
>
> *அல்லாமா இக்பால்*

'கல்லிலே நெருப்பிருக்கிறது என்ருல் ஆச்சரியமாக இருக்கும். இரண்டு கற்களை எடுத்து ஒன்ருேடொன்று மோதினல் நெருப்புப் பொறி பறக்கிறது. கல்லில் அடங்கியிருக்கும் சக்தி நம்மால் வெளிப்படுத்தப்படுகிறது. இறைவன் திருமறையில்: "அவனே பசுமையான மரத்திலிருந்து உங்களுக்கு நெருப்பை உண்டு பண்ணுகிருன்" (ஸூரத்து யாஸீன்: 80) என்று கூறுகிருன். பச்சை மரத்திலே நெருப்பை வைத்திருக்கிறேன்' என்கிருன் இறைவன். அதைக் காயவைத்து நெருப்பிலிட்டுத் தீயை வளர்த்துக் கொள்கிறது மனித இனம். கல்லும், நெருப்பும் தானுக இயங்கும் தன்மையற்றவை; தானுக முயலும் சக்தியற்றவை. ஆகவே தான் இவற்றினுள் தேங்கி நிற்கும் நெருப்பு என்னும் சக்தியை வெளிக் கொணர்வதற்கு நம் முயற்சியும் உழைப்பும் தேவைப்படுகிறது. கல்லை உராயச் செய்து, பசு மரத்தை உலர்த்தி நெருப்பை வளர்த்து அவற்றிலுள்ள சக்தியைப் பயன்படுத்துகிருேம். ஆனல் மனிதன் இப்படி உயிரற்ற ஒரு பொருளல்லவே; அவனுள் இருக்கும் சக்தியை அவனே வெளிப்படுத்தத் திராணியுள்ளவன்.

விண்ணிலே பறக்கவும், விரிகடலிலே மிதக்கவும் வேண்டிய சாதனங்களை உருப்படுத்திக் கொண்டது மனித உழைப்பு; பாதாளத்தைக் குடைந்து பாதை அமைக்கவும், மண்தரையிலே மாளிகைகளை எழுப்பவும் ஆற்றல் படைத்தது மனிதனின் திறமை. மனிதனுக்கு வியத்தகு சக்திகளைக் கொடுத்துத் தானே இறைவன் அவனைத் தன் பிரதிநிதியாக உலகுக்கு அனுப்பினுன். "இன்னீ ஜாஇலு (ன்) ஃபில் அர்ளி கலீபத்தன்" "நிச்சயமாக நான் பூமியிலே (என்) பிரதிநிதியை நியமிக்கப் போகிறேன்" என்று கூறித்தானே ஆண்டவன் ஆதி மனிதரைப் படைத்தான்.

இறைவனின் நேர் பிரதிநிதியாக உலகில் வாழும் மனிதன், தன் சக்திகளை பலப்படுத்திப் பயன் படுத்த வேண்டும். "என்னல் என்ன ஆகும், எல்லாம் விதியின் செயல்" என்று கூறி "சோம்பிச் சுகம் பெறுவது" மாபெரும் தவறு என்று தம் கவிதைகளில் திருப்தித் திருப்பித் குறிப்பிடுகிருர் இக்பால். இறைவன் சிருஷ்டிக்கும் மூலப் பொருளைக்கொண்டே அழகிய பொருள்களைச் சமைக்க

ஆற்றல் பெற்றது மனிதசக்தி; அந்த சக்தியை மனிதன் உணர்ந்து செயலில் இறங்க வேண்டும்.

இக்பாலின் "ஆற்றலுள்ள" மனிதன் இறைவனிடம் கூறுகிறான் (பயாமே மஷ்ரிக். பக்கம்: 132)

"இரவைப் படைத்தாய் நீ
எழில் விளக்கைச் சமைத்தேன் நான்!
மண்ணைப் படைத்தாய் நீ
மண் பாண்டம் சமைத்தேன் நான்!
காடும் மலைகளும், பாலை மண்ணும் படைத்தாய் நீ
கவினுறு மலர் வனங்களும்,
கனிகள் நிறை தோட்டங்களும் பூம்பொழிலும் சமைத்தேன் நான்!
கல்லிலிருந்து கண்ணாடி சமைப்பவன் நான்!
கடும் விஷத்தையும் சஞ்சீவியாக்குபவன் நான்!

தன் சாதனைகளில் தன் சக்தி பரிணமிப்பதைக் கண்டு இறைவனிடமே அதனைப் பற்றிக் கூறுகிறான் தன்னையறிந்த இம்மனிதன்.

உண்மை மனிதனே! வாளைப் போல் கூர்மையுடையவனாகவே இரு. உன் உலகத்திற்கு நீயே தலைவிதியாக இரு. (அதாவது உன் விதி உன் கைக்குள்ளே இருக்கிறது)" என்று இறைவன் மனிதனைப் பார்த்துக் கூறுவதாக "ஜாவீது நாமாவில்" பாடியிருக்கிறார் கவிஞர்.

தன்னுணர்வு பெற்று மனிதன் முன்னேறும் பொழுது இயற்கையே அவனைக் கண்டு நடுங்கும் என்பதை:

"ஆதமுடைய சந்ததிகளின் முன்னேற்றத்தைக் கண்டு தங்கள் பாதையிலே நடுங்கிச் செல்கின்றன நட்சத்திரக் கூட்டங்கள். விண்ணிலிருந்து விழுந்த இந்த வெள்ளி மீண்டும் பூரண சந்திரனாகி விடக்கூடாதே (என்று அவை அஞ்சுகின்றன)" என்று "பாலே ஜிப்ரீலில்" பாடுகிறார்.

தன் வாழ்வைச் செம்மைப்படுத்தச் சீரமைக்க மனிதன் உரிமை படைத்திருக்கிறான்; தன் உரிமை கோரி உழைக்கும் மனிதனை தலைவிதி தடுக்க முடியாதென்பதை ஒரு தத்துவமாகவே "இதயத்தின் இரகசியத்தில்" வடித்துக் காண்பிக்கிறார் கவிஞர்.

பிறர் தயவிலே வாழும் மனிதன் சுதந்திரமற்றவன்—பிறர் இட்ட வேலைகளைச் செய்துகொண்டு, கைகட்டி, வாய் பொத்தி கட்டளைகளுக்குக் காத்து நிற்பவன். அவனுக்கென்று ஒரு தனிமை கிடையாது. அவனால் எதுவும் சாதிக்க முடியுமென்று பிறர் ஒப்புவதுமில்லை; அவன் அபிப்பிராயங்களுக்கு அணுவளவும் மதிப்புக் கொடுப்பாரும் இல்லை.

ஆனால் பிறர் தயவு இழந்து தன்னந்தனியனாக அவன் விடப்பட்டால்..? அவன் உழைக்கக் கற்றுக்கொள்கிறான். படிப்படியாக அந்த உழைப்பிலே இன்பமும் காண்கிறான். அப்பொழுதுதான் அவனுடைய தன்னறிவு விழிப்படைகிறது; தன் பெருமையை அவன் உணர்கிறான்.

தன்னறிவை, தன்னுணர்வைச் சிலர் தவறாக "தற்பெருமை"—"தான்" என்னும் அகங்காரம்—திமிர் என்று எண்ணுகின்றனர். இது பிழையுள்ள கருத்து. தன்னுணர்வுக்கும் தற்பெருமைக்கும் இடையே விரிவான வேற்றுமை இருக்கிறது. தற்பெருமையுள்ள மனிதன்—அகங்காரமும், ஆணவமும் படைத்த மனிதன்—தன் திறமை மீது, தன் ஆற்றல் மீது, தன் மனோ வலிமை மீது நம்பிக்கை கொண்டவனல்லன். அவனுக்குத் தன் பலவீனங்கள் மீதும், தன் குறைகள் மீதும் தான் கண்ணிருக்கும். எங்கே தன் குறைகள் பிறர் கண்ணுக்குத் தெரிந்து விடுமோ என்றஞ்சி, அவற்றை மறைப்பதற்காக தன்னைப் பற்றியும், தன் வீரச் செயல்கள் பற்றியும் தன் அரிய

சாதனைகள் பற்றியும் அடிக்கடி பேசிக் கொண்டிருப்பான். தற்பெருமை தன் தோல்வியை மறைக்க ஒரு திரையாகப் பயன்படும். பயன் படவேண்டும் என்பதே அவன் மனத்தின் அடித் தளத்தில் உள்ள ஆசை.

பெண்மை

> பெண்ணை அடிமையாக எண்ணும் முஸ்லிம் திருக்குர்ஆனின் போதனைகளால் பலன் அடையாதவனே யாகும்.
>
> எந்தக் கல்வி முறையினால் பெண் தன் பெண்மைக்குரிய பண்புகளை இழந்துவிடுகிறாளோ அந்தக் கல்வி மரணத்துக்கு ஒப்பானது.
>
> *அல்லாமா இக்பால்*

ஆனால் தன்னுணர்வுள்ளவன்—தன்னறிவுள்ளவன் — தன்னடக்கமும் உள்ளவன் ஆவான். அவன் ஆத்ம விழிப்புள்ளவன். சிக்கல்கள் எழும்பொழுது அவன் ஆத்ம பலம் அதிகரிக்கிறது. அவன் தனித் தன்மை பிரகாசிக்கிறது. ஆபத்துகள் வரும் பொழுது அவற்றைச் சமாளிக்க அவன் ஆற்றல் முந்தி எழுகிறது. துன்பம் வந்துற்றபோது அவன் தூய உள்ளம் ஈடு கொடுக்கிறது. அமைதியிலும் தனக்கும் பிறர்க்கும் உழைப்பவன் அவன்.

ஆனால் இத்தகைய தன்னுணர்வை, ஆத்ம விழிப்பை, உழைப்பில் மனிதன் அடையும் உத்சாகத்தை அழிப்பதற்கென்றே ஆதி காலத்தில் கிரேக்க வேதாந்தங்கள் இஸ்லாமிய தத்துவங்களில் கலந்து விட்டன.

"மனிதன் கை கால்களை அசைக்க வேண்டியதில்லை. நம்பிக்கை கொண்டு ஒரு மூலையில் அமர்ந்திருந்தாலே போதும்...அதிலும் நித்திய வாழ்வு பெற வேண்டுமாயின் மனிதன் தன்னைத்தானே—தான் என்னும் உணர்வை—அழித்து விட வேண்டும்" என்ற போதனைகள் கிரேக்க நூற்களை அரபியில் மொழி பெயர்க்கப் புகுந்த ஆரம்ப இஸ்லாமிய எழுத்தாளர்கள், கிரேக்க நாட்டிலிருந்து கடன் வாங்கிக் கொண்டவை. அழியக் கூடிய மனிதனால் ஒன்றும் ஆவதில்லை. அவன் அலைகடல் துரும்பு, புயலில் சிக்கிய சருகு. விதிக்கு அவன் அடிமை என்ற போதனைகளையும், இத்தகைய போதனைகளைப் புகுத்தும் கவிஞர்களையும் இக்பால் தம் கவிதைகளில் வன்மையாகக் கண்டிக்கிறார். இஸ்லாத்தை பலஹீனப்படுத்தும் இந்த தத்துவங்கள் பிளேட்டோ (அப்லாத்தூன்) என்னும் கிரேக்க தத்துவ வாதியின் நூற்களிலிந்து இஸ்லாமிய எழுத்தாளர்கள் கடன் பெற்றவை. "சாவதே வாழ்வின் இரகசியம்; விளக்கு அணைந்து விடுவதனாலேயே பெருமையடைகிறது" என்று கூடிய பிளேட்டோ நம் எண்ணங்களிலே மேலோங்கி நிற்கிறாரே; இது அழிவுக்கு வித்தில்லையா," என்று அல்லாமா இக்பால் தம் கவிதைகளிலே மனம் நொந்து பாடியிருக்கிறார்.

ஆண்மையிழந்த புலி பற்றிய படிப்பினை நிறைந்த ஒரு கதையை சான்றாக, "இதயத்தின் இரகசியங்கள்" என்னும் அமர காவியத்தில் நமக்கு கவிஞர் எடுத்துரைக்கிறார்.

"வளமான ஒரு பிரதேசத்தில் வசித்து வந்த ஓர் ஆட்டுக்கிடை பகையவர்களின் பயமின்றி பெருகி வந்தது. இந்த இன்ப வாழ்வைக் குலைக்க ஆட்டுக் கூட்டத்தில் வந்து குதித்தன வனங்களிலிருந்து வந்த சில புலிகள். வெற்றி முரசு கொட்டின; ஆடுகளின் சுதந்திரத்தையும் பறித்துக் கொண்டன.

தன் கூட்டத்திற்கு நேர்ந்த கதியைப் பார்த்த ஒரு கிழட்டு ஆடு, தந்திரத்தால் தங்கள் நிலையை

உயர்த்த முடிவு கட்டிற்று. பலஹீனர்கள் தங்களைக் காப்பாற்ற குயுக்தியைத் தானே கையாளுகிறார்கள். அதிலும் வஞ்சம் தீர்க்க வேண்டும் என்ற வெறி தலைக்கேறினால், தந்திரத்தின் சக்தி இன்னும் பலப்படுகிறது. 'நம் நிலை மிகவும் சிக்கலானது. நம் துயர்கள் நிறைந்த கடலுக்கு கரையே இல்லை. போரிட்டு நாம் புலியினின்று தப்பமுடியாது. நம் கால்கள் வெள்ளி போன்றவை. ஆனால் அந்தப் புலியின் நகங்கள் இரும்பைப் போலல்லவா இருக்கின்றன'' என்று தமக்குள்ளே கூறிக் கொண்டது அந்தக் கிழட்டு ஆடு.

"நாம் எவ்வளவு முயன்றாலும் ஓநாயின் தன்மையை ஆட்டில் புகுத்த முடியாது. ஆனால் சீறிச் சினந்து வரும் புலியை, வாரி அணைக்கத் தகும் ஆடாக மாற்ற முடியும்; தன் இயற்கையை அது மறக்கும்படியாகச் செய்யமுடியும்'' என்று ஒரு திட்டம் வகுத்துக் கொண்ட அந்தக் கிழட்டு ஆடு, புலிகளிடத்தில் சென்று:

"திமிர் பிடித்த மிருகங்களே! ஆத்மீக சக்தி பெற்றவன் நான். புலிகளுக்காக ஆண்டவனால் அனுப்பப்பட்ட தூதுவன் நான்: இருண்டு மருண்டுகிடக்கும் கண்களுக்கு நான் ஒளியாக வந்திருக்கிறேன். சட்டங்களை நிலைதிருத்தவும், கட்டளைகள் பிறப்பிக்கவும் நான் வந்திருக்கின்றேன்.

"உங்கள் பாவச் செயல்களுக்காக மன்னிப்புக் கேளுங்கள். தீமை செய்யத் திட்டமிடும் தீயர்களே! நல்லது செய்ய நாடுங்கள். அதிகமான பலம் பெற்றிருப்பது இழிவானது! புல்லுணவு அருந்துவது தான், நேர்மையாக வாழ்வதற்கு வழியாகும். காய்கனிகளை புசிப்பவன் ஆண்டவனுக்கு வேண்டியவன். உங்கள் பல் இவ்வளவு கூர்மையாக யிருப்பது உங்களுக்கே ஓர் அவமானம். உங்கள் பார்வையே இதனால் குருடாகிவிடுகிறது. சுவர்க்கம் பலவீனமானவர்களுக்குத் தான் என்பது உங்களுக்குத் தெரியாதா? பலம் அழிவுக்குத்தானே வழி காட்டுகிறது. பேரும் புகழும் பெற விரும்புவது தீமை பயக்கும் குணம் அல்லவா? நாடாள்வதை விட வறுமையால் வாடுவது இனிப்பாயிற்றே......

"ஆட்டை அழிப்பதில் ஆனந்தங் கொள்ளும் புலிக் கூட்டமே, உன் ஆத்மாவைக் கொல். சிறப்படைவாய். பலம் மிருதியால் காலடியிலிட்டு நீ புல்லை நசுக்கினாலும், அது மீண்டும் வளர்கிறது......ஏ புலிக் கூட்டமே உன்னை மறந்து விடு. உன் கண்களையும், காதுகளையும் உதடுகளையும் மூடிக் கொண்டு (தவத்திலாழ்ந்து விடு.) அப்பொழுது தான் உன் எண்ணங்கள், உன் சிந்தனைகள் வானவெளியையும் தாவிப் பிடிக்கம். இந்த உலகத்தின் பசும்புல் கருகி விடும்; இது நிலையற்றது.........கானலை நீரென்

வருந்துகிறோம்

தஞ்சை மாவட்டம்பாக்கம் கோட்டூர் முஸ்லிம் மகாஜன சபைத் தலைவரும் பள்ளி வாசல் புதுப்பிக்கும் கமிட்டி தலைவரும், நூரிய்யா சொற்பயிற்சி மன்றம் மதிமலர் மன்றம் போன்ற நிறுவனங்களின் ஸ்தாபகரும், போஷகரும் பொதுநல ஊழியரும் சிங்கை பிரபல வர்த்தகருமான ம. அ. முஹம்மது ஷரீப் அவர்கள் சிங்கப்பூரில் 11-1-58 அன்று இறையள்வில் சேர்ந்தார்கள் என்ற செய்திக் கேட்டு பெரிதும் வருந்துகிறோம். அன்னவர் பிரிவாற்றாமையால் வருந்தும் அவர் தம் குடும்பத்தாருக்கும் சுற்றம் சூழ்நட்புக்கும் பொதுநல ஸ்தாபனங்கட்கும் எம் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்.

றெண்ணி மயங் காதே மடக் கூட் டமே!'' என்று போதித்தது கிழட்டு ஆடு.

கடும் உழைப் பால் களைத்திருந்த புலிக் கூட்டத் திற்கு ஆட்டின் போதனை சிறிது பிடித்திருந்தது. சிந்தையை உறங்க வைக்கும் இந்த ஆலோசனையை அப்புலிகள் ஒரு தத்துவமாகக் கருதின. ஆடுகளை உண்டுவந்த புலிக் கூட்டம், ஆட்டின் மதத்தைப் பின் பற்றலாயின. புல்லுணவை மேற் கொண்டன. இறுதியில் அவற்றின் புலித்தன்மையையே பறிகொடுத் தன. பற்கள் கூர்மையிழந்தன; மின் வெட்டும் அவற்றின் கண்கள் பஞ்ச டைந்தன; படிப்படியாக வீரம் அவற் றின் நெஞ்சங்களிலிருந்து வடிந்து விட்டது. கண்ணுடியிலே பிரகாசம் மங்கி விட்டது. ஓடியாட வேண் டும். உழைக்க வேண்டும். பாடு படவேண்டும் என்ற உத்சாக எண் ணம் அவற்றின் உள்ளங்களில் வாழ வில்லை. ஆளும் சக்தி மறைந்தது; சுதந்திர உணர்வு அற்றது. கீர்த்தி யும், மதிப்பும், நற்பேறும் அவை இழந்தன. எஃகு போன்றிருந்த அவற்றின் நகங்கள் பலமிழந்தன; அவற்றின் ஆத்மாக்கள் மடிந்தன; அவற்றின் உடல்கள் சமாதிகளாகி விட்டன. ஆத்ம பயம் அதிகரிக்க, அதிகரிக்க தேக வலிமை குறைந்து வந்தது. வீரம் இழந்ததனல் பல நூறு வியாதிகள் வந்தன. வறுமை, பீதி கோழைத்தனம், சிறுமை மனப் பான்மை எல்லாம் அந்தப் புலிக் கூட்டத்தைப் பிடித்துக் கொண் டன. கிழட்டு ஆட்டின் மந்திர சக்தி, உணர்வு பெற்றிருந்த புலியை யும் உறக்கத்திலாழ்த்திற்று. ஆனல் பாவம் தன்னுணர்விழந்த புலி தான் பண்பாட்டில் உயர்ந்து விட்டதாகக் கருதிக் கொண்டது.

புலி வீறு கொண்டெழுந்த முஸ் லிம்; அவனை வீணன் ஆக்கியது கிரேக்க நாட்டு தத்துவங்கள் என்ற ஆடுகள் என இன்பால் கூறுகிருர். ''தன்னை அழித்து விடு'' என்று போதித்து முஸ்லிம்களை பலவீனர் களாக்கியது கிரேக்க நூற்களும், அவற்றைக் கருத்தில் கொண்டு கவிதை யாத்த முஸ்லிம் புலவர் களும் என்பது இக்பாலின் அசைக்க முடியாத நம்பிக்கை. இந்த அழிவுக் கருத்துக்களை மறுத்து குர்ஆனின் கொள்கைகளை இஸ்லாமிய சமுதா யத்திலே மீண்டும் புகுத்த வேண் டும்; சமுதாயத்தைப் புத்துயிர் பெறச் செய்ய வேண்டும் என்ற அரிய நோக்கோடு தம் கவிதை முழுவதும் பண்ணெழுப்புகிருர் அல்லாமா இக்பால்'

''உன்னை முதலில் உணர்ந்து கொள்; உன் ஆற்றலை அறிந்து கொள்; உலகத்திலே உள்ளவை யெல்லாம் உனக்காக, உன் சேவைக் காகப் படைக்கப்பட்டவை. முழந் தாளைக் கட்டிக் கொண்டு 'நம்மால் ஆவதென்ன' என்ற சோம்பல் வேதாந்தம் பேசுவது சமுதாய அழிவை முரசொலிக்கும் மரணச் செய்தியாகும்'' என்று இஸ்லாமிய சமுதாயத்தை வீறு கொண்டெழச்

தெறித்த முத்துக்கள்

1. தன்னையே தான் புகழ்ந்துகொள்பவன் ஒரு முட்டாள்; தன்னைத் தானே இகழ்ந்து கொள்பவன் ஒரு பைத்தியக்காரன்.

2. பிறர் குறையைக் காண்பவன் அரை மனிதன்; தன் குறையைக் காண்பவன் தான் முழு மனிதன்.

3. துன்பத்தை வெல்ல முடியாதவர்கள் இளமையிலேயே இறந்துவிடுகிருர்கள்.

தொகுப்பு: டி. கே. எம். காதர்

செய்கிறார் வீரத்தைப் போற்றும் மகா கவிஞர்.

" இயற்கையெல்லாம் தன்னுணர்வு பெற்றுக் காட்சிதரவில்லையா? மாமலை தன்னுள் அடங்கியிருக்கும் மகத்தான வலிமை கண்டு —தன் ஆத்மாவைக் கண்டு—அந்த உணர்விலே மூழ்கித் திளைத்து தலை நிமிர்ந்து நிற்கவில்லையா? நீர்ப் பெருக்கெடுத்தோடும் நீள்நதி தன் ஆத்மாவின் பெருமையைப் பாடிக் கொண்டே ஓடுகிறது. மேகம் தன் பெருமையை, தன் வலிமையை இடி முழக்கத்தால் ஒலித்து அண்டம் அதிரச் செய்கிறது. அந்த முழக்கத்திலே அதன் ஆத்ம பலம் பேசுகிறது. ஒளி வீசும் மின்னல் கீற்றும் தன் ஆத்மா எத்துணை பிரகாசமானது என்று ஜொலித்துக் காட்டுகிறது. இவற்றின் ஆத்ம முழக்கம் கேட்டும், மனிதனின் ஆத்மா விழிப்படைய வேண்டாமா?" என்று வேதனைக் குரல் எழுப்புகிறார் கவிஞர்.

"ஏதோ வருவாய் வருகிறது, வாழ்ந்துகொண்டிருக்கிறேன்" என்று நீரில் பிடித்த பாசி போல் வாழ்க்கையைப் பற்றிக்கொண்டிருக்கும் சோம்பல் மனத்தவரைக் கண்டு அல்லாமா இக்பால் வெறுப்படைகிறார். ரோஜாவுக்கு முள் ஒரு போர்க்களம். அந்தப் போர்க்களத்தில் பொருத பின்னரே அந்த மென் மலரின் நறுமணத்தை, மின் அழகைப் பருக முடியும். அதேபோல் வாழ்க்கைக்கு எதிர்ப்பு சக்திகள் ஒரு போர்க்களம். உன்னை முன்னேற ஒட்டாது தடுக்க முயலும் அந்தச் சக்திகளுக்கு அடிபணிந்து, "என்னால் என்ன முடியும்" என்று தோல்வி மனப்பான்மை கொண்டு, இடிந்து, இருந்துவிடாதே. அவற்றை எதிர்த்து நீ போராடு; அப்பொழுதுதான் நல் வாழ்வின் நல்லின்பத்தை நீ ரசிக்க முடியும். ஊர்க் குருவிபோல் மேட்டில் கூடு கட்டாதே. இராஜாளிபோல மலை உச்சிக்குப் போ. அங்கே கூடு கட்டு. இராஜ சிங்கம் ஊர்த் திண்ணையிலா ஒதுங்குகிறது? அபாயத்தின் உறைவிடமாம் அஞ்சத்தகும் ஆரண்யத்தில் அல்லவா அது அரசு செலுத்துகிறது. ஆகவேதான் ஆபத்தைப் பொருட்படுத்தாத சிங்கமும் போற்றப்படுகின்றது.

தம்மிடமுள்ள சக்தி, அதனைப் பற்றிய தன்னுணர்வு ஆகியவை தானே சிங்கத்துக்கும் இராஜாளிக்கும் இத்தகைய பெருமையை அளிக்கின்றன.

மின்னிடும் விண்மீன் கூட்டம்; காதலர் கண்டு நெஞ்சம் களிக்கும் தண்ணிலவு; ஒளிப் பிழம்பாம் செஞ்சூரியன்—இவையெல்லாம் தனித்தன்மை வாய்ந்தவை; இவையெல்லாம் கம்பீரமாக வாழவில்லையா?

தயாராகின்றன!

ஈத் கார்டுகள்

இருவண்ணக் கவருடன்

★ அழகிய வண்ணங்கள்
★ வனப்புமிக்க ஓவியங்கள்
★ பொருத்தமான வாழ்த்துச் செய்திகள்

தயாரிப்போர்:

யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்

155/156, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை.

பின்னர் நீ மட்டும் ஏன் "விதி, விதி" என்று மதி மருண்டு நிற்கிறாய்? விதி உன்னை என்ன செய்யும்? "ஓர் ஆத்மாவுக்கு அது தாங்கும் அல்லாது, (அதிகமாக) அல்லாஹ் சிரமங் கொடுக்க மாட்டான்..." என்று உன்னைப் படைத்த நாயன் உனக்கு உறுதிதரவில்லையா? பிறகு ஏன் விதியைக் கண்டஞ்சுகிறாய்?

"இறைவனைத் தவிர உலகிலே வேறெந்த சக்திக்கும் அடிபணிய மாட்டேன்" என்று நெஞ்சுரம் பெறு: பிறகு விதி உனக்கு அடிமையாகும். உன் ஆத்ம சக்தி மகத்தானது. அதனை உணர்ந்து கொள், நீ ஏற்றம் பெறுவாய்" என்ற அறிவுரைகள் இக்பாலின் கவிதைகள் நெடுகிலும்காணக் கிடக்கின்றன.

உழைப்பு

1. ஒரு மன்னனிடம் கைகட்டி நின்று பிழைப்பதைவிட, அக் கைகளால் மண்ணைக் குழைத்து (தொழில் செய்து) வாழ்வது மேல்.

இமாம் ஷாஃபீ

2. தாள் பணிந்து. முழங்கால் மண்டியிட்டிருக்கும் கனவானைவிட, கால் நிமிர்ந்து நிற்கும் உழவன் மேலானவன்.

பெஞ்சமின் பிராங்லின்

3. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

திருவள்ளுவர்

(மனிதனின் பெருமைக்கும், அவனுடைய சிறுமைக்கும் உரைகல் அவனுடைய உழைப்பும் செயலுமேயாகும்.)

4. உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை
நிந்தனை செய்வோம்.

பாரதி.

5. நெருப்பு அகிற்கட்டையின் வாசனையை வெளிப்படுத்துவதுபோல, உழைப்பு ஒரு மனிதனின் பெருமையை வெளிப்படுத்துகிறது.

எப். அல்பிடிஸ்.

(சமுதாயங்களின் நெறிமுறைகள் எனும் நூலில்)

தன் வலிமையுணர்ந்து, தன்னுணர்வு பெற்று, தன் ஆத்ம பலம் கொண்டு செயல்படும் மனிதனைத் தடுத்து நிறுத்தும் சக்தியே உலகில் கிடையாது என்பதை வலியுறுத்தாத இக்பாலின் கவிதைத் தொகுதியே யில்லை எனலாம். "பாலே ஜிப்ரீலில்" கூறுகிறார்:

"குதீ கூ கர் புலந்த் இத்னா கெ
ஹர் தக்தீர் ஸே பஹ்லே
குதா பந்தே ஸே குத் பூச்சே
பதா தேரீ ரஸா கியா ஹை"

உன் ஆத்ம வலிமையை எந்த அளவுக்கு நீ பலப்படுத்த வேண்டுமென்றால், உனக்கு எதனையும் விதிக்கும் முன்னர் இறைவன் தன் அடியானை உன்னிடம் "உன் விருப்பம் என்ன? சொல் அப்படியே உன் விதியை அமைக்கிறேன்" என்று கேட்கவேண்டும்.

இந்த அளவுக்கு மனிதன் தன் வாழ்க்கையைத் தன் முயற்சியால், தன் உழைப்பால் வகுத்துக்கொள்ள முடியும் என்று இக்பால் உறுதியாக நம்புகிறார்.

"இறையை நம்ப மறுப்பவனை 'காபிர்' என்று முல்லாக்கள் கூறுவர். தன்னை நம்ப மறுப்பவனை— தன்னிடமுள்ள அளவிடற்கரிய சக்திகளை நம்ப மறுப்பவனை—நான் இன்னும் பெரிய காபிர் என்பேன்" என்று பாரசீகக் கவிதையிலே கூறுகிறார்.

வாழ வேண்டும்; மனிதன் பயனுள்ள வாழ்வு வாழவேண்டும்; பவித்திரமான வாழ்வு வாழ வேண்டும்; வீர வாழ்வு வாழவேண்டும் என்று வாழ்வையே புனிதப்படுத்திய புத்துலகக் கவிஞர் இக்பால்,

> "யா ரப்! வாழ்வதும், இருப்பதும் எத்துணை இனிய இன்பம். ஒவ்வொரு அணுவின் இதயமும் எத்துணை உணர்ச்சியோடு, பிரகாசத்தோடு துடிக்கிறது. ரோஜாச் செடியிலே அரும்புவிடும் மொட்டு, புது வாழ்வின் இன்ப உணர்வால் புன்னகையோடு மலர்கிறது"

என்று ரோஜா மொக்குகூட வாழத் துடிக்கிறது எனப் பண்ணிசைக்கிறார் அமர கவி.

மனிதனுக்கு வாழக் கற்றுக் கொடுப்பதற்காக ஆட்டையும் புலியையும் காட்டும் கவிஞர், ஒரு வரட்டு வேதாந்தியாக நின்று விடவில்லை. இஸ்லாமிய வரலாற்றை, நெறி முறையை எடுத்துக்காட்டிக் கொண்டே போகிறார். தத்துவங்களினூடே வீரர்கள் சரிதையினைப் பேசுகிறார். காவிய மகிமையினைக் காட்டுகிறார். குர்ஆனின் பெருமையை விளக்குகிறார். எம்பெருமானார் நாயகம் (ஸல்) அவர்களின் மேன்மையினைச் சிறப்பிக்கிறார்.

இவற்றின் இடையே தம் கவிதைகளில்,மெல்லப் பாடிவரும் நதியோடு உரையாடுகிறார். நெடுங் கரங் கொண்டு நீள் கடலைத் துழாவுவது போல் வரும் கடல் அலைகளைக்கண்டு உறவாடுகிறார். உலகத்தின் ஆக்கத்தையும், அழிவுச் செயலையும் பார்த்துக்கொண்டே நிற்கும் மலைத் தொடரைக் கண்டு மனமகிழும் இசை யெழுப்புகிறார். பூங்கொடிகளைத் தொட்டில் ஆட்டுவதைப் போல ஆட்டிச் செல்லும் காலை இளங்காற்றைக் கண்டு, களிப்புற்றுக் கவிதை பொழிகிறார்.

இவற்றையெல்லாம் கூறிக் கொண்டே மனிதன் உயர்வு பெறுவதற்கான வழியையும் கவிஞர் வகுத்துத் தருகிறார். இயற்கையின் சக்திகள் அனைத்தையும் வென்று, தன்பணிக்கு அவற்றை ஆளாக்கும் ஆற்றல் படைத்த மனிதன் சீருடையவன், சிறப்புடையவன்; அவன் விதியின் விளையாட்டுப் பொருளல்ல என்ற தன் முழு முதல் தத்துவத்தை தம் கவிதை நெடுகிலும் போதித்துக் கொண்டே செல்கிறார்.

இயற்கையின் வனப்பை வர்ணிக்கும் பொழுதும், இல்லறத்தின் மகிமையை விவரிக்கும் பொழுதும், வண்ண மலரை வாழ்த்தும் பொழுதும், தண்ணிலவைப் பாடும் பொழுதும், வாலாற்று ஏடுகளைப் பிரித்துக் காட்டும் பொழுதும், வளமார் இஸ்லாத்தின் தத்துவங்களை விளக்கும் பொழுதும்—ஒவ்வொரு கணமும், மனிதனுக்கு வாழக் கற்றுக்கொடுத்துக்கொண்டே செல்கிறார், உலகம் போற்றும் உத்தமக் கவிஞர்.

இத்தகைய செல்வத்தை, கவிதைச் சிகரத்தை காவியச் சுனையை, இன்னிசை ஊற்றை, இன்பத் தத்துவ ஞானியை, மனித குலத்தை "வாழ வைக்கும் வளமார் கவிஞர்" என்று வர்ணிக்கலாமல்லவா? ★

(சிங்கை 'இக்பால் மலரி'ல் வெளியானது)

நீங்கள் கோவைக்கு வரும் போது மக்கள் உணவு விடுதியை சந்தியுங்கள்.



எம். ஏ. ரஷீத்.

ரங்கூன்.

கே: பிற மத நண்பர் ஒருவர் பொருள் வழங்கி ஒருவரை ஐந்தாவது கடமையான ஹஜ்ஜை நிறைவேற்றும்படிக் கூறுகிருர். அப்படியே அவர் அந்தப் பொருளைக் கொண்டே ஹஜ் செய்தால், அதன் தவாபு யாரைச் சாரும்?

ப: தனக்குப் பொருள் வசதியும், இதர சில சௌகரியங்களும் இருந்தால் தான், ஹஜ்ஜை நிறைவேற்றுவது கடமையாகும். பணம் இல்லாவிட்டால் கடன் வாங்கியாவது போய்த்தான் ஆகவேண்டும் என்ற நியதி கிடையாது.

ஆனுல் ஒரு நண்பர்-பிற மதத்தவராயினும் சரி - நன்னேக்கோடு தம் தோழர் ஹஜ் செய்வதற்காக நன்கொடை தந்தால் அதை மறுப்பது சரியல்ல. நன்கொடை கொடுத்ததற்குரிய பலன் பிறசமயத் தோழரையும், ஹஜ் செய்த பலன் அவர் தம் நண்பராம், "ஹாஜிக்கும்" கிடைக்கும்.

M. E. முஹம்மது நூருத்தீன்.

திட்டச்சேரி.

கே: குர்ஆன் ஷரீபில் பல இடங்களில் அல்லாஹுத் தஆலா தான் சிருஷ்டித்த கடல் மீதும், நட்சத்திரத்தின் மீதும் வேறு பலமீதும் சத்தியம் செய்து அவன் வார்த்தையை உறுதிப் படுத்துகிருன். பரம்பொருளான அந்த துய்யோன் ஒருவன் உண்டு என்று நம்பும் நமக்கு ஏன் அவை மீது பிரமாணிக்கம் செய்து சொல்ல வேண்டும்?

ப: ஆண்டவனின் பேராற்றலை அறிந்து, "தனக்குவமை இல்லாதானின்" மாபெரும் சிறப்பை உணர்ந்து அவனுக்கு வழிபடுபவர்களுக்கும்; அவனுடைய அளவிடற்கரிய சக்தி நம்மைச் சுற்றியுள்ள மண், விண், இதர படைப்புக்கள் மூலம் தெளிவாக இருந்தும், அவற்றைப் பற்றிச் சிந்தித்து அவன் பெருமையை அறிந்து கொள்ளாது பராமுகமாக இருப்போருக்கும்; வீண் ஐயப்பாடுகளை மனவீட்டில் குடியேற்றி, சதா சந்தேகத்திலே உழன்று கொண்டு திடமான இறை நம்பிக்கை இல்லாதிருப்போர்க்கும்; இறை உணர்வேயின்றி அலட்சியமாக இருப்போருக்கும்; நெருநல் உளனொருவன் இன்றில்லை,— "நேற்று இருந்தான், இன்று அவன் இல்லை, ஐயோ இறந்துவிட்டானே," என்னும் அளவுக்கு வாழ்வு நிலையில்லாதிருந்தும் அதையே சதமென்றெண்ணி அகங்காரத்தோடு ஆண்டவனே இல்லை என்று கூறுவோர்க்கும் அறிவூற்ருக, நூலாக, அன்புப் பெருக்காக, அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் திரு வேதமாக குர்ஆன் ஷரீப் அருளப்பட்டது. அதில் தன் படைப்புகளை 'சத்தியப்படுத்தி,'

ஆண்டவன் பல பேருண்மைகளைக் கூறுகிறான்.

'சத்தியம் என்பதற்கு இங்கு உறுதிப் படுத்துதல் என்று பொருள். நாம் மேலே குறித்துள்ளபடி பலதரப்பட்ட மனப்பான்மையுள்ள மக்களுக்கு தன் பேருண்மைகளை இறைவன் எடுத்துரைக்கிறான். இம்மக்கள் வேறுபட்ட மனப்பான்மை உடையோராயிருப்பினும் கடல், மலை, நட்சத்திரம், சூரியன், சந்திரன் போன்றவற்றை கண்கூடாகக் காண்கிறார்கள்: நம்புகிறார்கள். இவை யாவும் ஆண்டவனின் படைப்புக்களே; ஆகவே தன் படைப்புக்களில் பிரத்தியட்சமாக அவர்கள் கண்களுக்குப் புலப்படும் பொருள்களைக் கொண்டாவது, கண்ணால் காணமுடியாத பேருண்மைகளை பகுத்தறிவுடையோர் சிந்திக்க வேண்டாமா என்று தன் கூற்றை ஆழ்கடலின் பெயராலும்; நீள் மலையின் பெயராலும் விண் மதியின் பெயராலும், செஞ்சுடரின் பெயராலும் இறையோன் உறுதிப் படுத்துகிறான்.

ஆனால் மெய்யறிவுடையோர்கள் தம் கண்ணால் காணமுடியாதவற்றையும் பற்றி சிந்தித்துப் பார்க்கும் திறமுடையோர். மனிதக் குதிரையை வாழ்வுப் பாதையில் விரட்டியடிக்கும் சாட்டை "காலம்;" இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இளமை முறுக்கு மாறாமல், உடல் வலிமை குன்றாமல் ஓடியாடி வேலை செய்தவன் இன்று கோலூன்றி நடக்கிறான்; முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் அனைத்துலகத்தையும் "ஆட்டிப் படைக்கும்" ஆற்றல் படைத்த பிரிட்டனை இன்று இதர வல்லரசுகள் ஓட ஓட விரட்டுகின்றன. இது தான் "காலம்" செய்யும் விந்தை. ஆகவே தான் காலத்தைப் பற்றி ஆய்ந்து பார்க்கும் ஆற்றலுள்ள மெய்யறிவாளர்களுக்கு, "வல் அஸ்ரி" என்று—காலத்தின் பெயரால்—தன் போதனைகளை உறுதிப் படுத்துகிறான். [103-ம் ஸீரா].

எஸ். குத்தூஸ்,

தூத்துக்குடி.

கே: நாம் பள்ளிவாசலுக்கு ஆண்டவனிடம் அன்பைப் பெறத்தானே போகிறோம். அதற்கு பதில் மனதிலே ஆண்டவனை நினைத்து அவன் அன்பைப் பெறலாமா?

ப: தொழுகை இறைவனுக்கு அடி பணிந்து, வணங்குவதாகும்; நம்மைப் படைத்துக் காத்து இரட்சிக்கும் இறையோனுக்கு நாம் செலுத்தும் நன்றி அது. நமக்கு உள்ளமும், உடலும் தரப்பட்டிருக்கிறது. உள்ளத்தால் இறைவனின் அருட்கொடைகளை நினைந்து நன்றி செலுத்துகிறோம். உடலால் தொழுது, வணங்கி அவனுக்கு அடி பணிகிறோம். ஆகவே உள்ளத்தால் மட்டும் வணக்கம் செலுத்துவது நிறைவுடைய வணக்கமாகாது; அதனால் தான் உடலும், உள்ளமும் சேர்ந்தும் நிறைவேற்றும் வணக்கமாக தொழுகை இஸ்லாத்தின் முக்கியமான ஒரு கடமையென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இத்தொழுகையை வீட்டிலும் நிறைவேற்றலாம்; பள்ளியிலும் நிறைவேற்றலாம். "பரந்த இவ்வுலகெலாம் பள்ளியாகும்," என்று எம்

கேள்வி - பதில்

பிப்ரவரி 1958

முதற் பரிசு :

எச். எம். மொய்தீன்
அப்துல் காதிர்
9/18, வடக்குத் தெரு
திட்டச்சேரி (தஞ்சைமாவட்டம்)

இரண்டாம் பரிசு :

அ. அ. மஹ்மூது
356, மெயின் வீதி
மாத்தளை, இலங்கை.

பெருமானார் இயம்பியிருக்கிறார்கள். ஆகவே வீட்டிலோ, தனியிடங்களிலோ தொழுவதற்கு அனுமதியிருக்கின்றது. ஆனால் பள்ளியில் தொழுவது சிறப்புடையது. பள்ளித் தொழுகை எத்துணைச் சிறப்புடையது என்பதை நவம்பர், "பிறை" யில் ஜனாப் மு. ஆதம் என்னும் அன்பரின் கேள்விக்கு பதிலளிக்கையில் விளக்கியிருக்கிறோம்.

கடன்

நீங்கள் கடன் வாங்குகிறீர்கள் என்றால் உங்கள் சுதந்திரத்தின்மீது, இன்னொரு சக்திக்கு ஆதிக்கம் கொடுத்துவிட்டீர்கள் என்றுதான் பொருள்.

பணத்தின் மதிப்பு உங்களுக்குத் தெரிய வேண்டுமென்றால், எங்காவது போய்க் கொஞ்சம் கடன் கேட்டுப் பாருங்கள்.

குறிப்பிட்ட தவணையில் நீ பட்ட கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லையென்றால்... கடன் கொடுத்தவனைக் காணவே அஞ்சுகிறாய்; அவன் எதிரே உன் தைரியத்தையும் கூட இழந்துவிடுகிறாய்; கடைசியில் அவனிடமிருந்து தப்புவதற்காகத் துணிந்து பொய் கூறவும் முற்படுகிறாய்...ஆக பொய் சொல்வது இரண்டாவது தீமை; கடன் வாங்குவதுதான் முதல் தீமை.

பெஞ்சமின் பிராங்லின்

எம். எச். ஏ. ஹலீம்

ஏறாவூர் (இலங்கை)

கே: முஹம்மது நபி (ஸல்) அவர்கள், "நான் குர்பான் செய்யப்பட்ட இருவரின் புதல்வனாக இருக்கிறேன்" என்று ஏன் கூறினார்கள்?

ப: இறை தோழர் இப்ராஹீம் நபியவர்களின் திருமகனார் இஸ்மாயீல் (அலை) அவர்களை "தபீஹுல்லாஹ்"—அல்லாஹ்வுக்கு குர்பானீயானவர்கள் என்று சொல்லப்படுவதுண்டு. இப்ராஹீம் நபி, தம் செல்வர் இஸ்மாயீலை இறைவன் பாதையில் குர்பான் செய்யக் கட்டளையிடப்பட்டதும், குர்பானீ நிறைவேறும் முன்னர் இறையவனே அதை நிறுத்தியதும் நாம் அறிந்துள்ள நிகழ்ச்சிகள். ஹலரத் இஸ்மாயீல் (அலை) அவர்களின் சந்ததியில் வந்தவர்கள் எம்பெருமானார் முஹம்மது நபி (ஸல்) அவர்கள். பெருமானாரின் தந்தையார் அப்துல்லாஹ்வும் குர்பான் கொடுக்கப்பட இருந்தார்கள்; ஆனால் அவர்களுக்குப் பதிலாக நூறு ஒட்டகைகளை குர்பானீ செய்வது என்று இந்த "வைபவத்திற்கு" வந்தவர்கள் திருவுளச்சீட்டு மூலம் முடிவு கட்டினார்கள். ஹலரத் அப்துல்லாஹ் அவர்களின் குர்பானீயும் இவ்வாறு தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

ஆகவேதான் ஹலரத் இஸ்மாயீல் (அலை) அவர்களின் வழித்தோன்றலும், ஹலரத் அப்துல்லாஹ்வின் செல்வரும் "அண்டங்களனைத்துக்கும் அருட் கொடை"யுமான எம்பெருமானார், "குர்பான் செய்யப்பட்ட "இருவரின்" புத்திரர் என்று தங்களைக் குறிப்பிட்டார்கள்.

அ. அ. மஹ்மூது

மாத்தளை, இலங்கை

கே: முஸ்லிம் அல்லாத நண்பர்களின் வீட்டில் அன்பாகக் கொடுக்கும் தேனீரை அவர்கள் தரும் கிளாசிலேயே குடிக்கலாமா? மார்க்கம் அனுமதிக்கிறதா?

ப: துப்புரவோடு அவர்கள் தரும் தேனீரை தாராளமாகச் சாப்பிட

லாம். மறுப்பது பண்பாகாது. அவர்கள் தரும் ஏனத்திலும் குடிப்பதில் தவறில்லை: ஆனால் 'தங்க,வெள்ளியினால் செய்த பாத்திரங்களில் உணவருந்தாதீர்கள்; குடிக்காதீர்கள்,'' என்று நாயகத் திருமேனி நவின்றிருப்பதால், இதில் பேணுதலாக இருந்து கொள்ளவேண்டும்.

கே: தன் கணவன் அடித்ததையோ அல்லது தாங்கள் பட்டினி கிடந்ததையோ, தனக்கும் தன் கணவனுக்குமிடையில் நடந்த பேச்சுகளையோ மற்றவர்களிடம் (தன் பெற்றோர்களிடமும் கூட) ஒரு மனைவி கூறுவது சரியா?

ப: கணவன் மனைவிக்கிடையே உள்ள இரகசியங்களை அவர்கள் பிறரிடம் பேசக் கூடாது என்று கருணை நபி மொழிந்துள்ளார்கள். இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் இருவருக்குமிடையே எப்பொழுதாவது மனத்தாங்கல் ஏற்படத்தானே செய்யும். அதையெல்லாம் பிறருக்குத் தெரியப்படுத்தினால் அவர்கள் கணவனையோ, மனவியையோ ஆதரித்துப் பேசுவார்கள். இதனால் இருவருக்குமிடையே மீண்டும் சுமுகமான உறவு ஏற்படுவது தாமதமாகலாம்; சில சமயம் மனத்தாங்கல் முற்றி, மனக் கசப்பாக மாறி, மண வாழ்வையே அது பாதித்துவிடும். பிறர் தலையீடில்லாமல் இருந்தால், இரண்டு மூன்று நாட்களிலேயே அவர்களுடைய மனவேற்றுமை மறைந்து மீண்டும் அன்புறவு தழைக்க வழியுண்டாகும்.

தம்பதிக்கிடையே மனத்தாங்கல் முளைத்து, அது பெற்றோருக்குத் தெரிந்தால், பாசம் மிகுந்த அவர்கள் அவரவர் மக்களின் கட்சியை பலமாக ஆதரித்துப் பேசிவிடுவதும் உண்டு. இதனாலும் நிலைமை சீர்கேடடைய ஏதுவாகும்.

ஆனால் கணவன் மனைவிக்கிடையேயுள்ள பிணக்கைப் பற்றி மனைவி தான் பேசக் கூடாது என்று கேள்வி அமைந்திருப்பதால், கணவன் அது பற்றிப் பேச உரிமை உண்டு என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. இதற்குச் சான்றாக இஸ்லாமிய நூற்களில் வரும் ஓர் அருமையான நிகழ்ச்சியைக் கூறலாம்.

அறிவுக் களஞ்சியம் இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்களின் அன்பு மாணவரும், அருமைத் தோழருமான இமாம் அபூ யூஸுப் (ரஹ்) அவர்கள் முன்னர் ஒரு வழக்கு கொணரப்பட்டது. இமாம் அவர்களிடம் ஒரு முஸ்லிம் வந்து தமக்கும் தம் மனைவிக்கும் இடையே கடுமையான பிணக்கு ஏற்பட்டுவிட்டதாகவும், தாங்கள் இனி ஒன்றி வாழ முடியாதென்றும், ஆகவே தங்களுக்கு விவாக ரத்து வேண்டுமென்றும் கூறி நின்றார்.

தம்பதிக்கிடையே பிணக்கு உண்டாவதற்குக் காரணம் என்ன என்று வினவினார்கள் இமாம் யூஸுப்(ரஹ்).

"யா அபா யூஸுப்! எங்களிருவருக்குமிடையே நடந்தவை யெல்லாம் இரகசியமானவை. கணவன் மனைவிக்கிடையே உள்ள இரகசியங்களை வெளிப்படுத்தக்கூடாது என்று ரஸூலுல்லாஹ் (ஸல்) மொழிந்திருக்கிறார்கள். நான் இன்னும் விவாக ரத்துப் பெறவில்லை. ஆகவே அவள் இப்பொழுதும் என் மனைவி தான். எனவே எங்களுக்குள்ள இரகசியத்தை நான் எப்படி வெளியாக்குவேன்,'' என்று அம்மனிதர் சாமர்த்தியமாகக் கூறியதைச் செவிமடுத்த இமாம் அவர்கள் அவரை மேலும் வற்புறுத்தவில்லை.

ஆனால் பிணக்கு என்ன தான் இருந்திருக்கும் என்று அறிய ஆவல் கொண்ட இமாம் அபூ யூஸுப், அம்மனிதரின் விவாகரத்து உறுதிப்படுத்தப்பட்டதும் மீண்டும் அவர்களுக்கிடையே ஏற்பட்ட பிணக்கைப்பற்றி விளவினார்கள்.

"யா அபா யூஸுப்! என்னிடமிருந்து 'தலாக்' பெற்று பிரிந்துவிட்ட அம்மாது இப்பொழுது என் மனைவியல்ல; அவள் இன்று ஓர்

அன்னியப் பெண். எங்களுடைய பிணக்கைப் பற்றிப் பேசினால், அது ஓர் அன்னியப் பெண்ணைப் பற்றிக் குறை கூறுவதாகும். அது புறங்கூறலுக்கு ஒப்பாகும். இதை ஆண்டவன் விலக்கியிருக்கிறானே; ஆகவே, ஓர் அன்னியப் பெண்ணைப் பற்றி நான் எவ்வாறு பேசமுடியும்?'' என்று அம் மனிதர் மறுதளித்து விட்டார்.

எனவே கணவனோ மனைவியோ தம்மிடையேயுள்ள இரகசியங்களை வெளிக்கூறுதல் முறையாகாது. ஆனால் கணவனால் கொடுமைக்கோ, அநீதத்துக்கோ ஆளாக்கப்படும் மனைவி, அதை வெளியில் கூறி, பரிகாரம் தேட உரிமை பெற்றிருக்கிறாள்.

"எம். ஏ."

எச்.எம்.மொய்தீன் அப்துல்காதர்
திட்டச்சேரி

கே: இஸ்லாத்தின் சட்ட திட்டங்களைச் சரியாக புரிந்து கொள்ளாமல் முற்போக்கு வாதிகள் என மார்தட்டிப் பேசும் சில இளைஞர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிட்டினால் அவர்களிடம் எப்படி நடந்து கொள்வது?

ப: நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். அமைதியாக, நிதானமாக அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டும். மார்தட்டிப் பேசும் அவர்களிடத்திலே, நாமும் சவால் விடுத்து நம் வாதத்திறமையை நிலைநாட்ட வேண்டியதில்லை. பண்போடு, பணிவன்போடு நம் கருத்தை எடுத்துச் சொல்வதே நம் ஆற்றலுக்கு ஓர் அரிய சான்றாகும்.

"ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அது சான்றோர்
மாற்றாரை மாற்றும் படை''

ஆற்றலுடையவரின் ஆற்றலாவது பணிவுடன் நடத்தலாகும். அதுவே சான்றோர் தம் பகைவரை பகைமையிலிருந்தே மாற்றுகின்ற கருவியாகவும் அமையும் என்று குறள் குறிப்பிடுகிறது.

நபிகள் பெருமானார் தம் தூய பணியைத் துவங்கும்போது, அவர்களின் போதனைகளைப் புரியாமலோ, புரிந்துகொள்ள மறுத்தோ எத்தனை பேர் "மார் தட்டிப் பேசி," அவர்களை எதிர்த்தனர். இனிய மொழி பேசி, இன்முகங் காட்டி அத்தகையோரையெல்லாம் பெருமானார் தங்கள் திருவழிக்குக் கொண்டுவர வில்லையா?

மேலும் இறையவன் தன்னுடைய தூய திருமறையிலே நாயகம் (ஸல்) அவர்களுக்கு போதிக்கிறான்;

"இத்திருமறையைக் கொண்டும், மிருதுவான அழகான நல்லுபதேசத்தைக் கொண்டும் (மனிதர்களை) உம் இறைவனின் பாதைக்கு அழைப்பீராக! அவர்களுடன் (வாதஞ் செய்ய வேண்டி வந்தால்) அழகான முறையில் வாதிப்பீராக! உம் இறைவனின் பாதையிலிருந்து தவறியவர்கள் யாவர் என்பதை நிச்சயமாக அவன்தான் அறிவான். நேரான பாதையில் இருப்போரைப் பற்றியும் அவன்தான் நன்கறிவான். [ஸூரத்துந் நஹ்ல் : 125]

அழகான முறையிலே வாதஞ் செய்ய வேண்டும் என்று திருமறை கட்டளையிடும்போது நாம் மாறாக நடந்து கொள்ள முடியுமா?

ஆனால் வீணாக விவாதம் செய்து கொண்டிருப்பவர்களிடத்திலே நம் அரிய நேரத்தை விரயம் செய்வது சரியல்ல. அவர்களிடத்தில் மட்டும்; "நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிந்தவனாக இருக்கிறான்''.....(22 : 68) என்று கூறி ஒதுங்கிக் கொள்ள வேண்டியதுதான்.

178313
சென்னை-600 008

Edited and Published by A. M. Meeran 192, Angappa Naick Street, Madras-1.
Printed by P. S. Venugopalasamy Naidu, at Vinodan Press, 33, Jones St.,
Madras-1 TAMIL NAD.

சந்தா விவரம்

உள் நாடு (இலங்கை உள்பட)		வெளி நாடு	
1 வருடம்	ரூ. 4·75	1 வருடம்	ரூ. 6·00
2 வருடம்	ரூ. 8·75	2 வருடம்	ரூ. 11·00
5 வருடம்	ரூ. 20·00	5 வருடம்	ரூ. 25·00
தனிப் பிரதி	40 ந. பை.	தனிப் பிரதி	50 ந. பை.

ஒரு வருடத்துக்கும் அதற்கு மேற்பட்டுமுள்ள சந்தாதாரர்களுக்கு ஈத், மீலாத் போன்ற விசேஷ மலர்கள் சாதாரண இதழ்களின் விலைக்கே அனுப்பப்படும். இலங்கைக்கு மட்டும் சந்தா வி. பி. அனுப்பப்படும்.

விவரங்களுக்கு : நிர்வாகி, 'பிறை'
192, அங்கப்ப நாயக்கன் தெரு,
(தபால் பெட்டி எண் 1688)
சென்னை-1.



வெளிவந்துவிட்டது!

"மஹதி" எழுதிய

இமயத்தின் சிரிப்பு

- புதிய சமூக வரலாற்றுக் கதைகள் அடங்கிய நூல்
- அழகிய பதிப்பு
- மூவர்ண அட்டை

-விலை ரூபாய் இரண்டு-

விற்பனை ஏஜண்டுகள் தேவை

சாந்தி மன்றம்
நூல் வெளியீட்டகம்
கீழச் சந்தைப் பேட்டை,
மதுரை.

ஆசிரியரின்றி தமிழ்மூலம் ஆங்கிலம் பயில விரும்புவோருக்கு மாபெருந்துணைவன். பாடங்களுடன் பல படங்களும், அநுபந்தங்களும் கூடியது.

340 பக்கங்கள்

ரூ. 3.00 ; தபால் மூலம் ரூ. 4.00

“...மனித உடல் என்ற எந்திரத்தின்மூலம் நிகழும் விந்தைகளையெல்லாம் சாதாரண மக்கள்கூட இலகுவில் தெரிந்துகொள்ளும் வகையில் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது...”

— “ஈழகேசரி”, இலங்கை.

100 பக்கங்கள்

ரூ. 1.25 ; தபால் மூலம் ரூ. 2.00

தமிழில் எல்லா வகையான கடிதங்களும், ‘பாண்டு’, பத்திரங்களின் மாதிரிகளும் அடங்கிய அறிவுக் களஞ்சியம். இரண்டாம் பதிப்பு.

224 பக்கங்கள்

ரூ. 2.00 ; தபால் மூலம் ரூ. 2.87

லிப்கோ தமிழ் நாவல்கள்

படிக்கப் படிக்கப் பரவசமூட்டும் சுவையான துப்பறியும் நவீனங்கள்

ஏ. எம். மீரான் எழுதியவை

1.	அபாயச் சீட்டு	ரூ. 1.00
2.	இரண்டே நாள்	ரூ. 1.00
3.	இருளிலே ஓர் உருவம் !	ரூ. 1.00
4.	பழி தீர்ந்தது !	ரூ. 1.00
5.	குயில் பூங்கா மர்மம்	ரூ. 1.50

ஆர். எஸ். மணி எழுதியவை

1.	அந்தக் குரல்	ரூ. 1.00
2.	சின்னமலைச் சாமியார்	ரூ. 1.25
3.	கடைசிக் கடிதம்	ரூ. 1.00
4.	காதில் விழுந்தது !	ரூ. 1.00
5.	ஹலோ, போலீஸ் ஸ்டேஷனா ?	ரூ. 1.00
6.	கதவைத் தட்டிய கை	ரூ. 1.00
7.	மறையும் மாயாவி	ரூ. 1.00

மேற்படி லிப்கோ புத்தகங்கள் கிடைக்குமிடங்கள் :

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை-17 ; எம். தாமோதரம் & கம்பெனி, அப்பா பில்டிங்ஸ், சென்னை-1 ; ஹிக்கின்பாதம்ஸ் (பிரைவேட்) லிமிடெட், மவுண்ட் ரோடு, சென்னை-2 ; ரெயில்வே ஸ்டால்கள், ஸ்டார் புக் டிஸ்ட்ரிபியூடர்ஸ், 13, நரசிங்கபுரம் தெரு, சென்னை-2.

✲ லிப்கோ நடமாடும் புத்தக “வான்” களிலும் கிடைக்கும்.

Wrapper Printed at The Laurel Press, Madras-1.